
# கனகு



சோ. ராமேஸ்வரன்



# கனாகு

# ஆசிரியரின் பிற நூல்கள்

**நாவல்**

| | |
|---|---|
| ✍ யோகராணி கொழும்புக்கு போகிறாள் | 1992 |
| ✍ இவர்களும் வாழ்கிறார்கள் | 1993 |
| ✍ இலட்சியப் பயணம் | 1994 |
| ✍ அக்கரைக்கு இக்கரைப் பச்சை | 1995 |
| ✍ மௌன ஓலங்கள் | 1995 |
| ✍ வடக்கும் தெற்கும் | 1996 |
| ✍ இன்றல்ல, நாளையே கலியாணம் | 1996 |
| ✍ சத்தியங்கள் சமாதிகளாவதில்லை | 1996 |
| ✍ இந்த நாடகம் அந்த மேடையில்.... | 1997 |
| ✍ உதுர சஹ தகுண (சிங்களம்) | 1998 |
| ✍ சிவபுரத்து சைவர்கள் | 1998 |
| ✍ நிலாக்கால இருள் | 2000 |
| ✍ சிவபுரத்து கனவுகள் | 2000 |

**குறு நாவல்**

| | |
|---|---|
| ✍ நிழல் | 1998 |

**சிறுகதைத் தொகுப்பு**

| | |
|---|---|
| ✍ சுதந்திரக் காற்று | 1994 |
| ✍ பஞ்சம் | 1995 |
| ✍ நிதாஸே வா ரலி (சிங்களம்) | 1996 |
| ✍ AIR OF FREEDOM | 1996 |
| ✍ புண்ணிய பூமி | 1997 |
| ✍ புண்ய பூமி (சிங்களம்) | 1998 |
| ✍ புதிய வீட்டில் | 2000 |
| ✍ போராட்டம் | 2001 |

**சிறுவர் இலக்கியம்**

| | |
|---|---|
| ✍ படித்து மகிழ பயன்மிகு பத்துக் கதைகள் | 1997 |
| ✍ திசை மாறிய பாதைகள் (நவீனம்) | 1998 |
| ✍ சதியை வென்ற சாதுரியம் | 2001 |
| ✍ அந்த அழகான பூனை | 2002 |

**ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு**

| | |
|---|---|
| ✍ துயரத்தில் வருந்துவது ஏன்? | 1999 |
| ✍ ஆரோக்கியமான கண்கள்- செயற்பாட்டு நூல் | 2001 |
| ✍ தேகாரோக்கியத்திலும், நோயிலும் விற்றமின் A பற்றிய SIGHT AND LIFE வழிகாட்டி நூல் | 2002 |

# கனகு

## (நாவல்)

### சோ. ராமேஸ்வரன்

# *Kanagu*

## (Novel)

### By S. Rameswaran

வெளியீடு:
**எஸ்.கொடகே சஹ சகோதரயோ**
அரச விருது பெற்ற நூல் வெளியீட்டாளர்
675, மருதானை வீதி, கொழும்பு 10
தொலைபேசி: 685369/ 074-614904

கனகு

(நாவல்)

முதலாவது பதிப்பு 2003

© சோ. ராமேஸ்வரன்

ISBN No. 955-20-6195-4

**முன் அட்டை:**
பிரியங்கர ரத்னாயக்க

**Cover:**
Priyankara Ratnayake

**அச்சுப் பதிவு:**
சதுர அச்சகம்
142, அவிசாவளை வீதி
வெல்லம்பிட்டிய

## ஆசிரியர் உரை

நமது வாழ்நாளில் பல வகையான மனிதர்களை நாம் சந்திக்கிறோம்; பேசுகிறோம்; பழகுகிறோம். அவர்களுடன் சேர்ந்து வாழ்ந்துமுள்ளோம். ஆனாலும், எந்த ஒருவரினதும் மனக்கிடக்கைகளை எவராலும் முழுவதுமாக அறிந்து கொள்ள முடிவதில்லை. சிலர் திறந்த மனதுடனும், சிலர் மூடி மறைத்தும் தமது எண்ணங்களை வெளிக்கொண்டு வருகின்றார்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் ஆசைகள், ஆசாபாசங்கள், மனிதாபிமானம் போன்ற உணர்ச்சிகள் நிறையவே இருக்கின்றன. இவை மனித விழுமிய இயல்புகள். இவையற்றவர்கள் மனிதர்கள் என்று கூறப்படுவது ஏற்க முடியாததொன்றே. இவ்வியல்புகளை எத்தகைய துன்ப வேளையிலும் சமுதாய வரையறைக்குள் மீறாது, வாழ்க்கை என்ற கடலில் நீந்திச் செல்பவனே உண்மையான மனிதன். இவ்வாறான வைராக்கியம் நிறைந்த தூய உள்ளங்களின் புனிதமான பாதை தான் "கனகு" என்னும் இந் நாவலின் அடித்தளம். இந்நாவலில் முக்கிய பாத்திரங்கள் கனகசபை, மங்களம், யோகமலர், உபாலி.

இந்நாவலை வாசிக்கும் போது வாசகர்களின் மனதில் பல கேள்விக் கோடுகள் ஊடறுக்கலாம். ஆனால், ஒரு மனிதனின் உணர்வுகள் தூங்குவதில்லை என்பதை கனகசபையின் கதாபாத்திரம் மூலம் இங்கு வெளிக்காட்டப்பட்டுள்ளது. அழகான பூவைப் பார்த்து அழகானது என சொல்லுவதுதான் இயல்பு. அதனைப் பறித்து துவம்சம் செய்வது அழகல்ல. அதைக் காணும் போது கண்கள் எவ்வாறு உணர்ச்சியூட்டப்பட்டனவோ, அவ்வாறே கனகசபையின் மனமும் உணர்ச்சியூட்டப்பட்டு, அவை மீறாத வகையில் அவனாலேயே கட்டுப்படுத்தப்படுகிறது. எப்போது மனம் சஞ்சலப்படுகின்றதோ அப்போதே மனச்சாட்சி என்கின்ற திரை அதனை மூடிப் போர்த்திக் காப்பாற்றிக் கொள்கிறது. இவ்வாறாக யோகமலரும் மனிதம் கொண்டவளாகவும், மனதில் சிறிதளவாவது ஈரம் கொண்டவளாகவும் தன்னை வெளிப்படுத்தியுள்ளாள். மங்களம் மறக்க முடியாதவளாகவும், வாழ்க்கைக் கடலில் நீந்தும் சக்தி கொண்டவளாகவும், கனகசபையின் மனத்திரையின் பாகமாகவும் காணப்படுகின்றாள். இவ்வாறாக மனிதத்தை மரணிக்காத தூய

உள்ளங்களை இந்நாவல் மூலம் வெளிப்படுத்தியுள்ளேன்.

எதையும் ஒழிவு மறைவின்றி தனது மனச்சாட்சியுடன் பேசுகின்ற ஓர் உண்மையான உள்ளம் கொண்ட மனிதனாக கனகசபையின் பாத்திரம் அமைகின்றது. வாழக்கையில் பலருக்கு இவ்வாறான அனுபவம் வந்திருக்கலாம்; வரலாம். ஆனால், அந்த நேரத்தில் எல்லோரும் கனகசபை போல் இருப்பார்களேயானால், அவர்கள் உண்மையில் முழுமனிதம் கொண்டவர்களாக வாழ்க்கைக் கடலை கடக்கலாம் என்ற சிறிய உண்மையை வாசகர்களுக்கு எடுத்துக் கூறியுள்ளேன்.

எந்த ஒரு மனிதனையும் சூழல் நன்றாகவே ஆக்கிரமிக்கின்றது. இது நமது நாட்டில் மிகவும் உச்சமானது. எதற்கும் சளைக்காமல் தன்நிலைமை தவறாமல் இசைந்து போகும் மனம் படைத்தவர்கள் தான் "மனிதம்" உள்ளவர்களாகக் கருதப்படுகின்றார்கள். இவ்வாறாக கனகசபையும், யோகமலரும், மங்களமும் மனிதம் கொண்டவர்களாகவே இந்நாவலில் சித்தரித்துள்ளேன்.

"உணர்வுகள் எழுவது இயல்பு. உணர்வை மீறாது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது உன்னதமானது" என்பதனை வாசகர்கள் இந்நாவலில் இருந்து உள்வாங்கிக் கொள்வார்களா?

தமிழில் இருந்து சிங்களத்திற்கு மொழிபெயர்க்கப்பட்ட எனது மூன்று நூல்களை எவ்வித சிபார்சுமின்றி வெளியிட்ட திரு.சிறிசேன கொடகே தமிழ் வெளியீட்டுத் துறையிலும் கால் பதிக்கவுள்ளார். அந்த வரிசையில் இதை அவர் வெளியிடுவதற்கு முன்வந்ததையிட்டு நான் அவருக்கு எனது பாராட்டையும், நன்றியையும் தெரிவிக்கின்றேன்.

வழமை போல் கணனியில் பொறித்துத்தந்த எனது மனைவிக்கு எனது நன்றிகள்.

**சோ. ராமேஸ்வரன்**

**E 2/4 அன்டர்சன் தொடர் மாடி**
**கொழும்பு 05**

# (1)

நுளம்புக் கூட்டம் ஒன்று அளவுக்கு மீறி 'கிணு கிணு'த்தது. தன்னை மறந்த நிலையில் உறங்கிக்கொண்டிருந்த கனகசபை திடுக்கிட்டு கண் விழித்தான். எரிச்சல், கோபம், வெறுப்பு ஆகிய உணர்ச்சிகள் அவனைத் தழுவின. ஆனால், சகல உணர்ச்சிகளையும் அடக்கியபடி, கண்களை மூடி உறக்கத்திற்கு அடிமையாக முற்பட, மீண்டும் 'கிணு கிணு'.....

கனகசபை பொறுமையை இழந்தான். இரு காதுகளின் பக்கமும் தலையணையில் இரு கைகளாலும் மாறிமாறி அடித்தான். ஆனால், நுளம்புக் கூட்டம் கனகசபையின் தாக்குதலுக்கு ஆளாகாமல், எதிர்த்தாக்குதலை நிகழ்த்துவதற்கு முன்னோடியாக 'கிணு கிணுப்பை' தொடர்ந்தபடி சுற்றிச் சுற்றி வர.......

திடுதிப்பென - கன்னத்தில் ஓங்கி அறைந்தாற் போன்று கனகசபை படுத்திருந்த பலகை மறைப்புடன் ஒட்டினாற் போல், மறுபுறத்தில் கிடந்த 'ரேடியோ'வில் இருந்து ஹிந்திப் பாடலொன்று அலறியது. சகிக்க முடியாத ஒரு பழைய பாடல் அது.

அந்தப் பாடலின் நாராச ஒலியை அப்படியே அமுக்குவது போல, முன்னாலிருந்த வீட்டின் பக்கமாக ஓர் ஆணும், பெண்ணும் வாக்குவாதப்படும் சத்தம் உச்சஸ்தொனியில் கேட்டது. அவர்களின் வாக்குவாதத்தை உற்றுக் கேட்ட போது, இருவரும் கணவனும், மனைவியும் என்று தெரிந்தது. வாக்குவாதம் உச்சக் கட்டத்தை அடைந்த போது மனைவியைக் கணவன் தாக்கி இருக்க வேண்டும். அவள், "'அம்மே, மகே அம்மே'" என்று குழறினாள். அதன் பின் அவள் தூஷண வார்த்தைகளைத் தாராளமாகப் பாவித்து அவனை ஏசினாள். அவனிடம் இருந்து எவ்வித பதிலும் வராததினால்,

அவன் அங்கிருந்து அகன்றுவிட்டான் என கனகசபைக்குப் புரிந்தது.

ஊரில், இரு பிள்ளைகளுடன் விட்டு வந்த மனைவி மங்களத்தின் முகம் ஒரு கணம் கனகசபையின் மனதை மேய்ந்து விட்டு மறைந்தது. கனகசபை அவளுடன் வாக்குவாதப் பட்டிருக்கிறான். ஆனால், இப்படி இல்லை. இது அநாகரிகத்தின் சாயல்.......

மங்களம் மனதைக் கெட்டியாக பிடிக்க முயல....... ஊகும்! அந்நேரத்தில் அவள் நினைவை மனதுக்குள் புகுத்தி, மனதை ஈரம் படிய அவன் விரும்பவில்லை. 'மங்களம்......' அவன் பெருமூச்செறிய...... கண்களில் ஓர் கலக்கம்......

மங்களத்தை மனதில் இருந்து களைந்து விட்டு நித்திரையைத் தொடர முற்பட்டான். தூக்கம் கண்களைத் தழுவ முயன்ற போது, முன்புற தகரக் கதவில் 'யாரோ' தட்டினார்கள். யாராக இருக்கும்? 'பொலிஸ'? அந்த எண்ணம் கனகசபையை மிரட்டியது. அவன் இதயம் ஒரு முறை துள்ளியது. கதவு மீண்டும் தட்டப்பட்டது. கனகசபையைத் தயக்கம் இறுகத் தழுவியது. கதவைத் திறக்கப் பயந்தான். கண்களை இறுக மூடினான். மூச்சு உள்ளே சிக்கிவிட்டது.

கனகசபையின் கால் புறமாக தலை வைத்து படுத்திருந்த உபாலி கொட்டாவிவிட்டபடி எழுந்தான். "யாரடா அவன்" எனச் சிங்களத்தில் கேட்டவன், 'டோர்ச் லைட்'டின் உதவியுடன் நடந்து சென்று, கதவைப் பெரிய ஓசையுடன் திறந்தான்.

கனகசபை கண்களைத் திறந்து, மெல்ல தலையை உயர்த்திப் பார்த்தான். இருவர் நிற்பது தெரிந்தது. அவர்கள் காக்கிச் சட்டைக்காரர் அல்லர். சாரங்காரர். சாராயத்தின் நெடி மூக்கை தடவியபடி சென்றது.

"விஜிதாவின் வீடு எங்கடா இருக்குது?" என்று ஒருவன் உபாலியிடம் அதிகாரத் தோரணையில் கேட்டான்.

"எந்த விஜிதாடா?" அதே தோரணையில், அலட்சியமாக உபாலி வினா தொடுத்தான்.

"அடோ, உனக்கு விஜிதாவை தெரியாதா?" முதலில் பேசியவன் அதட்டினான்.

"தெரியாது?" மற்றவன் உறுமினான்.

உபாலியின் கோபம் சட்டென அடங்கியது. தலையை சொறிந்தபடி, "பெம்முல்ல விஜிதாவா?" எனக் கேட்டான்.

"அவளே தான். எங்கே இருக்கிறாள்?"

உபாலி தனது ஆள்காட்டி விரலை உயர்த்தி, தூரத்தில் சரிந்திருந்த ஒரு குடியிருப்பைக் காட்டினான். "அது தான்."

அந்த இருவரும் மேலும் ஒன்றும் சொல்லாமல், தள்ளாடியபடி நடந்து சென்றனர்.

உபாலி கதவை மூடிவிட்டு, படுக்கைக்கு வந்தான். "பொம்பள பொறுக்கிங்க. குடிச்சிட்டு வந்திருக்கிறாங்க." முணுமுணுத்தபடியே பாயில் சரிந்தான்.

சில நிமிடங்கள் கடந்தன. உபாலியிடமிருந்து குறட்டை ஒலி பயங்கரமாகக் கேட்டது.

கனகசபையிடம் இருந்து தூக்கம் தூர விலகிச் சென்றுவிட்டது. பலவாறான யோசனைகள் மனதினுள் எட்டிப் பார்ப்பதும், மறைவதும்......... நுளம்புகளின் 'கிணுகிணுப்பு' மீண்டும் ஆரம்பமாகியது. அவை இப்போது அவனைப் பதம் பார்க்கவும் துடித்தன. கைகளையும், கால்களையும் சொறிந்தபடி.......

கனகசபைக்கு சினம் பொங்கியது. ஆத்திரம் எல்லை மீறியது. நுளம்புகளை, உபாலியை, வேலை தேடி கொழும்புக்கு செல்வது என்று முடிவு எடுத்த தன்னை, மாநகர சபையினரை என்று யாவரையும் மனதினுள் திட்டினான். தன் நிலையை நினைக்க, நினைக்க வேதனை கிளம்பி அது மெல்ல, மெல்ல உயர்ந்த போது, கண்களில் நீர்த் திவலைகள் உருவாக.........

"இஞ்சருங்கோ. இப்ப உங்களுக்கு நாற்பத்தி ஐஞ்சு வயசாகுது. இனி கொழும்புக்கு போய் உழைக்க வேணுமோ? இஞ்சையே தோட்டத்தை சரியா செய்தால் எல்லாருமே நிம்மதியாக சீவிக்கலாம். இனியும் உங்களுக்கு ஒரு கௌரவமான வேலையை ஆரும் தருவினம் எண்டு நினைக்கிறியளோ?" மங்களம் கூறிய வார்த்தைகள் அவனுள் ரீங்காரமிட.........

திடீரென உடல் சூடு அடைவதை கனகசபை உணர்ந்தான். வியர்வை கசிந்தது. நமைச்சல் உணர்ச்சியை அது தோற்றுவித்தது.

முழு உடலும் வியர்வையால் நனைய, எரிச்சல் எல்லையின் விளிம்பில் நின்றது. சலித்தபடியே எழுந்தவன், சாரத்தால் முகத்தை, மேலுடம்பை, கைகளை என்று உடலின் அரைவாசியைத் துடைத்தான். அந்த அகோரத்திற்குள் கிடக்க அவனால் முடியவில்லை. மூச்சு முட்டுவது போல...... வெளியே வந்தான்.

மெலிதான காற்று அவனை அணைத்தபடியே செல்ல அவனுள் சின்னதொரு சுகானுபவம் தொற்றியது.

வானத்தை ஏகாந்தமாக நோக்கினான். கண்களுக்கு வித்தியாசமாக எதுவுமே புலப்படவில்லை. பார்வையைத் தாழ்த்தி சுற்றும் முற்றும் பார்த்தான். பல அறைகளினாலான பெட்டிகளின் அமைப்பில் அமைந்திருந்த குடியிருப்புக்கள் யாவுமே இருள் அரக்கனிடம் பலியாகிக் கிடந்தன.

தூரத்தில் பலகை மறைப்புக்கள் சரிந்து, கோணலாகக் கிடந்த விஜிதாவின் குடியிருப்பை கனகசபை கண்களால் மேய்ந்தான். அவனுள் ஒரு 'கிளுகிளுப்பு' துள்ளியது. ஓர் உற்சாகம் பீறிட்டு, காதோரங்களைச் சூடாக்க.....

விஜிதாவை கனகசபைக்குத் தெரியும். உபாலியின் வீட்டுக்கு வந்த மூன்றாம் நாள் தான் அவளைக் கண்டான். அந்த சேரிப்புறத்தில் வாழும் இளம் பெண்களுடன் ஒப்பிடும்போது, அவள் சற்று வித்தியாசமாக விளங்கினாள். அவள் கண்களில், ஆடைகளில், நடையில், பார்க்கும் விதத்தில், வீதியோர குழாயடியில் குளிக்கையில் அந்த வித்தியாசம் வெளிச்சமாகியது. அவனுள் ஒரு சந்தேகப் பொறி பற்றியது. தன் சந்தேகத்தை உபாலியிடம் நிவர்த்திக்க முற்பட, அவன் அர்த்தத்துடன் சிரித்தான்.

"ஐயா, ரொம்ப கெட்டிக்காரர்தான். விஜிதா வேணுமா? சொல்லுங்க........ 'செட்' பண்ணித் தாறன். கொஞ்ச காசு தான்" என உபாலி சொல்ல, அடிமனதில் புதையுண்டிருந்த சின்னதொரு ஆசையை மறைத்தபடி, புன்சிரிப்புடன் உபாலியின் கோரிக்கையை கனகசபை முகபாவனையால் நசுக்கினான்.

"ஐயா, இந்த மாதிரியான சேரிப்புறங்களில விஜிதா மாதிரி பொம்பளைங்க, 'கசிப்பு'க்காரங்க, 'குடு'காரங்க இருக்கிறாங்க. இவங்க மாதிரி ஆக்கள் இல்லாட்டால் இந்த இடத்தில இருக்கிற ஆட்கள் மனுஷராக வாழமாட்டாங்க. மிருகமாக மாறிடுவாங்க."

உபாலி முதல் நாளிரவு இப்படியொரு விளக்கத்தை முன் வைத்த போது, கனகசபை அவனை நுணுக்கமாக நோக்கினான்.

"உபாலி, நீ என்ன சொல்றாய்?"

"ஐயா, இந்த இடத்தில இருக்கிற ஆக்கள் சந்தோஷமாக வாழ்றதுக்கு கெட்ட பொம்பளைங்க, கசிப்புக்காரங்க, 'குடு'காரங்க எல்லாம் இருக்க வேணும். இந்த பொம்பளைங்ககிட்ட கிடைக்கிற சுதி, கசிப்பில, 'குடு'வில கிடைக்கிற 'கிக்' எல்லாத்தையும் மறக்கச் செய்திடும்."

கனகசபை இடைமறித்தான். "சந்தோஷமாக இருக்கிறதுக்கு வேறை விஷயங்கள் இல்லையா?"

"ஐயா, இந்த மாதிரியான நெருக்கடியான, சனப்பெருக்கம் நிறைந்திருக்கிற, கூனிக்குறுகி, வாழ்க்கை நடத்திற அவல நிலையில இருக்கிற ஆக்களுக்கு இப்படியான சந்தோஷம் தேவை. இல்லாட்டி அவங்க மிருகங்களாகத்தான் வாழுவாங்க." உபாலி வித்தைக்காரன் போல அட்டகாசமாகச் சிரித்தான்.

உபாலியின் கருத்து கனகசபைக்கு தெளிவாக விளங்கவில்லை. அவனைக் கேள்விக்குறியுடன் நோக்க, உபாலி தொடர்ந்தும் பேசினான். "ஐயா, நீங்க எல்லாம் உங்கட ஊரில எப்படி வாழுறீங்கன்னு எனக்குத் தெரியும். நான் ஒருக்கால் யாழ்ப்பாணத்துக்கு போயிருக்கிறன். அங்க நீங்கள் எல்லாம் விசாலமான இடத்தில சனநெருக்கடி இல்லாத இடங்களில வாழுறீங்க. சூழல் அசுத்தமாகிற சந்தர்ப்பமும் குறைவு. இங்க அப்படி இல்ல. இந்த சேரிபுறத்தைப் பாருங்க. ஒவ்வொரு வீடும் ஐம்பது சதுர அடி அளவில தான் இருக்குது. அதுக்குள்ள எத்தனை பேர் இருக்கிறாங்க எண்டு தெரியுமா? சில இடங்களில ஏன்ட வீட்டில இருக்கிற மாதிரி பத்து பேர் கிடக்கிறாங்க. ஐயா...... இங்க வீட்டுக்குள்ள கொஞ்சம் ஆக்கள் படுத்திருக்க, மீதிப் பேர் படுக்க இடமில்லாமல் 'ரோட்'டில படுக்கிறாங்க. இப்படி நரக வாழ்க்கை வாழுறவங்க இந்த மாதிரி சந்தோஷமாக இருக்க வேணும். இல்லாட்டி அவங்க மனுசரா வாழமாட்டாங்க."

உபாலி சொல்வதை கனகசபையினால் மேலோட்டமாக ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. நள்ளிரவில் சலம் கழிக்க வெளியே சென்றுவிட்டு திரும்பி வரும் போது குடியிருப்புகளுக்கு

முன்னால், வீதியோரத்தில் எத்தனை பிரகிருதிகள் படுத்துக் கிடப்பதைக் கண்டு, அவர்களுக்காகப் பரிதாபப்பட்டிருக்கிறான்?

"உபாலி, இதுக்கு அடிப்படைக் காரணம் என்ன எண்டு நினைக்கிறாய்?" கனகசபை ஏகாந்தமாக, ஆனால் நோக்குடன் வினாவினான்.

"ஐயா, நீங்க படிச்சிருக்கிறீங்க. இது உங்களுக்கு தெரிய இல்லையா?"

"இல்லை." எவ்வித சிந்தனையும் இன்றி கனகசபை சொன்னான்.

"எல்லாமே சனப்பெருக்கம் தான். நாளுக்கு நாள் சனம் பெருகுது. அதோட உங்கட இனப் பிரச்சனையும் இதுக்கு ஒரு காரணமா இருக்குது."

"என்ன மாதிரி?"

"யாழ்ப்பாணத்திலை இப்ப சண்டை நடக்குது. அதால உங்கட ஆக்கள் ரொம்பப் பேர் கொழும்புக்கு ஒவ்வொரு நாளும் படை எடுக்கிறாங்க. ஆனால், இதுக்கு ஏற்ற மாதிரி கொழும்பில வீடுகள் இல்ல. எங்கட நாட்டைப் பொறுத்தளவில சனப் பெருக்கத்திற்கு ஏற்ற மாதிரி வீடமைப்புத் திட்டங்கள் இல்லன்னு தான் நான் சொல்லுவன். இல்லாட்டால் கொழும்பில கொஞ்ச இடங்கள விட எல்லா இடத்திலையும் சேரிகள் இருக்காது. முந்தி எல்லாம் ஏழைகள் தான் சேரிப்புறத்தில வாழ்ந்தாங்க. இப்ப மத்திய தரப்பு ஆக்கள் கூட சேரிப்புறத்திற்கு படை எடுக்கத் தொடங்கிட்டாங்க. உங்கட ஆக்களும் மூலை முடுக் கெல்லாம் வாழுறாங்க. சேரிப்புறத்திலையும் தான். சுருக்கமா சொல்லப் போனால் இப்ப கொழும்பு நிறைஞ்சு வழியுது."

எவ்வித தடங்கலும் இன்றி, தெட்டத் தெளிவாக உபாலி சொன்னான். அவனின் கருத்தாழமிக்க உரையாடலில் கனகசபை கவரப்பட்டான். இனி அவனுடன் சற்று ஆழமாக உரையாட வேண்டும் என்ற ஆர்வம் கனகசபைக்கு பிறந்தது.

உபாலியை பெருமையுடன் நோக்கியவாறு கனகசபை தனது பேச்சை ஆரம்பித்தான். "மூலப் பிரச்சினையான சனப்பெருக்கத்தை தடுத்து நிறுத்தினால் இந்த மாதிரி பிரச்சினை வருமா?"

உபாலி மெல்லக் கனைத்தான். "சனப்பெருக்கத்தை அப்படியே நிற்பாட்ட முடியாது. அதைக் கட்டுப்படுத்தத்தான் முடியும். எவ்வளவுதான் கட்டுப்படுத்தினாலும் ஒவ்வொரு நாளும் தொகை கூடும். ஒரு நாளுமே குறையாது. குறைய வேணுமென்டா போர் உக்கிரமடைய வேணும்."

உபாலி வெளியிட்ட கருத்தை கனகசபை அடிக்கடி நினைவில் இருத்தி, அதை அலசி ஆராய்ந்தான்.

'போர் உக்கிரமடைய வேணும்......'

## (2)

**க**னகசபை இரண்டு, மூன்று தடவைகள் கொட்டாவிவிட்டான். தூக்கம் கண்களைச் சுழற்றியது. நாள் முழுவதும் கொழும்பு மாநகரின் பெரும்பகுதிக்கு நடந்தும், 'பஸ்'ஸிலும் சென்று வந்ததினால் ஒரே அசதியாக இருந்தது. படுக்கையை நாட தயக்கமாக இருந்தது. தூக்கத்தைச் சற்றுப் பின்தள்ளி விட்டு, அங்கேயே நின்றான். மீண்டும் கவனத்தை 'அந்த இருவரும்' ஈர்த்தெடுத்தனர்.

விஜிதாவின் வீட்டில் இருந்து அவர்கள் வெளியேறி, நடந்து வந்தனர். இப்பொழுது நடையில் ஒரு தெளிவு.

கனகசபை அசையாமல் நின்றபடி - அவர்களே 'மேலானவர்கள்' என்ற எண்ணம் நுழைந்த நிலையில் அவர்களைச் சுவாரஷ்யமாகப் பார்த்தபடி நின்றான். அவர்கள் அவனைத் தாண்டிச் சென்றனர். ஒருவன் பல தடவைகள் காறித்துப்பினான். இருவரும் மறைந்தவுடன், விஜிதாவின் வீட்டை கனகசபை ஆர்வத்துடன் நோக்கினான்.

வீதியோர மின்கம்ப ஒளி விஜிதாவின் வீட்டில் படர்ந்திருந்தது. வீட்டு வாசலின் அருகில் விஜிதா நிற்பது தெரிந்தது. அவனுக்கு 'ஜில்'லென்றிருந்தது. உடம்பில் ஓர் உற்சாகம் புகுந்தது. விஷமத்தனமான எண்ணம் ஏற்பட, அது அவனை அங்கிருந்து அவள்பாற் விரட்ட முற்பட்டது.

கனகசபை அக்கம், பக்கத்தை நோட்டமிட்டான். வீதியோரத்தில் புழுதியுடன் இரண்டறக்கலந்து, நித்திரையில் ஆழ்ந்திருந்த இருவரைத் தவிர, வீதி 'பளிச்'சென்றிருந்தது. பக்கத்து வீட்டு 'ரேடியோ'வின் அலறல் அந்தப் பிரதேசத்தின் அமைதியைக் குலைத்தது.

கனகசபையின் மனம் ஒரு கோணத்தில் சரிந்து, நெளிந்து, வளைந்தது. சிறு துளியாக இதயத்தை நனைத்திருந்த சபலம், படிப்படியாக வெள்ளமாகிய போது தன்னை மறந்தவனாக, எல்லாக் கட்டுப்பாட்டையும் மீறியவனாக விஜிதாவின் வீட்டை நோக்கி நகரத் தொடங்கினான். நடையில் தயக்கம் இருந்தாலும், ஆர்வம் அவனை முன்னே தள்ளியது.

விஜிதா இன்னும் அதே இடத்தில், சவர்க்கார விளம்பர த்திற்கு 'போஸ்' கொடுக்கும் பெண்களைப் போல - கதவு நிலையில் சரிந்தபடி நின்றாள். கனகசபை அவளை நெருங்கிவிட்டான். அவள் முன்பாக தயக்கத்துடன் நின்றான். அவள் முகத்தில் திருப்தியின் சாயல்.... வேறோர் உலகில் சஞ்சரித்திருந்தாள். மெல்லியதொரு புன்னகையை வெளிப்படுத்தியபடி தொண்டையைச் செருமினான் கனகசபை. பார்வையை அநாகரிகமாக குறிக்கோளுடன் விசிற........

அவனை விஜிதா அந்நியமாக நோக்கினான். "ஐயா, என்ன வேண்டும்?" அவள் கேட்டுவிட்டு இரு கைகளையும் உயர்த்தி சோம்பல் முறித்தாள். மேல் சட்டை உயர்ந்து வயிறு வெளிச்சமாக...... கனகசபையின் நெஞ்சில் ஒரு மோதல்.

விஜிதாவின் கேள்வி கனகசபையை தூக்கி எறிந்துவிட்டது. இப்போது என்ன சொல்வது? மனதில் தேங்கிக் கிடப்பதை அப்படியே அவிழ்த்துவிடுவதா? இல்லையென்றால்....... கனகசபை ஒன்றும் பேசாமல் அவளை ஆசைதீர பார்த்தபடி நிற்க......

விஜிதாவுக்கு அவன் நிலை தெளிவாகி இருக்க வேண்டும். இப்படி எத்தனை பேரை அவள் கண்டிருப்பாள்?

"ஐயா, நீங்கள் எல்லாம் கௌரவமானவர்கள். இந்த மாதிரி வரக்கூடாது. உங்கள் ஆசையை அடக்க பழகுங்கள்." தெட்டத் தெளிவாக வார்த்தைகளை அவள் வெளியிட......

மீண்டும் படுக்கையில் புரண்டு, நித்திரை வரும் வரை விஜிதாவின் வார்த்தைகள் அவன் இதயத்தை வாளால் வெட்டி......

# (3)

**ஊ**ரில் இருந்து புறப்படுவதற்கு முதல் நாளிரவு அந்த விளக்கு வெளிச்சத்தில் மங்களம் ஈரமான குரலில் சொல்கிறாள். "நான் சொல்லுறதைக் கொஞ்சம் கேளுங்கோவன். கூழோ, கஞ்சியோ குடிச்சு நாங்கள் எல்லாரும் ஒண்டாக இருக்கிறது தான் நல்லது. நீங்கள் கொழும்பிலையும், நானும், பிள்ளையளும் இஞ்சையும் வாழுறதில என்ன சந்தோஷம்?"

"நிறையத் தரம் சொல்லிட்டன். திருப்பியும் சொல்றன். இஞ்ச கமம் செய்து பிழைக்க ஏலுமோ? வானத்தையும், பூமியையும் நம்பி எனக்கு அலுத்துப் போட்டுது. திரை கடல் ஓடியும் திரவியம் தேடு எண்ட நிலைக்கு வந்திட்டன். என்னைத் தடுக்காதையும்" கனகசபை காட்டமாகக் கூறினான்.

மங்களத்தின் முகம் கூம்பியது. சில வினாடிகள் மௌனத்திற்கு அடிமையானாள். எவ்வளவுதான் பிரதிவாதங்களை நடத்தினாலும் கனகசபை தனது வாதத்தை நிறுத்தமாட்டான். அது சரி என்றே இறுதி வரை சாதிப்பான். பல நாட்களாக அவன் வாதித்து, தன் எண்ணத்தை நிறைவேற்றுவதற்காக மறுநாள் கொழும்புக்கு பயணமாவதற்கு தயாராகிக் கொண்டிருக்கும் போது அவன் மனதை மாற்றமாட்டான் என்று அவளுக்குத் தெரியும். இருந்தும் ஒரு கடைசி முயற்சியாக........

"அங்கை எங்கை தங்கி இருக்கிறதா நோக்கம்?" மங்களம் ஆர்வத்துடன் கேட்கிறாள்.

"சொந்தக்காரரின்ர வீட்டில தங்கிறதில்ல எண்டு முடிவு எடுத்திருக்கிறன்."

"நல்லது."

"முந்தி என்னோட வேலை செய்த உபாலியின்ர வீட்டில. அவன் ஒருத்தன் தான் கொழும்பில இருக்கிறான். மற்றவையள் தூர இடத்தில இருந்து கோச்சியில வாறவங்கள். அதோட அவங்கட வீடு எங்கை இருக்குது எண்டு எனக்குத் தெரியாது. உபாலியின்ர வீட்டுக்குத் தான் நான் போயிருக்கிறன்."

"உபாலி? ஆள் ஆர்?"

"நான் முந்தி வேலை செய்த காணிக் கந்தோரில எங்கட 'செக்ஷன் பியன்'. நல்லவன். முசுப்பாத்திக்கட்டை. துவேஷம் கொஞ்சம் கூட இல்ல. என்னில அவனுக்கு நல்ல விருப்பம். தன்ர வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போய் தேத்தண்ணி தந்து எனக்கு சிங்களம் படிப்பிச்சவன். தமிழ் ஆக்கள் மாதிரி தமிழும் கதைப்பான். எல்லா விஷயத்திலையும் வலு கெட்டிக்காரன்..... வேலை கிடைக்க மட்டும் தான் அவனோடை..... பேந்து ஒரு அறைக்கு மாறிவிடுவன்."

"வசதியான வீடோ?"

கனகசபை அரைகுறையாகச் சிரித்தான். "கொழும்பில ஒரு 'பியன்' வசதியான வீட்டிலை இருக்க ஏலுமோ? சின்ன வீடுதான். ஒரு மாதிரிச் சமாளிக்கலாம்."

ஊரில இருந்து பல கஷ்டங்களுக்கு மத்தியில் வவுனியா வந்த கனகசபை அங்கிருந்து ரயில் ஏறி, கொழும்பு கோட்டையை அடைந்தான்.

கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து புற்றீசல்களாக பெருவாரியான சனம் வெளிப்பட்டதைக் கண்டு அவன் ஆச்சரியத்தில் மிதந்தான். வீதியெங்கும் பரம்பிக் கிடந்த சனக்கூட்டம் அவனை வியப்பில் ஆழ்த்தியது. வாகன நெரிசலைக் கண்டு பிரமித்தான். வீதிகளைக் கடப்பதில் பதற்றமடைந்தான்.

பலருடனும் முட்டி மோதி, மெதுவாகவும், விரைவாகவும் நடக்கிறான்.

இருபது வருடங்களின் பின் எவ்வளவு மாற்றம்! முன்னர் சன சந்தடி அற்றிருந்த இடமெல்லாம் சனவெள்ளமாகக் காட்சி அளித்தது. சந்து பொந்துகளிலும் சனநெருக்கம், வாகன நெரிசல்........

கோட்டை, புறக்கோட்டை என்று அவன் சுற்றிச் சுற்றிப் பார்க்க அவனுள் வியப்பு, இனம் புரியாத கிலேசம்..... எல்லோரும் தன்னை மிதித்துவிடுவார்களோ என்ற காரணமற்ற பீதி....... துப்பாக்கியை நீட்டிக் கொண்டிருந்த இராணுவத்தினரைக் கண்டு புதுமை உணர்வு...... இங்குமா?

நடக்கிறான். நடக்கிறான்........ அவன் ஒரு வருடம் மட்டும் பணிபுரிந்த அலுவலகம் தென்படுகிறது. அதில் ஒரு மாற்றமும் இல்லை. சுவர்களில் அதே அழுக்கு.

'கிளார்க்' உத்தியோகத்தை உதறித் தள்ளிவிட்டு ஊரில் கமம் செய்து வாழப் போவதாக கனகசபை சொன்ன போது ஆர்தர் சில்வா, ரட்ணாயக்கா, லெஸ்லி, உபாலி என்று பலர் பரிகாசம் செய்ததை நினைத்துப் பார்க்கிறான்.

உபாலி மனம் திறந்து பகிடி பண்ணுகிறான்: "ஐயா பசுமைப் புரட்சி செய்ய ஊருக்குப் போறார்."

உபாலி பல தடவைகள் கனகசபையைச் சீண்டி......

கிராண்ட்பாஸில், ஓர் ஒதுக்குப்புறத்தில் ஒற்றை அறை வீட்டில் வாழ்ந்தவன் உபாலி. அவன் வீட்டை சம்பளத்தன்று முற்றுகையிட்டு 'பார்ட்டி' நடத்திய ஞாபகம் கனகசபையை விட்டு அகலவில்லை. 'ஐயா, ஐயா' என்று உபாலி விளித்து, அன்பொழுகக் கதைத்ததை கனகசபை இன்னும் மறக்கவில்லை. வெறி மிஞ்சிய நிலையில் அவன் வீட்டில் இரவைக் கழித்த போது, திருமணமான புதிதாக இருந்தும், உபாலியின் மனைவி சீறிச்சினக்காமல் தன்னுடன் அன்புடனும், பண்புடனும் பழகியதை கனகசபை எண்ணி மனம் களிப்படைந்திருக்கிறான். நிறைய மறக்கமுடியாத நிகழ்வுக்கு வழிவகுத்துவிட்ட சொற்ப நாட்கள்....

'பஸ்' ஏறி கிராண்ட்பாஸை அடைந்த கனகசபை நடந்தான். உபாலிவின் வீட்டை அடையும் வரை வழியில் தென்பட்ட புதிய கட்டிடங்களை அதிசயமாகப் பார்க்கிறான். அறிமுகமான வீதிகள் தான். ஆனால், முதல் தடவையாக செல்வது போன்ற உணர்வு.

உபாலியின் வீட்டைக் கண்டு பிடித்தான். வீடு சற்று நவீனமயமாகி, சுத்தத்திற்கு அர்த்தத்தைப் பகிர்ந்தது. உபாலி வாழ்க்கையில் முன்னேறிவிட்டானாக்கும் என்று எண்ணியவனாக கனகசபை கதவைத் தட்டினான். அறிமுகம் இல்லாத ஒருவர் கதவைத் திறந்தார். உபாலியை விசாரித்தான் கனகசபை. அவன் அந்த வீட்டில் இருந்து வெளியேறி வேறொரு இடத்தில் இருப்பதாகச் சொல்ல, கனகசபை நம்பிக்கையை இழந்துவிட்டான்.

நல்ல வேளை வீட்டுக்காரன் அவன் நிலையைப் புரிந்து, "பயப்பிடாதீங்க, உபாலி கிட்டடியில தான் இருக்கான்" என்றவர்

உபாலியின் வீட்டைக் காட்டுவதற்கு ஒரு சிறுவனை அவனுடன் அனுப்பி வைத்தார்.

பாலத்துறை பாலத்தைத் தாண்டி, குறுகலான வீதி ஒன்றின் ஊடாக சிறுவனுடன் கனகசபை நடந்தான். பல சந்திகளைத் தாண்டுகின்றனர். வழிவழியே எதிர்ப்பட்ட பெரு வாரியான ஆட்களைக் கண்டு, குப்பைகள் வாரியிறைக்கப்பட்ட வீதிகளின் இருபுறமும் கிடந்த பழங்காலத்து, அழுக்கான குடியிருப்புக்களைக் கண்டு, குடியிருப்புக்களின் முன்பாக விளையாடிக் கொண்டிருந்த 'அழுக்கு' சிறார்களைக் கண்டு கனகசபைக்கு மனதினுள் வெறுப்புணர்ச்சி கிளம்பியது.

நடைபாதை வியாபாரிகள் பரப்பி வைத்திருந்த 'அச்சாறு', வெருளு, இறால் வடை, அவித்த கடலை, ஜம்பு என பல தின்பண்டங்களில் ஈக்கள் மொய்த்தபடி கிடப்பதைக் கண்டு கனகசபை அருவருப்பின் எல்லையில் நின்று தவித்தான். சாக்கடைகளில் இருந்து வெளிப்பட்ட நாற்றத்தைச் சகிக்க முடியாமல், மூக்கைப் பொத்தியபடி பலிகடா போல சிறுவனுடன் நடந்த கனகசபைக்கு ஏதோ ஒன்றுக்குள் மாட்டிக் கொண்டது போன்ற உணர்வு இறுகத் தொடங்கியது.

கனகசபையை சினம் ஆரத்தழுவிவிட்டது. "எங்கை வீட்டைக் காண இல்லை" என பொறுமை இழந்தவனாகக் கேட்டான். "அங்க தான் இருக்குது" என சிறுவன் சுட்டிக்காட்டிய போது, கனகசபை நின்ற மேட்டுப்பகுதியில் இருந்து பள்ளமான இடத்தில் விரிந்து கிடந்த சேரிப்புறத்தைக் கண்டு அவன் திடுக்கிட்டான். 'உபாலி இஞ்சையா இருக்கிறான்........'

எடுத்த எடுப்பில் அந்த சேரிப்புறத்தை நோக்கிய போது, அந்தச் சூழலை தன் மனதுக்குள் பதித்த போது கனகசபையை வேதனை நன்கு அழுத்தியது.

கால்கள் கூசிய நிலையில் முன்னேறுகிறான். சேறும், சகதியும், குப்பைகளும் நிறைந்த குறுகிய மண் வீதியில் நடக்கிறான். கண்களுக்கு தெரிந்த குடியிருப்புக்கள் யாவுமே ஒரே அழுக்காக, அருவருப்பைத் தூண்டக்கூடிய விதமாக விளங்கின.

சில வீடுகளின் தகரக் கூரைகளில் கருவாடு காய்ந்து கொண்டிருந்தது. குடலை அரிப்பது போன்ற நாற்றம் வீசியது.

'ஹொாட்டேல்' ஒன்றில் இருந்து பாடல் ஒன்று பயங்கரமாக அலறுகிறது. கரத்தைக்காரர்கள் நிலத்தில் குந்தியிருந்தபடியே பீடி புகைக்கிறார்கள். வேறு சிலர் 'ரேஸ் பேப்பரில்' தம்மை மறந்திருக்கின்றனர். வீதியோரம் முழுவதும் பல்வகையான தின்பண்டங்கள் தயாரிக்கும் இடமாக மாறி, பல்வகையான மணத்தை வெளிப்படுத்துகின்றது. புகையெல்லாம் கிளம்புகிறது. அழுக்கு நிறைந்த உடையுடன், முகமெல்லாம் எண்ணெய் ஊறின நிலையில் காணப்பட்ட ரொட்டிக்காரன் ஒருவன் தனது வேலையில் கண்ணும் கருத்துமாக இருக்க, அவனைச் சுற்றி அரைகுறை அழுக்கு ஆடைகளில் அடுத்த தலைமுறையின் 'கதாநாயக, நாயகிகள்' ஈக்களாக அவனைச் சூழ்ந்து நிற்க, சொறி நாய்கள் அங்கும், இங்கும் நிலத்தை முகர்ந்து பார்த்தபடி ஓட..... புழுதியைக் கிளப்பியபடி 'ஓட்டோ ரிக்ஷாக்கள்' விரைந்து செல்ல....... கூச்சல் ஒரு புறம், இரைச்சல் மறுபுறம்.

எவருடனும் முட்டி மோதுவதைத் தவிர்த்து, கால்விரல்களை மட்டும் பதித்தவனாக கனகசபை நடந்தான்.

அவனுள் நிறைந்த வேதனை. அதை மீறி அருவருப்பு. மூக்கினுள் அரிப்பு. உடலினுள் எரிவு. 'இந்த மாதிரியான இடத்திலா இருக்கப் போறன்' என்று எண்ணும் போது கண்கள் கலங்கிவிடுமாப் போன்ற உணர்வு.

பலகைகள், தகர தகடுகள், 'பிளாஸ்ரிக்' விரிப்புக்கள், 'ரயர்கள்', இத்துப்போன மரங்கள் ஆகியவற்றினால் உருவான வீட்டின் முன் சிறுவன் நின்றான். "உபாலி 'அய்யே'" என்று பல தடவைகள் கத்திய பின்னர், ஒவ்வொரு அளவுகளிலும் மூன்று இளவட்டங்கள் வெளியே வந்தன. அவற்றின் தோற்றங்கள்...... கடந்த ஆறு மணி நேரமாக புழுதிக்குள் 'இரண்டறக் கலந்திருக்க' வேண்டும். இறுதியாக உபாலி வந்தான். அவன் உருவத்தில் தெரிந்த மாற்றம்! உயரம் சற்றே குறைவென்றாலும் வைரம் பாய்ந்த உடல்வாகு, தடித்த மீசை, குறுந்தாடி என்று விளங்கியவன் இவை யாவற்றையும் இழந்து, மெலிந்த தேகத்துடன் முதுமைப் பருவத்தின் 'தளதள'த்த நிலையில், கூனல் முதுகுடன்....... தலை வழுக்கையாகி........

'சட்'டென அவன் முகத்தில் ஓர் ஒளி! "நீங்க....... நீங்க....... கனகசபை ஐயா தானே?" என அடையாளம் காண........ கனகசபை

மகிழ்ச்சியுடன், "ஓமோம் உபாலி" என்று தலையாட்ட, உடனே உபாலி, "ஐயா" என்றபடி கனகசபையை கட்டி அணைத்தான். இறுக்கமான அணைப்பு. சில வினாடிகள் இருவரும் அணைப்பில் சிக்குண்டிருந்தனர்.

அணைப்பு இளகியது. கனகசபையை உபாலி கண்களால் மேய்ந்தான்.

கனகசபைக்கு நாற்பத்தைந்து வயது. மெல்லிய தோற்றம். கன்னங்கரேலென்ற கறுப்பு நிறம். தலைமயிரெல்லாம் சாம்பல் பூத்துவிட்டன. பற்களில் காவி. ஒட்டல் கன்னங்கள். எல்லாமே சய தான். சக என்று சொல்ல புன்சிரிப்பும், ஒளிநிறைந்த கண்களும் தான்.

"ஐயா, நல்லா மெலிஞ்சிட்டீங்க. சாப்பிடுறதில்லையா?" வார்த்தைகளில் சிலேடை இல்லை. வாஞ்சை தான் மேல்மிச்சம்.

"அதையேன் கேக்கிறாய். எல்லாம் என்ர கர்ம வினை."

சில வினாடி மௌனம் விழுகிறது. உபாலி தன்னைச் சுதாகரித்துக்கொள்கிறான்.

"வாங்க ஐயா" என்று கனகசபையை உள்ளே அழைத்துச் சென்றான்.

வீட்டினுள் நுழைந்த போது, இரு பிள்ளைகள் நிலத்தில் உருண்டு, புரண்டு விளையாடுவதை கனகசபை கண்டான். உபாலியின் மனைவி பொடிமெனிக்கே அடையாளம் கண்டவளாக முகமலர்ச்சியுடன் வரவேற்றாள்.

பலகைப் பெட்டி ஒன்றில் கனகசபை அமர்ந்தான். வீடு என்ற பெயரில் தனது ஊர் வீட்டின் பின்புறத்தில் கட்டப்பட்டிருந்த ஆட்டுக் கொட்டிலின் அளவில் விளங்கிய அந்த வீட்டை கனகசபை கண்களால் அளந்தான். பலகை மறைப்பில் தொங்கிக் கொண்டிருந்த ஊத்தை நிறைந்த உடுப்புக்கள். நிலத்தில் வழிந்தோடிய பிள்ளைகளின் சிறுநீர், எங்கிருந்தோ வெளிப்பட்ட பலவிதமான மூக்கை அடைக்கும் நாற்றங்கள்..... அதைத் தோற்கடிக்கும் விதத்தில் குசினியில் இருந்து புகையுடன் வெளிப்பட்ட கருவாட்டு நாற்றம் மூக்கினுள் நுழைந்து.....

யாவும் கனகசபைக்கு குமட்டலை ஏற்படுத்தின.

உபாலியின் பிள்ளைகளின் கால்களில் பரந்திருந்த புண்களும், சிரங்குகளும் நிறைந்த கால், கைகளைப் பார்க்க...... அருவருப்பும், எரிச்சலும் கனகசபையை நெருங்குகின்றன. மூச்சு எடுத்து வெளிவிட தயங்கிய நிலையில் - தன் உள்ளத்தினுள் ஏற்பட்ட பல்வகை உணர்ச்சிகளை அடக்கிய நிலையில் துடித்தான்.

"உபாலி, ஏன் இந்த தொந்தரவான இடத்தில குடியேறி இருக்கிறாய்?" கனகசபை கேட்டான்.

"ஐயா, இந்த இடத்திற்கு என்ன குறைச்சல்? நல்ல சூழல்....... நல்ல காற்றோட்டம்........" என்று உபாலி சொல்ல, கனகசபை நக்கலாகப் புன்னகைத்தான்.

இதை உபாலி கவனிக்கவில்லை. தொடர்ந்தும் பேசினான். "ஐயா, முந்தி இருந்த வீடு வாடகை வீடு. இது என்ட சொந்தம். அடிப்படை வசதி இல்லாட்டாலும், எல்லாமே இலவசமாக கிடைக்குது. அதுவும் தேர்தல் காலத்தில எங்களை எல்லாம் நல்லா கவனிப்பாங்க. அந்த நேரத்தில நாங்க தான் இந்த நாட்டு மன்னர்கள்." உபாலி வெகுளியாகச் சிரித்தான்.

"ஏன் இஞ்சை வந்தனீ?"

"குடும்பக் காட்டுப்பாட்டை மறந்ததால வந்த வினை."

"பொய், பொய்" என்று பொடிமெனிக்கே கத்தினாள்

"உபாலி, உனக்கு எத்தனை பிள்ளையள்?"

"எட்டு..... நாலு பேரு கலியாணம் முடிச்சிட்டாங்க. ரண்டு பேரப்புள்ளைங்க இங்க தான் இருக்கிறாங்க. அவங்கட 'மம்மி'யும், 'டடி'யும் 'மிடில் ஈஸ்ட்'டுக்கு போயிட்டாங்க."

"பெரிய குடும்பஸ்தன் தான்."

அதை உபாலி காதில் எடுக்கவில்லை. "ஐயா, கலியாணம் முடிச்ச புதிசில கிராண்ட்பாஸ் வீட்டில இருந்தன் தானே? ஆனால், பிள்ளைகள் பெருகப் பெருக வாடகை குடுக்க கட்டுப்படியாக இல்ல. என்ன செய்வம் எண்டு யோசிச்சன். அப்ப தான் இந்த மூளை வந்தது. நானும், இன்னும் இரண்டு குடும்பமும் முதல்ல வீடுகளை கட்டி இதில குடியேறினம். அந்த நேரத்தில நிறைய எதிர்ப்பு இருந்தது. 'முனிசிப்பல'காரங்க எங்களுக்கு எதிராக 'கேஸ்' எல்லாம் போட்டாங்க. ஒரு மாதிரி

எல்லாத்திலையும் வெற்றி பெற்றம். அப்ப ஒரு நாயும் இந்த பக்கம் குடியேற வரயில்ல. சட்டப்பிரச்சினை எல்லாம் முடிஞ்ச பிறகு, ஜனங்களும் கொஞ்சம் கொஞ்சமாக கூட எத்தனை பேர் இந்தப் பக்கம் படை எடுத்தாங்க தெரியுமா? இப்ப இந்த சேரிப்புறத்தில நூற்றி அறுபத்தி இரண்டு குடும்பங்கள் இருக்குது. இந்த இடத்திற்கே எத்தனை பேர் விலை பேசுறாங்க தெரியுமா?" என்று மூச்சுவிடாமல் உபாலி சொன்னான்.

கனகசபை மௌனம் சாதித்தான். ஒன்றும் பேசவில்லை. உபாலியை கண் இமைக்காமல் பார்த்தபாடி இருந்தான்.

"ஐயா, இந்த சேரிப்புறத்திற்கு என்ன பெயர் எண்டு தெரியுமா?"

"தெரியாது."

"மல்சிரிவத்த...... நான் சொல்லித் தான் இந்த பெயரை வைச்சாங்க. கொழும்பு மாவட்ட 'எம்.பி.' டங்கன் அபேசேகர ஏண்ட கூட்டாளி. அவருக்காக நான் 'எலக்‌ஷனில' வேலை செய்தன். இஞ்ச இருந்த எல்லாரும் அவருக்கு 'வோட்' போட்டாங்கள். அந்த நன்றிக் கடனுக்காக நான் சொன்னத ஏற்றுக்கொண்டு மல்சிரிவத்தன்னு பெயர் வைச்சிருக்கிறார்." உபாலி மலர்ச்சியுடன் புன்னகைத்தான். "ஐயா......." அவனே தொடர்ந்து பேசினான். "கொழும்பிலையே இந்த இடம் ஒரு 'ஃபேமஸ்' இடம்."

"என்னத்துக்கு?"

"எல்லாத்துக்கும். இஞ்ச நடக்காத 'பிசினஸ்' இல்லை எண்டே சொல்லலாம்." உபாலியின் முகத்தில் கேலி கலந்த பெருமை படர்ந்தது.

ஒரு மௌனம் விழுந்தது. திடீரென கனகசபையை உபாலி ஆர்வத்துடன் நோக்கினான்.

"ஐயா, இந்த சேரிப்புறத்தை உங்களுக்கு ஞாபகம் இருக்குதா? நீங்க என்னோட வேலை செய்யக்கில இஞ்ச வந்திருக்கிறீங்க. ஆனால், அப்ப இது 'ஸ்போர்ட்ஸ் கிரவுண்ட்'. இந்த 'ஸ்போர்ட்ஸ் கிரவுண்ட்'ல நான், நீங்க, ரட்ணாயக்கா 'மாத்தையா' எல்லாம் இரவில சாராயம் குடிச்சு, 'பைலா' போட்டிருக்கிறம். இண்டைக்கு சேரிப்புறமாகிவிட்டுது. இது மாதிரி

எத்தனை பொது இடங்கள் எல்லாம் சேரிப்புறங்களாகி விட்டுது எண்டு உங்களுக்கு தெரியுமா? இதுக்கு காரணம் என்ன? சனப்பெருக்கம். மற்றது இனப்பிரச்சனை."

கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து உபாலியின் வீடு வரைக்கும் வந்த பொழுது வீதியில் தெரிந்த வாகன நெரிசல், வீதியோரங்களில் கண்ட சனக்கூட்டம், ஒவ்வொரு வீடுகளுக்குள் கிடந்த குடும்பங்களின் எண்ணிக்கை யாவுமே உபாலியின் கூற்றை மெய்ப்பித்தன. இருபது வருடங்களுக்கு முன் இப்படியா வாகன நெரிசல் இருந்தது? வீதியோரங்களில் சனக் கூட்டம் இருந்தது? நடக்கும் போது எவராவது முட்டி மோதி இருக்கிறார்களா? சனப்பெருக்கமும், இனப்பிரச்சனையும் பல தாக்கங்களை ஏற்படுத்தித்தான் இருக்கின்றன.

கனகசபை கொஞ்சம், கொஞ்சமாக ஊரில் இருந்து கொழும்புக்கு வந்த நோக்கத்தை சொல்கிறான். உபாலியுடன் தங்கி இருக்கும் நோக்கத்தையும் சூட்சுமமாக வெளியிட்டான்.

"ஐயா, இது ஒரு ஊத்தையான இடம். நாற்றத்தை சகிக்க வேணும். அக்கம் பக்கத்தில இருந்து வாற சத்தத்தை சகிக்க வேணும். நாள் முழுவதும் காதை பிய்த்தெடுக்கிற மாதிரி 'ரேடியோ', 'டேப் ரெக்கோர்டர்' அலறுவதை சகிக்க வேணும். என்ர பிள்ளையளின்ர குழப்படியை சகிக்க வேணும்..........." என்று உபாலி சொல்லிக் கொண்டே போக, "பரவாயில்லை. வேலை கிடைக்க மட்டும் இஞ்ச இருக்கிறன்" என கனகசபை சொன்னான்.

ஆனால், கனகசபை எதிர்பார்த்ததிற்கும் மேலாக அந்த இடம் மோசமானதாக விளங்கியது. மலசலகூடத்திற்குச் சென்றால் அங்கு ஒரு 'க்யூ'. குளிக்கச் சென்றால் அடிதடி சூழ்நிலை. வீதியில் சென்றால் நிறைய அயோக்கியத்தனமான பார்வைகள். சிலேடை வார்த்தைகளால் அபிஷேகம்.

நள்ளிரவின் பின் தான் கண்களை மூடலாம். அதுவரை ஒவ்வொரு திக்குகளில் இருந்தும் ஒவ்வொரு விதமான இரைச்சல், இசை, பாடல், குடிகாரர்களின் அட்டகாசம், வாக்குவாதங்கள், சண்டைகள், சச்சரவுகள்....... ஈக்களின், நுளம்புகளின், நாய்களின் தொல்லைகள்........ நாற்றங்கள்........ அகோரங்கள்........ கால்களை, கைகளை, முழு உடம்பையும் என்று அடிக்கடி சொறிவதும், தடவுவதும்....... தடவும் போது கண்கள்

கலங்குவதும்......

எல்லாவற்றையும் சகித்தான் கனகசபை. அவன் குறிக்கோள் தொழிலொன்றை தனதாக்கிக் கொள்வது. வேலை தேடி பல இடங்களிலும் அலைந்தான். ஒரு இடத்திலையும் அவனுக்கு வேலை கிடைக்கவில்லை. பத்திரிகைகளில் விளம்பரங்களைப் பார்த்துவிட்டு விண்ணப்பித்த போது ஒரு 'இன்டர்வியூ'வுக்கும் அழைப்பு வரவில்லை.

"அதுதான் ஐயா நீங்க வந்த முதல் நாளே சொன்னனான். முந்தி மாதிரி இப்ப வேலை எடுக்கிறது அப்படி இலேசு இல்ல. இப்ப ஒரு வேலைக்காக எத்தனை பேர் போட்டி போடுறாங்க தெரியுமா? ஒரு சின்ன வேலை எடுக்கிறதுக்கு ஆக்கள் படுறபாடு....... சனப் பெருக்கத்தின்ர இரண்டாவது பிரச்சினை இதுதான்" என்று உபாலி சொன்ன போதும் கனகசபை தனது முடிவைத் தளர்த்தத் தயாராக இருக்கவில்லை.

வேலை தேடும் படலத்தைச் சலிப்பின்றி தொடர்ந்தான் கனகசபை. அதிர்ஷ்டவசமாக அவனைத் தேடி ஒரு வேலை வந்தது. 'கம்பனி' ஒன்றில் 'கிளார்க்' வேலை. அதன் 'எம்.டி.' ஒரு கறார் பேர்வழி. மூவாயிரத்து ஐநூறு ரூபா தான் சம்பளம் என்று முடிவாகக் கூறிவிட்டார். கொழும்பில் ஓர் அறை எடுத்து, மூன்று நேரமும் வெளியே சாப்பிட்டால், ஊருக்கு ஒரு சதமும் அனுப்ப முடியாது. அவன் நோக்கம் சரிந்த போதும், அந்த வேலையைப் பொறுப்பேற்றான். ஆனாலும், மனதில் ஒரு 'சொர சொரப்பு'.

மூளையைப் போட்டு உருட்டினான். பிரட்டினான். திடீரென அரைகுறை எண்ணம் தோன்றுகிறது. சில தியாகங்களை - ஒரு நேரச் சாப்பாட்டை, அறையில் தங்கியிருக்கும் சொகுசை மறந்தால், 'பஸ்'ஸை மறந்து, நடையை நினைத்தால் மூவாயிரத்து ஐநூறில் ஆயிரத்து ஐநூறை ஊருக்கு அனுப்பலாம். முன்னையதையும், பின்னையதையும் நிறைவேற்றலாம். உடல் அயர்வு தான் ஏற்படும். ஆனால், அறையின் நிழலை இழக்கிறதென்றால்........ சேரிவாசியாக வேண்டும். அவனுக்கு அது பழக்கமில்லை. அவன் குடும்பத்தில் - அண்ணன், தம்பி, அத்தான் என்று எவரும் இப்படியான 'தொந்தரவான' இடங்களில் ஒரு நாளும் வாழ்ந்ததில்லை. அவன வாழ்வதென்றால்.......? ஏசுவார்கள். கேலி செய்வார்கள். ஆனால், அவன் பிறரை நம்பாமல் வாழ வேண்டும். அவர்களை நம்பி

வாழ்க்கையை அகட்டவோ, நீட்டவோ, நிமிர்த்தவோ, குறுக்கவோ அவனால் முடியாது.

மனதை நிசப்தத்தில் ஆழ்த்தி, தீர்மானம் எடுப்பதில் தத்தளித்தவன், தர்மலிங்கத்தை எதேச்சையாக வழியில் சந்தித்தான். தர்மலிங்கம் அவனது ஊரைச் சேர்ந்தவன். சில தசாப்தங்களாக கொழும்பில் பணி புரிகிறான். இருவரும் குசலம் விசாரிக்கின்றனர்.

"கனகு, கொழும்பில என்ன செய்யுறாய்?" தர்மலிங்கம் விசாரிக்கிறான்.

ஊரில் இருந்து புறப்பட்டது முதல் வேலை கிடைக்கும் வரை நடந்தவற்றை கனகசபை சுருக்கமாக விபரித்தான்.

"வேலையை ஏற்றுக் கொண்டிட்டியோ?"

"இல்லை. கிடைக்கிற சம்பளத்தில மனுசிக்கும், பிள்ளை யளுக்கும் காசு அனுப்புறதெண்டால் நான் எங்கையும் சேரிப்புறத்தில தான் தங்க வேணும். அதால திரும்பி ஊருக்கே போய் விடுவமோ எண்டு நினைக்கிறன்." தர்மலிங்கத்தின் உள்ளக்கிடக்கையை கிண்டிப் பார்க்க இப்படி கனகசபை பேச, தர்மலிங்கம் கோபத்துடன் கனகசபையை நோக்கினான்.

"மடையன் மாதிரி கதைக்காதை. பேசாமல் வேலையை பொறுப்பெடு. வேலை தேடி கொழும்புக்கு வந்திருக்கிறாய். வேலையும் கிடைச்சிருக்குது. அதை விட்டுட்டு வெறுங் கையோட ஊருக்கு போகப் போறியோ? சேரிப்புறத்தில இருந்தால் தான் ஊருக்கு காசு அனுப்பலாம் எண்டால் இரன். யாழ்ப்பாணத்தில இப்ப இருக்கிற சூழ்நிலையில எத்தனையோ கஷ்டங்களுக்கிடையில எங்கடை ஆக்கள் போராட்டம் நடத்துற மாதிரி வாழ்க்கையை நடத்த இல்லையா? அது மாதிரி இஞ்சை ஒரு போராட்டம் நடத்தி..... டேய் கனகு, வாழ்க்கையின்ர மற்றப் பக்கத்தையும் பாரன்."

"அந்த சூழ்நிலை வேற. இந்த சூழ்நிலை வேற...... வெக்கம், ரோசம், மானம் எல்லாத்தையும் விட்டுட்டு......"

தர்மலிங்கம் இடைமறித்தான். "எல்லாமே ஒண்டு தான். ஊரில முந்தி 'லைட்' இருந்தது. இப்ப இல்லை. அதுக்காக அங்கை இருந்த ஆக்கள் செத்துப் போயிட்டினமோ? அங்கை இருக்கிற சூழலில எங்கட பெடியள் எல்லாம் மெழுகுதிரி

வெளிச்சத்தில படிச்சு 'பாஸ்' பண்ணி 'வாஸிட்டி'க்கு எடுபடவில்லையோ? சூழ்நிலைக்கு ஏற்ற மாதிரி 'அட்ஜஸ்ட்' பண்ண வேணும். அது தான் வாழ்க்கை. இருட்டில வாழப் பழகினவனுக்கு வெளிச்சத்தில வாழ்றது கஷ்ரமில்லை."

நிரம்பிய யோசனையுடன் கனகசபை வீடு சென்றான். ஏற்கனவே மனதினுள் இருத்தி வைத்திருந்த முடிவுக்கு ஏற்றாற் போல தர்மலிங்கத்தின் யோசனை இருக்க..... தனது கண்களை அவன் திறந்து விட்டமாதிரி கனகசபைக்கு இருந்தது.

ஒரு நிதர்சனமான தீர்மானத்திற்கு வந்தான்.

கனகசபை ஒரு சேரிவாசியானான்.

உபாலியிடம் தனது தீர்மானத்தை கனகசபை வெளியிட, "ஐயாவுக்கு இஞ்ச ஒரு நல்ல இடம் எடுத்துத் தாறன்" என்று சொன்னவன், அவனை உடனே அங்கிருந்து அழைத்துச் சென்றான்.

## (4)

வழிவழியே சேரிப்புறத்தின் விளக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் குப்பைக் கூழங்கள், சாக்கடைகள், குமட்டல் நாற்றங்கள், அழுக்கான பலகை வீடுகள்..... கால்கள், கண்கள், மனம் கூசிய நிலையில கனகசபை நடக்கிறான்.

கடந்த ஒரு மாதமாக உபாலியின் வீட்டில் இருந்த போது இந்தப் பக்கம் ஒரு நாளும் அவன் வந்ததில்லை. உபாலி இருந்த பகுதி பரவாயில்லை என்று சொல்லலாம். இது நரகத்தை ஒத்த இடமாகத் தென்பட்டது. இந்த இடத்திலா அவன் நாளாந்தம் கால்களைப் பதிக்க வேண்டும்? அய்யோ எங்காவது போய் 'ஓ'வென்று அழ வேண்டும் போல் ஓர் எண்ணம் அவனுள் தோன்றியது.

அந்தச் சேரிப்புறத்தில் ஒரு மூலையில் - பொது மலசலகூடத்தில் இருந்து பத்து யார் தூரத்தில், தகர விரிப்பு, பலகை, 'ரயர்', 'பொலித்தீன்' உறை ஆகிய கட்டிடத்திற்கு ஒவ்வாத பொருட்களுடன் வீடு என்ற பெயரில் குடியிருப்பு ஒன்று

தென்படுகிறது.

"ஐயா, ரண்மெனிக்கேயின்ர வீடு இது. இந்த இடத்திற்கு முதல் முதலாக என்னோட வந்த ரண்டு குடும்பத்தில இதுவும் ஒண்டு" எனற உபாலி, "மெனிக்கே, மெனிக்கே" என்று உச்சஸ்தொனியில் கத்தினான்.

ஓர் ஆஜானுபாகுவான, தடித்த, கறுப்பு நிறத் தோற்றத்தில், அரைகுறை உடையில் ஐம்பது வயது மதிக்கத்தக்க பெண் ஒருத்தி வெற்றிலை வாயுடன் வெளியே வந்தாள். அவளை நோக்கிய போது..... அடிவயிற்றில் 'ஏதோ' ஒன்று புறப்பட்டு, தொண்டையில் அடைத்தது போன்ற உணர்ச்சி.......

"மெனிக்கே, இந்த ஐயாவுக்கு ஒரு இடம் வேண்டும். உனது 'மாளிகையில்' இடம் இருக்கிறதா?" என்று சிரித்தபடியே உபாலி சிங்களத்தில் கேட்க, அவள் கனகசபையை மேலும், கீழுமாக நோக்கி ஓர் அசிங்கமான பார்வையை விசிறுகிறாள்.

கனகசபையின் முகத்தில் ஒட்டியிருந்த 'நல்லெண்ணெய்த் தன்மையை' அவள் மோப்பம் பிடித்துவிட்டாள் போலும். "யாழ்ப்பாணமா?" எனக் கேட்கிறாள்.

'ஓமோம்' எனப் பக்குவமாகத் தலையாட்டினான் கனகசபை.

"வயது எவ்வளவு?"

சொன்னான்.

"நாற்பத்தைந்து என்றால் பரவாயில்லை. 'பொலிஸ்' பிரச்சனை இருக்காது..... சிங்களம் தெரியுமா?"

"சுமாராகப் பேசுவேன்."

மீண்டும் ஓர் அசிங்கமான பார்வை. "இங்கு கண்களைத் திறப்பதை விட கண்களை மூடி இருக்க வேண்டும். உன்னால் முடியுமா?"

"நாங்கள் ஊரில் வாயை மூடிக் கொண்டு தான் இருக்கிறனாங்கள். கண்களை மூடுவது அவ்வளவு கஷ்டமில்லை."

ரண்மெனிக்கே சிலேடையாகப் புன்னகைத்தாள். "இடம் தரலாம். வாடகை ஐநூறு. சின்ன 'அட்வான்ஸ்' வேண்டும்.

ஆறாயிரம் தந்தால் போதும்."

"ஆறாயிரமா?"

"சிங்களம் புரியும் தானே?"

பலிகடாவான நிலையில் நின்ற கனகசபை, 'சரி' எனத் தலையாட்டினான்.

"இங்கே 'பாத்ரூம்' இல்லை. குளிக்க குழாயடிக்குத் தான் போக வேண்டும். கக்கூஸ் அது தான்" என்றவள் பொது மலசலகூடத்தைக் காட்டுகிறாள். "இஷ்டமா?"

மலசலகூடத்தைத் திரும்பிப் பார்க்கிறான் கனகசபை. பாழடைந்த நிலையில் அது காட்சியளிக்கிறது. அதைப் பார்க்கும் போதே துர்நாற்றமொன்று அவன் மூக்கைத் தடவிக்கொண்டு செல்கிறது. மனம் நிறையவே குமைகிறது.

ஊரில் இருந்து கொண்டு வந்த பணத்தில் ஆறாயிரம் ரூபாவை அவளிடம் நீட்டினான். அவள் மேல் சட்டைக்குள் அதைச் செருகினாள்.

பதினேழு, பத்தொன்பது, இருபத்தினான்கு என்ற வயது மதிக்கத்தக்க மூன்று இளம் பெண்கள் வீட்டினுள் இருந்து வெளியே வந்தார்கள். அவளது பிள்ளைகளாம். ஒவ்வொருத்தியும் ஒவ்வொரு முகவெட்டையும், நிறத்தையும், தோற்றத்தையும் கொண்டிருந்தனர். ஒருத்தியுமே தாயைப் போல திகழவில்லை.

ரண்மெனிக்கேயின் புருஷன்காரன் ஒரு குடிகாரனாம். அவளுடன் கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு போய்விட்டானாம். இடைக்கிடை நிறைவெறியில் வந்து, ஒரு யுத்தத்தைப் புரிந்து நாலைந்து சட்டி, பானைகளை உடைத்து, வீட்டை ஒரு ஆட்டு ஆட்டுவித்து விட்டு, அவளது கழுத்தையோ, பிள்ளைகளின் கழுத்தையோ, கைகளையோ அலங்கரிக்கும் நகையொன்றை உருவியபடி கத்திக்கொண்டு போய்விடுவானாம்.

ஆண்வர்க்கத்தினரை தனது அடித்தொண்டையின் உறுமலின் மூலம் அடிபணிய வைக்கும் திறன் கொண்ட ரண்மெனிக்கே, புருஷனைப் பொறுத்தளவில், பெட்டிப் பாம்பாகத் தான் திகழ்ந்தாளாம். பிள்ளைகளும் காட்டுக் கூச்சல் போட்டாலும், அவன் நிறைய தூஷண வார்த்தைகளை வெளியிட்டு, அவர்களை

அடக்கிவிடுவானாம். இதெல்லாம் பின்னாளில் உபாலி சொன்ன சில்லறைச் சமாச்சாரங்களில் ஒன்று. நல்ல வேளை கனகசபை அங்கிருக்கும் நாட்களில் அவன் அங்கு வரவில்லை.

சுனீதா, சுதர்மா, சுவர்ணசீலி என்ற அந்த மூன்று பெடிச்சிகளும் ஓரளவு அழகானவர்கள். மூத்தவள் ஒரு சிங்கள தொலைக்காட்சி நாடகத்தில் தலையைக் காட்டி இருக்கிறாளாம். ஏதாவது தொலைக்காட்சி நாடகத்தில் கதாநாயகியாக நடிக்க வேண்டும் என்ற அவா கொண்டவள். புதிய ஹிந்தி, தமிழ் பாடல்களை முணுமுணுத்தபடி, கண்ணாடியில் முகத்தைப் பார்த்து ரசிப்பதில் நிறைய நேரத்தைச் செலவழிப்பாள்.

இரண்டாமவள் மத்திய கிழக்கில் கால்களைப் பதித்துவிட வேண்டும் என்று துடிதுடிக்கிறாள். ஆனால், ரண்மெனிக்கே அவளின் கனவுகளை நசுக்கிவிடுவாள். இதனால் தாய்க்கும், மகளுக்கும் இடையில் நள்ளிரவு வரை வாக்குவாதம் ஏற்பட்டு, பலகைச் சுவரில் மகள்காரி மாறிமாறி உதைப்பதுடன், வாக்குவாதம் நிறைவுறும். அப்படி உதையும் போது கூரையில் இருந்து 'பொல பொல' என தூசியும், புழுதியும் கீழே உதிர்ந்து கனகசபையை அபிஷேகம் செய்துவிடும்.

மூன்றாமவளுக்கு இராணுவத்தில் சேர வேண்டும் என்ற ஆசை. ஆனால், உயரம் போதாததினால், அந்த ஆசை நசுங்கிவிட்டது. சுவர் முழுவதும் பத்திரிகைகளில் வெளிவந்த இராணுவ வீரர்களின் புகைப்படங்களை ஒட்டி வைத்து, மணிக்கணக்கில் அவற்றைப் பார்த்து, வீரத்தை உள்ளூர வளர்த்துக் கொண்டிருந்தாள். கனகசபையைக் கண்டால் சுடுவது போல் பாசாங்கு செய்வாள். இடையிடையே "'கொட்டியா'" என்று கத்தி பற்களைக் கடிப்பாள்.

அந்த வீடு பலகைகளினால் இரு அறைகளாக பிரிக்கப்பட்டிருந்தது. வாசல் பக்கம் 'ஹோல்' போன்றது. மறுபுறம் குசினி சக படுக்கை அறை அமைப்பைக் கொண்டது. கனகசபைக்கு 'ஹோல்' தான் தங்குமிடம். உடைந்த கதிரையொன்றில் தனது 'டிரவலிங் பாக்'கை வைத்தான். உடுப்புக்களை இன்னொரு கதிரையில் போட்டான். நிலம் தான் படுக்கை. கிழிந்த பாயொன்று நீட்டப்பட்டது.

காலையில் நான்கு மணிக்கே விழித்துவிடுவான். விடியும் வேளையிலேயே குழாயடியில்- ஊர் கோவில் அன்னதானத்தை நினைவூட்டும் வகையில் ரகளை தொடங்கிவிடும். பொது மலசலகூடத்திற்குப் போய் காலைக் கடன்களை அவசரத்துடனும், அருவருப்புடனும்,' அரைகுறையாகவும், அக்கம், பக்கத்தைக் கூட பார்க்காமல் முடித்து, வீட்டை விட்டு காலை ஆறு மணிக்கு புறப்பட்டால், இரவு எட்டு மணிக்கு மூன்று மணி நேர 'ஓவர் ரைம்' முடித்துவிட்டுத்தான் வருவான்.

"ஐயா, ஏன் இவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கிறீங்கள்?" ஒரு நாள் ரண்மெனிக்கே நோக்கமின்றிக் கேட்டாள்.

"என்ன செய்யுறது? காசு உழைக்க வேண்டும் என்றால் கஷ்டப்படத்தானே வேண்டும்? எனது சம்பளத்தை நம்பி ஊரில் மூன்று ஜீவன்கள் இருக்கின்றன" என்றான் அவன்.

"அதுக்காகவா இப்படி......." அவள் பெருமூச்செறிந்தாள்.

ரண்மெனிக்கே குடும்பத்தினருக்கு எப்படி வருமானம் வருகிறது? சீவியத்திற்கு என்ன செய்கிறார்கள்? நான்கு பெண்களுமே வீட்டில் முடங்கிக் கிடந்தார்கள். மகள்மாரின் கனவுகள் அவர்களுக்கு ஒரு சதத்தைக் கூட அளிக்காது. வீட்டில் இருந்த சொற்ப மணி நேரத்தில் துப்பறிவாளனாகச் செயல்பட்டும், ஒரு பிரயோசனமும் இல்லை.

சில நாட்களுக்கு மூத்தவள் சுனிதா கண்ணாடிப் பக்கம் தென்படமாட்டாள். இது கனகசபையை உறுத்தி, அவனுள் உசாவுகையை உட்தள்ளியது.

"அவள் எங்கே?" என்று கேட்பான். தாயும், இரு மகள்மாரும் மூன்று வித்தியாசமான பதில்களை வெளிப்படுத்துவார்கள். துப்பறிவதை விடவில்லை. புலன்களை விழிப்புடன் வைத்திருந்தான். ஒரு முறை கொள்ளுப்பிட்டியில் வைத்து சுனிதாவைக் கண்டு விடுகிறான். ஒரு வயதான பேர்வழியுடன் நட்சத்திர 'ஹொட்டேல்' ஒன்றில் இருந்து சிரித்த முகத்துடன் வெளியே வருவதைக் காண...... மாலையில் அவளிடமிருந்து 'பர்.ஃபியூமின்' வாசனை வர....... எல்லாவற்றையும் கூட்டிக் கழிக்க, அவளால் ஆற்றப்படும் தொழிலை இலகுவில் அனுமானித்துவிடுகிறான்.

இப்படி இலகுவாக பணம் சம்பாதிக்கும் போது ஏன் தன்னை அங்கு வைத்திருந்து ஐநூறு ரூபாவுக்கு கை நீட்டுகிறாள் ரண்மெனிக்கே? உபாலி விளக்கமளித்தான்.

"நீங்கள் அவங்களுக்கு ஓர் ஆம்பிளைத் துணைதானே?"

"நானோ? நான் ஒரு அரைக்கிழவன்" என்று கனகசபை சிரிக்க, "கிழட்டுப்பிள்ளை எண்டாலும் ஆண்பிள்ளை தானே?" என்று அவன் பதிலுக்குச் சிரிக்க........

சுனீதாவின் நடத்தை கனகசபைக்குள் ஓர் அருவருப்பு உணர்வை ஏற்படுத்திவிடுகின்றது.

அதே வேளை பல எதிர்மறையான நிகழ்வுகளும் நடந்தன.

இரவு எட்டு மணிக்கு அரை வயிற்றை நிரப்பிவிட்டு வீடு வந்தால், பதினொரு மணிக்கு படுக்கைக்கு போக மட்டும் அவன் படும்பாடு........ நுளம்புக் கூட்டத்தின் கிணுகிணுப்பு...... கக்கூஸ் நாற்றம்...... சங்கீதத்தின் உச்ச ஒலிகள்...... குடித்துவிட்டு கும்மாளம் போடுபவர்கள் ஒரு பக்கம்..... ஒருவருடன் ஒருவர் வாக்குவாதப் படுவோர் மறு பக்கம்....... தூஷணை வார்த்தைகளின் பிரயோகங் களுக்கும் குறைவில்லை.

வீட்டுக்குள் கிடந்தால் வெட்கையின் அவியல், வெளியே வந்தால் அண்டை அயலவர்களின் வார்த்தைப் பிரயோகங்களின் உஷ்ணங்கள்....... இவற்றையும் மீறி சந்தேகப் பார்வைகள், 'கொட்டியா' என்று எத்தனை பேர் பழித்திருப்பார்கள்!

ஞாயிற்றுக்கிழமை வேலைக்குப் போகாமல் வீட்டில் இருந்தால் அது பிரசவ வேதனையை விட ஒரு படி மேல், சாப்பிட வெளியே போய்விட்டு வந்தால் அண்டை அயலில் உள்ள சிறுவர், சிறுமிகள், இளைஞர்கள் அவனைக் கேலியாக நோக்கும் போது....... நிறையவே தலைகுனிவு உணர்வு. குற்றம் செய்யாத குற்றவாளி என்ற நிலை...... 'வாழ்க்கை என்றால் நியதி இல்லை. அதை எப்படியாவது 'அட்ஜஸ்ட்' செய்து வாழப் பழக வேணும்' என்று நண்பன் தர்மலிங்கம் கூறும் வார்த்தைகள் அடிக்கடி ரீங்காரமிடுவதனால், தன்மானத்தை, உணர்ச்சிகளை, புலன்களை, கஷ்டங்களை, வெட்கத்தை, கௌரவத்தை என்று பலவற்றை உணர்ந்தும், உணராத நிலையில் - மனதை ஒரு நிலைப்படுத்தி வாழ்ந்தே தீருவது என்ற முடிவில் வாழ்நாட்களைக் கழித்தான்.

அந்நாட்களில் நிம்மதி அவனிடம் இருந்து விடைபெற்றிருந்தது. மகிழ்ச்சியின் அர்த்தம் புரியவில்லை. ஏக்கம், ஏமாற்றம் ஆகியனவே அவனைப் போர்த்தியிருந்தன. வாழ்க்கையின் மீதிருந்த பற்று அகன்றுவிடுமோ என்ற நிலையில் தவித்தான்.

என்ன செய்வோம் என மனம் குழம்பினான். எத்தனை நாட்களுக்கு பற்களைக் கடித்து, உணர்ச்சிகளை மடக்கிக் கொண்டிருப்பது? அவனும் மனிதன் தானே? கூனிக் குறுகி வாழ்ந்தால் அவனுள் குறுகிய மனப்பான்மை ஏற்படாதா? வாழ்க்கையில் பற்று அறுந்துவிடாதா? தவறான முடிவை எடுத்துவிட்டேனோ என்றெல்லாம் எண்ணி வருந்தினான்.

மங்களத்திடம் இருந்து கடிதங்கள் வருகின்றன. இறுதியாக எழுதிய கடிதத்தில், இப்போது ஊரில் நிலைமை சீர்திருந்தி விட்டதாகவும், ஊருக்கு வந்தால் மீண்டும் கமத்தைக் கவனிக்கலாம் எனவும் குறிப்பிட்டிருந்தாள். ஊரில் இப்போது 'இராணுவ ஆட்சி' நடந்து கொண்டிருக்கிறதாம்.

ஒரு நாள் முழுவதும் மங்களத்தின் கடிதத்தை ஆராய்ந்தும் ஒரு முடிவுக்கு வரத் தடுமாறினான். இறுதியில் தர்மலிங்கத்திடம் யோசனை கேட்டான். கனகசபை எண்ணியதிற்கு மாறாக தர்மலிங்கம் கருத்து வெளியிட்டான்.

"இப்ப ஊர் நிலைமை பரவாயில்லை எண்டு ஆக்கள் சொல்லினம். 'கரண்ட்' குடுத்திட்டாங்களாம். பசளையும் விநியோகிக் கிறாங்களாம். உனக்குப் போக விருப்பம் எண்டால் போவன். அங்கை கமத்தைக் கவனிக்கலாம்" என்று சொல்ல, மல்சிரிவத்தவின் நினைவை மறப்பது என அவன் தீர்மானிக்கிறான்.

வேலையை ராஜினாமா செய்தான் கனகசபை. கப்பலில் பயணமாகி ஊருக்குப் போனான்.

அவனைக் கண்டு மங்களம் பூரித்துப் போனாள். கண்ணீர்விட்டாள். விழுமிய உணர்ச்சியின் உச்சக்கட்டத்தில் தவித்தாள். "இப்படி மெலிஞ்சிட்டீங்களே! எங்களுக்கு உழைச்சு தரவேணும் எண்டதுக்காக உங்களையே உருக்கிவிட்டீங்களே" என்று சொல்லி, இரண்டு நாட்களாக மூக்கை உறிஞ்சினாள். அவளைப் பார்க்க கனகசபைக்கே பாவமாக இருந்தது. தனக்கு கொழும்பில் கிட்டிய 'மறக்க முடியாத அனுபத்தை' அவளிடம்

இருந்து மறைத்துவிட்டான்.

ஊர் நிலைமை சீர்திருந்தின மாதிரி இருந்தது. எல்லாமே சகஜமாகிவிட்டது போன்ற ஒரு சூழ்நிலை உருவாகியிருந்தது. கெடுபிடி நிலைமை அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதை அவன் கண்ணுற்றான். கண்ணுக்குத் தெரிந்த இடமெல்லாம் இராணுவத்தினர். 'புதியதொரு கலாசாரம்' முளைவிட முனைவதை உணர்ந்தான். ஆனாலும், யாவற்றையும் தலைக்குள் புகுத்தி, வாழ்க்கையில் தடுமாற அவன் விரும்பவில்லை. கமத்தைத் தொடர்ந்து செய்து, தமது பொருளாதார வளத்தைக் கட்டி எழுப்புவோம் என்று கற்பனைக் கோட்டைகளை வளர்த்தான்.

மங்களம் அவனது உடம்பைத் தேற்றுவதற்காக பனங்காய் பணியாரம், சர்க்கரைப் பொங்கல், ஒடியல் மா புட்டு, உளுத்தம் களி, எள்ளுப் பாகு என்று பாரம்பரிய போஷாக்கு உணவுகளை அவனுக்கு ஊட்டினாள். அவன் சாப்பிடுவதையே கண் கொட்டாமல் பார்த்து அதில் உவகைகொண்டாள்.

"இனி எங்களை விட்டுட்டு கொழும்புக்கு போயிடாதேங்கோ அப்பா" என்று மூத்தவள் தாரிணி நிறையத் தடவைகள் அன்பு உத்தரவுகளைப் பிறப்பிக்கிறாள்.

"ஓமோம் அப்பா" என இளையவள் ஒத்துப்பாடுகிறாள்.

கமத்தில் இருக்கும் போது மல்சிரிவத்தவின் நினைவுகள் மனதைத் தட்டிப் பார்க்கும். சுனீதா புன்னகையுடன் வலம் வருவாள். ரண்மெனிக்கேயின் ஆஜானுபாகுவான தோற்றம் மனதில் மின்னலடிக்கும். சுவர்ணசீலி அவனைச் சுட்டுத் தள்ளுவது போன்றெல்லாம் விடிகாலைக் கனவு. உபாலியின் உபசரிப்பு கண்முன் நர்த்தனமாடும். எல்லா நினைவுகளும் மனதில் நிறைய - சிக்கல் நிலையில் விதம்விதமான ஓவியங்கள்.

மல்சிரிவத்த என்ற அந்த சேரிப்புறக் குடியேற்றத்தில் கனகசபை ஆறு மாதங்களே வாழ்ந்தான். இந்த ஆறு மாதங்களும் - தனது வாழ்நாட்களில் அடையாத பல கசப்பான சம்பவங்களுக்கு முகம் கொடுத்து விட்டான். இப்படியும் வாழ்ந்து விட்டேனே என்று

எத்தனை தடவைகள் சிந்தித்து, மனம் வருந்தியிருப்பான்?

நூற்றி அறுபத்திரண்டு குடும்பங்கள் அந்தச் சின்னஞ்சிறு பூமியில் அந்தரங்கங்களை அந்தரங்கங்களாகப் பேணிக் காக்க முடியாமல் எத்தனை பெருமூச்சுக்களை விட்டு ஒவ்வொரு நாட்களையும் கழித்திருக்கும்! அவர்கள் மனிதர்களாக வாழவில்லை. சேற்றிலும், குப்பை மேட்டிலும் வாழும் ஏதோ ஒரு ஜந்துவாக...... தமது உணர்ச்சிகளை தேவையேற்படும் போது நிறைவேற்ற முடியாதவர்களாக.... சே! வயதானவர்களின் வெப்ப பெருமூச்சுக்குள் அவர்களது பிள்ளைகளே வெந்திருக்கும்.

கமத்தில் தண்ணி 'மெஷின்' ஓடியது. இரண்டு சில்லு 'டிரக்டரும்' ஓடியது. பசளையும் தாராளமாக வந்திறங்கியது.

மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு என்று உப உணவுப் பயிர்கள் முளைவிட்டன. கனகசபைக்கு வஞ்சனை செய்யாமல் பச்சைப்பசேலென செழித்து வளர்ந்து அவன் பிரயாசைக்கு முட்டு கொடுத்து....... நான்கு மாதங்களில் அறுவடைக்கு பயிர்கள் தயாராகும். உற்பத்திகளைக் கொழும்புக்கு அனுப்பலாம். நிறைய காசு வரும். எத்தனை கனவுகள்.......

கோயில் மணி அடிக்கும் போதெல்லாம் கடவுளை நிறையவே நினைத்துப் பார்த்தான். மனமுருகக் கும்பிட்டான். சூரன் போரின் போது சூரனைத் தூக்கினான்.

அறுவடைக் காலம் நெருங்க.......

ஒரு விடிகாலை ஓர் இராணுவச் சுற்றி வளைப்பு. இருபது இளைஞர்களுடன் சேர்த்து அவனையும் கைது செய்துவிட்டார்கள்.

தயக்கத்துடன் காரணத்தைக் கேட்டான். "நீ கொழும்பில் இருந்து வந்திருக்கிறாய். நீ ஒரு ஒற்றன் என சந்தேகிக்கிறோம்." ஆள்காட்டி விரலை பல தடவைகள் ஆட்டினான், அந்த இராணுவ வீரன்.

மங்களம் கதறி அழுதாள். பிள்ளைகள் கண்ணீர் மல்கினார்கள். இராணுவத்தினரின் மனம் கரையவில்லை. 'கடமையைத் தான் செய்கிறோம்' என்ற பாணியில் செயல்பட்டனர்.

கனகசபை 'டிரக்'கில் ஏற்றப்பட்டான். பருத்தித்துறை முகாமில் ஆரம்ப விசாரணை. யாழ்ப்பாண நகரில் மேல்

விசாரணை. அவர்கள் திருப்திப்படவில்லை. காங்கேசன்துறை கொண்டு சென்று கப்பலில் ஏற்றிவிட்டார்கள். எல்லாம் ஒரு கனவு போல......

கப்பலில் நிறைய இளவயதினர். ஆண்கள், பெண்கள் என்ற பாகுபாடு இல்லை.

எல்லோரும் கனகசபையை விசித்திரமாக நோக்கினார்கள். பரிதாபம், பச்சாதாபம் என்று சில உணர்ச்சிகள் அவர்களிடம் நிறைந்திருந்தன. 'அண்ணா பாவம்' என்ற நக்கலும் வெளிப்பட்டது.

கப்பல் காலியில் நங்கூரமிட்டது. 'பஸ்'சில் ஏற்றப்பட்டார்கள். களுத்துறை சிறையில் கொண்டு போய் அடைத்தார்கள் கால்நடைகளைப் பட்டியில் அடைப்பது போல......

கனகசபையின் நாமத்துடன் பயங்கரவாதச் சந்தேக நபர் என்ற நாமமும் இணைந்தது.

சிறிய கூடத்திற்குள் அவனுடன் பத்துப் பேரை அடைத்தார்கள். அக்கூடத்திற்குள்ளேயே முழு நாளும் அடைந்து கிடக்க வேண்டும். ஒரே வெட்கை, வியர்வை ஆறாக வழியும். எந்நேரமும் சலத்தின் மணம் எங்கிருந்தோ வந்து மூக்கைத் துளைக்கும். நுளம்பும் கருணை காட்டாது. ஒருவர் தும்மினால் மற்றவர் மீது எச்சில் பரவும். கரப்பொத்தான் கூட்டம் கூட்டமாக வந்து அவர்கள் உடல்கள் மீது ஓட்டம் பிடிக்கும். நுள்ளான்களும் கடித்துக் குதறும். ஒவ்வொரு நாளும் பித்தம் வெளியேறியது. சலமும் எரிவுடன் வெளியேறியது. காலை வேளைகளில் வாந்தி எடுத்தான். கண் பார்வையும் மங்கியது. தலையிடியும் இடைக்கிடை தலை காட்டியது.

மல்சிரிவத்தவில் ரண்மெனிக்கேயின் வீட்டில் கிடந்திருக்கலாம் என்று எத்தனை தடவைகள் எண்ணியிருப்பான். சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கப் போய்.........

# (5)

களுத்துறை சிறைச்சாலையில் இருந்து கனகசபையை விடுதலை செய்து விட்டார்கள்.

"உன்னை ஏன் தான் கைது செய்து யாழ்ப்பாணத்தில் இருந்து களுத்துறைக்கு கொண்டு வந்தார்களோ என்று தெரிய வில்லை. அநியாயம், அக்கிரமம். அரசாங்கப் பணத்தில் சிறிதளவை ஏப்பம் விட்டுட்டாய்" என்று தலைமை அதிகாரி பிரேமரத்ன அவனைக் கேலி கலக்க தூஷித்த போது.......

கனகசபைக்கு கடும் கோபம். பிரேமரத்னவின் கழுத்தை நெரித்து விட வேண்டும் என்ற ஆழமற்ற கொலை வெறி. 'அடோ, ஏன்டா என்னைப் பிடிச்சு வந்தீங்கடா. என்ர விளைச்சல் பாழ். என்ர சமூக வாழ்வு பாழ். என்ர குடும்ப கௌரவம் பாழ். என்னையும், என்ர குடும்பத்தையும் அநியாயமாகப் பிரிச்சுப் போட்டீங்களடா' என்று பிரேமரத்னாவை ஏச வேண்டும் என ஆவேசம் அவனுள் கிளர்ந்த போது...... அதனால் ஒரு பிரயோசனமும் ஏற்படப் போவதில்லை என்று அவனுக்குப் புரிந்தது. வெறுமனே உணர்ச்சியற்ற புன்னகை ஒன்றை அவன் இலேசாக உதிர்க்க, அவன் உள்ளத்தினுள் கிடந்த அப்பாவித்தனத்தை தனது அனுபவத்தின் வாயிலாக அறிந்தவர் போல, அவன் முதுகில் பிரேமரத்ன தட்டிக் கொடுத்தார்.

"கவலைப்படாதே. உனக்கு இப்பொழுதாவது விடுதலை கிடைத்தது. அது நீ செய்த புண்ணியம். இங்கு எந்தவொரு விசாரணையும் இன்றி, உனது வயதை ஒத்தவர்கள் வருடக் கணக்காக கிடக்கிறார்கள். நீ அதிர்ஷ்டசாலி. இன்று போயா தினம். கொழும்புக்கு போகும் வழியில் களுத்துறை மகா போதியைக் காண்பாய். புத்த பெருமானை மனதார வழிபடு. அவர் உனக்கு வழி காட்டுவார்."

கனகசபை மௌனத்தின் தற்குறியாக நின்றான். மங்களத்தின், பிள்ளைகளின் பரிதாப முகங்கள் தான் மனதில் இறுக்கமாகத் தொங்கின. அவன் துணையின்றி, வருமானத்திற்கு வழிதெரியாமல், ஊரவர்களின் வசைமொழிகளின் மத்தியில் அவர்கள் என்ன பாடுபட்டிருப்பார்கள்?

கனகசபை கைது செய்யப்பட்ட போது, அவன் பயிர்கள் அறுவடைக்கு தயாராகி இருந்தன. புதிய பூமி, நேரகாலத்திற்கு பசளையின் விசிறல், கிருமிநாசினியின் தெளிப்பு, அளவான நீர்ப் பாய்ச்சல். பயிர்கள் செழித்து நல்ல விளைச்சலுக்கு கட்டியங்கூறின. மங்களம் பூரிப்பில் மிதந்தாள்.

“கொழும்பில, அந்த சேரிப்புறத்தில அரைவயிறும், கால் வயிறுமாகக் கிடந்து உழைக்கிறதை விட, இப்படி விளைச்சலைப் பெருக்கி, அதில வாற ஆதாயத்தில வாழ்றது எவ்வளவு சந்தோஷம்.....” என்று காற்றின் வேகத்திற்கு வளைந்தும், நிமிர்ந்தும் கண்களுக்கு ரம்மியத்தை ஊட்டிய பயிர்களில் மனதைப் பறி கொடுத்தபடி மங்களம் கூற, கனகசபை மெல்லச் சிரிக்கிறான்.

“மாரி மழை சரியாகப் பெய்ய வேணும். நேர காலத்திற்கு விதைக்க வேணும். பயிரைக் கிருமி, பூச்சி தாக்காமல் இருக்க வேணும். தேவையான அளவு பசளை, பூச்சிமருந்து தேவையான நேரத்தில கிடைக்க வேணும். இடைநடுவில வரட்சி வரக்கூடாது. அப்பத் தான் நல்ல விளைச்சலை எதிர்பார்க்கலாம். ஏதாவது ஒண்டு பிழைச்சால்..... ஆதாயமும் இல்லை. போட்ட முதலும் இல்லை...... கொழும்பிலையே வேலை பார்க்கலாம் எண்ட நினைப்புத்தான் அப்ப வரும்” என்று புன்னகை மாறாமல், கனகசபை கூறுகிறான்.

“கொழும்பில வேலை? இஞ்சருங்கோ. இனியும் கொழும்புக்கு போறதை கனவிலையும் நினைச்சுப் பார்க்காதேங்கோ. ஒருக்கால் அங்க கிடந்து பட்டபாட்டை நீங்கள் சொன்னனீங்கள் தானே? நுளம்பு ஒரு பக்கம், கொசு இன்னொரு பக்கம், நாத்தம் மற்றொரு பக்கம்..... விளைச்சல் எங்கட கையைச் சுடமாட்டாது எண்டு எனக்கு ஒரு நம்பிக்கை இருக்குது. நாங்கள் எல்லாரும் ஒரு இடத்தில இருக்கிறது தான் எனக்குச் சந்தோஷம்.” மங்களம் நிறையவே வார்த்தைகளுக்கு அழுத்தம் கொடுத்திருந்தாள்.

“உம்மட நம்பிக்கை வீண் போகாது. கொஞ்சக் காலத்துக்கு கொழும்பை மறப்பம்.”

இருட்டிக் கொண்டு வர, “போவமே? என மங்களம் கேட்கிறாள்.

"சரி......"

மங்களத்தை 'சைக்கிளில் டபிள்' ஏற்றிக் கொண்டு கனகசபை வருகிறான். வழியில் - அந்த அரை இருளில் அவள் இடையில் கிள்ளுவதும், கீச்சு மூச்சுக் காட்டுவதும்....... அவள் அடக்க முடியாமல் பலமாகச் சிரிப்பதும்......

அன்றிரவு அவன் நெஞ்சில் அவள் தலை வைத்து படுத்திருக்கையில், தோட்டத்தில் நடத்திய சம்பாஷணைக்கு உரமிடுகிறாள். அவள் கூற்றின் சாதக, பாதகங்களை அவன் அலசவில்லை. அவன் வேறோர் உலகில் லயித்திருந்தான்.

நள்ளிரவான போது தான் இருவரும் தூக்கத்தை எட்டிப் பிடித்தார்கள்.

விடிகாலை அவள் 'பதைபதை'ப்புடன் கண் விழிக்கிறாள். கெட்ட கனவு ஒன்று அவள் தூக்கத்தைக் குழப்பிவிட்டது. அவள் நிமிர்ந்து சுற்றும், முற்றும் பார்க்கிறாள். அவன் விழித்து விடுகிறான். 'என்ன, ஏது' என்று விசாரிக்கிறான்.

"இஞ்சருங்கோ, ஒரு கெட்ட கனவு கண்டனான். நல்லா பயந்திட்டன்" என்றவள், அவனை மெலிதாக அணைக்கிறாள்.

"கெட்ட கனவோ? சொல்லுமன்."

அவள் சொல்லத் தயங்குகிறாள்.

"சொல்லுமன்........."

"உங்களை 'ஆமி'க்காரங்கள்......."

"சொல்லுமன்......"

"அதை என்னெண்டு இந்த வாயால சொல்லுவன்....." என்றவள் விம்முகிறாள்.

அந்த விம்மலின் அர்த்தம் அவனுக்குப் புரிகிறது. "பயப்படாதையும். அப்படி ஒண்டும் எனக்கு நடக்காது."

"எனக்கெண்டால் பயமாக இருக்குது."

"நான் அரைக் கிழவன். வயசு நாற்பத்தைந்தாகுது. என்னை ஒண்டும் செய்யமாட்டாங்கள்."

கனகசபை உறங்கிவிட்டான். மங்களத்தை தூக்கம் அரவணைக்கத் தவறியது. அவள் உள்ளம் வேதனையில் ஊறியிருந்தது.

விடிந்துவிட்டது. அக்கம், பக்கத்து நாய்கள் விடாமல் குரைத்தன.

வீதியில் 'பூட்ஸ்'களின் ஒலி.........

கனகசபை எழும்பி, ஜன்னலினூடாக பார்வையை வெளியே ஓடவிடுகின்றான்.

வீதியில் இராணுவத்தினரின் சிலமன் தென்படுகிறது.

கனகசபையின் நெஞ்சு 'திக்'கென்றது. மங்களம் கூறியவைகள் நினைவுக்கு வர, பயம் நீட்டி நிமிர்கிறது.

மங்களமும் எழுந்துவிடுகிறாள். வீதியில் நின்ற இராணுவ வீரர்களை அவள் காண்கிறாள். "'ஆமி'......" என்று கத்தியேவிடுகிறாள்.

"சத்தம் போடதையும்....."

அவளுள் கலவரம் முளைத்துவிடுகிறது. கனகசபையின் கையை வாஞ்சையுடன் பற்றி, தன் நெஞ்சில் பதிக்கிறாள்.

நான்கு இராணுவ வீரர்கள் இவர்களின் வீட்டினுள் பிரவேசிக்கிறார்கள். வீடு முழுவதையும் சுற்றிப் பார்த்தார்கள். இதற்கிடையில் மூத்தவள் தாரிணியும், இளையவள் சுமதியும் எழுந்துவிட்டனர். இருவரையும் பத்து வயதுக்குள் அடக்கலாம். இராணுவ வீரன் ஒருவன் வெகு சுவாரஷ்யமாக அவர்களை நோக்கினான்.

இராணுவ வீரர்கள் கட்டில்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தார்கள். மேசை லாச்சிகளைத் துருவினார்கள். அலுமாரிகளில் கிடந்த உடுப்புக்களை வாரி இறைத்துப் போட்டார்கள்.

மங்களம் எல்லாவற்றையும் பதறிய நெஞ்சுடன் பார்த்தபடி நின்றாள். கனகசபை சினத்தின் உச்சியில்.......

வீட்டைச் சோதனையிட்ட பின், கனகசபையை விசாரித்தார் கள். நிறைய கேள்வி கேட்டான் ஓர் இராணுவ வீரன். அவன் ஒரு 'சார்ஜன்ட் மேஜர்' என்பதைப் பிற்பாடு கனகசபை அறிந்தான்.

"கொழும்பில் எங்கு வேலை செய்தாய்?" ஒருமையில் விளித்து 'சார்ஜன்ட் மேஜர்' அவன் தாய்மொழியில் கேட்டான்.

தனியார் நிறுவனத்தின் பெயரைச் சொல்லி, அங்கு பணி புரிந்ததாகக் கூறுகிறான்.

"அங்கு எங்கு தங்கியிருந்தாய்?"

"கிராண்ட்பாஸில் மல்சிரிவத்த....."

"மல்சிரிவத்த? அது ஒரு சேரிப்புறம். அப்படித் தானே?"

கனகசபை வெறுமனே தலையாட்டினான்.

'சார்ஜன்ட் மேஜர்' வீட்டை ஒரு முறை அதிசயமாக நோட்ட மிடுகிறான். "நீ ஒரு கௌரவமானவன் போல தோற்றமளிக்கிறாய். வீடும் வசதியாக இருக்கிறது. ஏன் அந்த பயங்கரமான சேரிப் புறத்தில் தங்கியிருந்தாய்?"

"உண்மைதான். இது வசதியான வீடு. நான் கௌரவமானவன் தான். ஆனால், எனக்கு கொழும்பில் கிடைத்த சம்பளத்தில் ஊருக்குப் பணம் அனுப்புவதென்றால் என்னால் வசதியாக வாழமுடியாது. சேரிப்புறத்தில் வாழ்ந்தால் தான் பணத்தை அனுப்பலாம். அதனால் அங்கு வாழ்ந்தேன்."

"பொய், நான் நம்பமாட்டேன். நீ ஒரு ஒற்றன். இல்லாவிடில் 'குடு'காரரும், 'கஞ்சா'காரரும் வாழும் அந்த இடத்தில் தங்கி யிருக்கமாட்டாய். பணத்தை மீதப்படுத்தி, ஊருக்கு அனுப்ப வேண்டும் என்பதற்காக உனது ஆத்ம கௌரவத்தை நீ இழக்க விரும்பமாட்டாய். எனக்கு யாழ்ப்பாணத்து ஆட்களைத் தெரியும்."

தனது விதியை அந்த 'சார்ஜன்ட் மேஜர்' புதுவிதமாக நிர்ணயிக்கப் போகிறான் என்று கனகசபைக்குப் புரிகிறது. "'சேர்'" என்று விளித்து, தனது பக்க நியாயத்தை அவன் எடுத்துரைத்தான். ஆனால், 'சார்ஜன்ட் மேஜர்' அவற்றைக் கவனத்தில் எடுக்கத் தவறினான்.

# (6)

மங்களம் விம்மி அழ, பிள்ளைகள் கண்ணீர் மல்க, இராணுவத்தினர் கனகசபையை 'ட்ரக'கில் தூக்கிப் போட்டார்கள். "நான் அப்பாவி. எனக்கு ஒன்றும் தெரியாது" என்று கனகசபை வாதாடிய போதும், இராணுவத்தினரின் மனம் கரையவில்லை. அவனை மேல் விசாரணை என்று கூட்டிச் சென்றுவிட்டார்கள்.

பருத்தித்துறை முகாமில் விசாரித்தார்கள். அவர்கள் திருப்தி கொள்ளவில்லை. யாழ்ப்பாண நகரிலும் விசாரணை நடத்தினார்கள். அவர்களுக்கு பதில் சொல்லியே அவனுக்கு அலுத்துவிட்டது. இறுதியாக, "நீ பயங்கரவாதி தான்" என்ற நாமத்தை சூட்டியவர்கள், காங்கேசன்துறைக்கு கூட்டிச் சென்று, கப்பலில் ஏற்றிவிட்டனர்.

கப்பலில் நிறைய இளவயதினர். ஆண்கள், பெண்கள் என்ற பால்நிலை பாகுபாடு இல்லை. யாவரும் புலி சந்தேக நபர் களாம். கனகசபையை எல்லோரும் விசித்திரமாக நோக்கினார்கள். "அண்ணே பாவம்" என்று பலர் நக்கலும் செய்தார்கள்.

கனகசபை ஒருவருடனும் ஒரு வார்த்தை கூட அளவளாவவில்லை. வேதனையின், ஆத்திரத்தின் உச்சியில் நின்று அவதியுற்றான். அவனுள் பழி வாங்கும் உணர்ச்சி நிரம்பி வழிந்தது. ஆனால், அவ்வுணர்ச்சியை வெளிப்படுத்துவதனால் ஏற்படும் எதிர்மறையான நிகழ்வினை எண்ணி, அவன் மௌனத்தினுள் நுழைந்தான்.

இரு நாட்கள் கழிய கனகசபையும், இளைஞர்களும் களுத்துறை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர். எல்லோரையும் விட கனகசபையே அங்கு வேதனையில் திகழ்ந்திருப்பான்.

முதல் நாள் ஒருவருடனும் அவன் பேசவே இல்லை. இரண்டாம் நாள்தான் அவன் வாலிபன் ஒருவனுடன் அளவளா வினான். அந்த வாலிபனும் கனகசபையின் ஊர் தான். 'ஏ.எல' பரீட்சையை முடித்த பின், வேலை வெட்டி இன்றிக் கிடந்தான். இராணுவ வீரர்கள் கேட்ட கேள்விகளுக்கு அவனால் ஒழுங்காகப்

பதில் அளிக்க முடியவில்லை. அவன் திக்குவாயன் என்பதே அதற்கான காரணம். இராணுவத்தினருக்கு சந்தேகம் வந்துவிட்டது. விளக்கமறியலற்ற சந்தேக நபராக அவனையும் சேர்த்துவிட்டனர்.

அவனுடன் அளவளாவிய போது கனகசபைக்கு அது ஒரு புது அனுபவமாக இருந்தது. திக்கித் திக்கி அவன் அளவளாவிய போது, பரிதாபமாகவும் இருந்தது.

மற்றைய இளைஞர்கள் இடையிடையே கனகசபையுடன் அளவளாவினார்கள். அரசியலையிட்டு கருத்துப் பரிமாறினார்கள். இயக்கங்களின் வரலாறுகளை அலசினார்கள். மனித உரிமைகள் பற்றி ஆராய்ந்தார்கள். இடையிடையே 'சினிமா'வையும் கலந்தார்கள்.

இரவு வேளைகளில் கேட்கும் அலறல் சத்தங்கள் கனகசபையின் மனதினுள் அமைதியின்மையைத் திணித்துவிடும். அங்குள்ள இளைஞர்களில் சிலரை விசாரணைக்கென்று கூட்டிச் சென்று, அவர்களைச் சித்திரவதை செய்கிறார்கள் என்பதைக் கனகசபை புரிந்தான். இவ்வாறான ஓர் இழிநிலைக்கு தானும் முகம் கொடுக்க வேண்டுமா என்ற சஞ்சலமும் அவனுக்குள் நுழைந்து, அவன் மனதை உருட்டிப் பிரட்டியது.

மங்களத்தின், பிள்ளைகளின் நினைவுகள் அடிக்கடி கனகசபையின் மனத் திரையை தட்டி, அவன் உணர்ச்சிகளைக் கசக்கிப் பிழிந்தன. இனி அவர்களை எப்பொழுது காண்பேனோ என்றெல்லாம் உருகினான். தனது துணை இல்லாமல் அவர்கள் என்ன பாடுபடுகிறார்களோ எனக் கலங்கினான். வருமானம் ஒன்றும் இல்லாமல் ஒவ்வொரு நாட்களையும் கழிப்பதற்கு மங்களம் என்ன செய்வாள் என்றெல்லாம் எண்ணினான்.

ஒரு தடவை அவன் கொழும்பில் வேலை செய்த போது ஊருக்குப் பணத்தை அனுப்பச் சற்றுத் தாமதமாகிவிட்டது. அச்சமயத்தில் ஊரிலும் பணத்திற்குத் தட்டுப்பாடு. மங்களம் தனது காப்புக்களை அடகு வைத்து, பணத்தைப் புரட்ட முயன்றாள். ஆனால், எவருமே கடன் கொடுக்க மறுத்துவிட்டார்கள். இறுதியில் வேறு வழியின்றி காப்புக்களை விற்பதற்கு முடிவெடுத்திருந்தாள். நல்ல வேளையாக கனகசபை அனுப்பிய பணம் வந்து சேர,

அவள் தனது தீர்மானத்தைக் கைவிட்டாள்.

இந்தத் தடவை அவனால் பணம் அனுப்ப இயலாது. அவனுக்கு ஒரு வருமானமும் இல்லை. அவன் இன்னும் அந்தச் சிறைக்கூடத்தில் எவ்வளவு காலம் இருக்கவேண்டும் என்று அவனுக்கே தெரியாது. அவனுக்கு விடுதலை கிடைத்து, மீண்டும் ஒரு தொழில் கிடைத்தால் தான் வருமானம் கிட்டும். அதில் ஒரு பகுதியைத் தான் மங்களத்திற்கு அனுப்பலாம்.

எப்பொழுது அவனுக்கு விடுதலை கிடைக்கும்? மூன்று மாதங்கள் கடந்த போதும் அவனுக்கு விடுதலை கிட்டவில்லை. 'விசாரணை முடிந்த பின் உன்னை அனுப்பி விடுவோம்' என்று சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவர் சொன்னார். அவருக்கு சிறிதளவு தமிழ் தெரிந்திருந்தது. அவருடன் கனகசபை தமிழில் உரையாடினான். 'தர்மே மாத்தையா' என்று எல்லோரும் விளித்ததினால், கனகசபையும் அவ்வாறே அழைத்தான்.

அவர் தான் அவனுக்கு வெளியுலகில் நடக்கும் புதினங்களை வெளியிடுவார். உள்ளூர் புதினங்களை வடிகட்டாமல் சொல்வார். அங்கு தாக்குதல், இங்கு தாக்குதல், இத்தனை 'ஆமிக்காரர்' பலி, அத்தனை புலி இயக்கத்தினர் பலி என்ற தகவலை எல்லாம் எடுத்துரைப்பார்.

அவரிடம் ஒவ்வொரு தடவையும் கனகசபை கேட்கும் கேள்வி: "எப்பொழுது எனக்கு 'ரிலீஸ்'?"

"அது அந்தக் கடவுளுக்குத் தான் வெளிச்சம்." தர்மே அலுக்காமல் கூறுவார்.

ஒரு நாள் மகிழ்ச்சியுடன் வந்தார்.

"உங்களை விடுதலை செய்யப் போகிறார்கள்" என்று அவர் சொல்ல, கனகசபைக்கு மட்டற்ற மகிழ்ச்சி! கண்களில் நீரெல்லாம் வந்துவிட்டது. அன்று முழுவதும் மங்களத்தின், பிள்ளைகளின் நினைவு அவன் மனதைவிட்டு அகலவே மறுத்தது. கூடவே எதிர்காலத்தை எவ்வாறு எதிர்நோக்குவதென்ற திக்குமுக்கான நிலை. என்ன செய்வது?

# (7)

களுத்துறை சிறையில் இருந்து கனகசபை வெளியேறுகிறான். காட்டில் கண்களை கட்டிவிட்ட நிலையில் அவன்.

எங்கு செல்வது?

யாழ்ப்பாணம்? அந்த எண்ணம் கசந்தது. இதயத்தைத் தப்படிக்க முற்பட்டது.

கொழும்பு? வெறுப்புக்குள் சினம். அவை மறைய ஒரு துயரம். அது மங்க ஒரு சின்ன பசுமை. அதில் நிலவு காய்ந்தது. வெளிச்சம் கோடிட்டிருந்தது.

கொழும்பில் எங்கே நிழலை நாடுவது?

ரண்மெனிக்கே சுற்றிச் சுழன்றாள். சுனீதா, சுதர்மா, சுவர்ணசீலி என்று மூவருமே அவனுக்கு சாமரம் வீசுவது போல...... ஆழமாகவன்றி, நுனிப்புல் நிலையில் ரண்மெனிக்கேயின் வீட்டுக்குப் போவதென முடிவெடுக்கிறான். அங்கிருந்தபடி ஒரு தொழிலைத் தேடுவோம். பணம் சேர்ந்த பின் அங்கு தொடர்ந்தும் இருப்பதா, இல்லையா என்று முடிவு எடுப்போம் எனவும் முடிவெடுக்கிறான்.

ஊருக்குப் போகத் தேவையில்லை. அங்கு சென்றால் ஊரவர்கள் அவனைப் பார்த்து நகைப்பார்கள்.

தொழில் கிடைக்கும் வரை அவனுக்கு சாப்பிடுவதற்கு பணம் தேவைப்படும். கழுத்தில் தொங்கும் பவுண் சங்கிலியை அடகு வைக்கலாம், அல்லது விற்கலாம்.

கொழும்பை அடைந்து மல்சிரிவத்தவை அடைகிறான். ரண்மெனிக்கேயின் குடியிருப்பைத் தேடிச் செல்கிறான். தகர விரிப்பு, பலகை, 'ரயர்', 'பொலித்தீன்' உறை என்ற பெயரில் கிடந்த அவள் குடியிருப்பு உருமாறி இருக்கிறது. அது இப்பொழுது கல் வீடாகக் காட்சியளிக்க, அவனுள் ஆச்சரியம் விரிகிறது.

புதுமை உணர்வுடன் கனகசபை வீட்டை அடைகிறான்.

கதவைத் தட்டுகிறான். ரண்மெனிக்கே வந்தாள். ஆஜானுபாகுவான, கறுப்பு நிறத் தோற்றத்துடன், பார்க்கவே சகிக்க முடியாத கோலத்தில் கிடப்பவள், சற்று வெளுறி இருந்தாள். முகத்தில் செல்வக் களை. உடைகளில் நேர்த்தி.

கனகசபையை அடையாளம் கண்டவள், அவனுக்கு வரவேற்பு கொடுக்கிறாள். ஆச்சரியம் கலையாத நிலையில் கனகசபை உள்ளே செல்கிறான்.

அந்தக் குடியிருப்பின் 'ஊத்தையான பண்டங்கள்' யாவும் 'மாயமாகி' இருந்தன. புத்தம் புதிய மரத்தளபாடங்கள், மின்சார உபகரணங்கள் அவனை ஈர்த்தெடுக்கின்றன. வறுமையின் நாற்றம் இல்லை. செல்வத்தின் வாசனையே நிறைய.

"ஐயா, என்ன இந்தப் பக்கம்?" ரண்மெனிக்கே குசலம் விசாரிக்கிறாள்.

நடந்தவற்றை எவ்வித ஒளிவுமறைவின்றி சொல்கிறான் கனகசபை. அவன் பேச்சில் அவள் அரைகுறை கவனத்தையே செலுத்தி இருந்தாள். 'யாரோ' ஒரு நடுத்தர வயது மனிதன் வர, அவரை உள்ளே அழைத்துச் சென்றாள். பின்னர் பணத் தாள்களை எண்ணியபடி அவனிடம் வந்தாள்.

"சரி, உங்களுக்கு இப்பொழுது என்ன வேண்டும்" என இறுதியில் கேட்டாள்.

"இங்கு தங்குவதற்கு இடம் வேண்டும்."

"இங்கு?" அவள் கண்மணிகளைப் போட்டு உருட்டுகிறாள்.

"ஆம்"

"ஏன்?"

"உன்னைத்தான் எனக்கு நன்றாகத் தெரியும்."

"உபாலி.........."

"அவனைத் தொந்தரவு செய்ய விரும்பவில்லை. ஒரு நாள், இரண்டு நாட்கள் என்றால் பரவாயில்லை........"

"இங்கு மாதக்கணக்கில் தங்க உத்தேசமா?"

"இரண்டு, மூன்று மாதங்கள்......"

"அப்படியென்றால் பரவாயில்லை. இங்கேயே தங்கலாம். வீட்டுக்குள்ளேயே மலசலகூடம் இருக்கிறது." ரண்மெனிக்கேயின் முகத்தில் பெருமை.

முன் பணத்தைப் பற்றி, வாடகை பற்றி ஒரு வார்த்தையும் இல்லை.

அவள் பார்வை பல திக்குகளை வலம் வருகின்றது.

முன் அறையில் நிறைய தட்டு முட்டுச் சாமான்கள் கிடந்தன. அந்த அறையில் தங்கலாம் என்கிறாள்.

சுனிதா வந்தாள். சற்றுப் பெருத்திருந்தாள். அவளிடம் இருந்து வியர்வை நாற்றத்துடன் சேர்ந்து செயற்கை வாசமும் வந்தது. கவர்ச்சியான அரைகுறைப் புன்னகையை உதிர்த்தாள். நான்கு சொற்களைக் கொட்டிவிட்டு சென்றாள். நாகரீகத்தின் ஏதோ ஒரு படிக்கட்டில் அவள் நின்றாள்.

சுவர்ணசீலி "'அடோ கொட்டியா'" என்று கத்திக் கொண்டே வந்தாள்.

"உனக்கு இராணுவத்தில் வேலை கிடைக்கவில்லையா?" கனகசபை கேட்டான்.

"இல்லை. அப்படிக் கிடைத்தால் முதலில் உங்களைத் தான் சுடுவேன்" என்று காட்டமாகச் சொல்லி விட்டுச் சென்றாள்.

"சுதர்மா எங்கே?" கனகசபை கண்களைத் திசைதிருப்ப, "அவள் மத்திய கிழக்குக்கு போய்விட்டாள்" என்கிறாள் ரண்மெனிக்கே.

"பணம் அனுப்புகிறாளா?"

"இல்லை. ஒரு மாதம் மட்டும் அனுப்பினாள். இப்போது ஒரு சாரதியைக் கலியாணம் முடித்திருப்பதால், எங்களை மறந்துவிட்டாள்."

ரண்மெனிக்கேயின் குரலில் சிறிதளவும் வருத்தம் இல்லை.

இரவு பிறக்கத் துடித்தது.

கனகசபைக்கு பசித்தது. எப்படியோ சங்கிலியை அற்ப சொற்ப விலைக்கு விற்றுவிட்டு, அதில் கிடைத்த பணத்தில் வயிற்றை நிரப்பினான்.

உபாலியைத் தேடிச் சென்றான்.

கனகசபையைக் கண்டு உபாலி திகைத்துவிட்டான்.

"ஐயா, என்ன இந்தப் பக்கம்?"

கனகசபைக்கு கண் கலங்கிவிட்டது. நடந்தவற்றை அவனுக்கும் ஒப்புவித்தான்.

"ரொம்ப காலத்திற்கு மெனிக்கேயின்ட வீட்டில தங்க வேணாம்."

ஏன் என்று கனகசபை கேட்கவில்லை.

வீடு திரும்பினான்.

விறாந்தையில் இரு இளம் பராயத்தினர் அமர்ந்திருந்தனர். அவனை ஒரு தினுசாக நோக்கினர். கனகசபைக்கு அவர்களின் பார்வையின் அர்த்தம் புரியவில்லை. ரண்மெனிக்கே ஓர் இளைஞனை உள்ளே கூட்டிச் சென்றாள்.

கனகசபை தனது அறைக்குச் சென்றான். பழைய, ஊத்தையான கட்டில் ஒன்று கிடந்தது. அதில் சரிந்தான்.

நுளம்புகள் அவனைத் தாராளமாக வட்டமிட்டன. நுளம்புத் திரியைப் பற்ற வைத்தும் ஒன்றிரண்டு அவனைப் பதம் பார்த்தன. கரப்பொத்தான்கள் விமானமாகப் பறந்து திரிந்தன.

ஜன்னல் இல்லாத அறை. காற்று இல்லை. வியர்வை உடலெல்லாம் வழிந்தது. முழு உடம்பும் அரிப்பெடுத்தது.

தூக்கம் வர மறுத்தது.

மட்டையை விசிறியாக்கியும் பிரயோசனம் இல்லை.

தாகம் அடிக்கடி எழுந்தது. வெளியே வர நிறைந்த தயக்கம். குகைக்குள் புகுந்துவிட்ட உணர்வு.

இரவெல்லாம் நித்திரை இல்லை. முன் கதவு அடிக்கடி தட்டப்பட்டது. கதவு திறக்கப்படும் சத்தம், மூடப்படும் சத்தம், வரவேற்பளிக்கும் ரண்மெனிக்கேயின் குரல், புதிய குரல்கள்....... 'இருக்கிறாளா', 'எவ்வளவு' என்ற சொற்பதங்கள்......

கோர்வையற்ற கனவுகள். மங்களம், பிள்ளைகள்...... துப்பாக்கிகளுடன் இராணுவத்தினர்........ களுத்துறை வாலிபர்கள்..... அந்த திக்குவாயன்.......

விடியற்காலை தான் கனகசபை சிறிது தூங்கினான். மீண்டும் கண்விழிக்க ஒன்பது மணியாகிவிட்டது.

சிறிது நேரமாக வாழ்க்கையில் நிறைந்த வெறுப்பு. தலைமயிரை நிறையவே குழப்பினான். அக்குதொக்கான சிந்தனைகள். சினமும் நெருங்கி வந்தது.

எல்லாவற்றையும் களைந்தான். வாழவேண்டும். உணர்வலைகளை மடக்கினான். மனதை ஒரு நிலைப்படுத்தினான். முன்னுரிமைகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றுவோம் என முடிவெடுக்கிறான்.

வேலை தேடி கொழும்பைச் சுற்றினான். அவன் முயற்சி பயனளிக்கவில்லை.

'செத்த நிலை'யில் வீடு திரும்பினான். மீண்டும் அதே நித்திரையற்ற இரவு.

நள்ளிரவு வேளை 'படபட'வென்று முன் கதவு தட்டப்படும் சத்தம். ரண்மெனிக்கே அலறும் சத்தம். "அடிக்காதீங்க, அடிக்காதீங்க........."

"வாடி இங்கே" என்று 'யாரோ' அதட்டுகிறார்கள்.

கனகசபை தலையை வெளியே நீட்டிப் பார்க்கிறான். பொலிசார்! அவனுக்குப் 'பகீ'ரென்றது.

"டேய்! நீ யாரடா?" என 'சப்-இன்ஸ்பெக்டர்' கேட்க, இவன் 'பேந்தப் பேந்த' முழிக்கிறான். பேச்சு தொண்டைக்குள் இறுகிவிட்டது.

ரண்மெனிக்கேயின் முகத்தில் நிறைந்த தவிப்பு..... அரைகுறை ஆடைகளில் சுனீதா. பக்கத்தில் ஓர் இளைஞன். பின்புறமாக சுவர்ணசீலி, நித்திரைக் கண்களுடன்.

எல்லோரையும் 'ஜீப்'புக்குள் ஏற்றினார்கள்.

"டேய்! நீயா இவர்களுக்கு 'மாமா'?" என்று 'சப்-இன்ஸ்பெக்டர்' அடிக்கடி கேட்டான்.

கனகசபையையும், வாலிபனையும் ஒரு கூண்டில் அடைத்தார்கள். ரண்மெனிக்கே, சுனீதா, சுவர்ணசீலி ஆகியோரை இன்னொரு கூண்டில் அடைத்தார்கள்.

இரவு இரவாக நுளம்புக் கடி. கரப்பொத்தானின் தாராள வலம் வருகைகள். ஒரே வெட்கை. சிறுநீரின் நாற்றம். புலன்களுக்கு நிறையவே சித்திரவதை.

களுத்துறை சிறைச்சாலை மனத்திரையாக விரிய...... அந்த 'நரகத்தில்' தென்றல் வீசும். இனிய தமிழ் வார்த்தைகளைக் கேட்கலாம். திக்குவாய் இளைஞன் தடக்கி தடக்கிப் பேசுவதைச் சுவாரஷ்யமாக கேட்கலாம்.

ஏன் எனக்கு களுத்துறை சிறையில் இருந்து விடுதலை கிடைத்தது?

கனகசபை ஒரு முறை விம்மி, விம்மி அழுதான்.

## (8)

கோட்டை ரயில் நிலையத்தின் முன்னால் தூசியும், புழுதியும் நிறைந்திருந்த இடப்பரப்பை ஈக்களான நிலையில் மொய்த்திருந்த சனக் கூட்டத்தினர் அகன்றுவிட்டனர். இப்பொழுது இரவு நேரம். ஒரு சிலர் தேவையின் நிமித்தம் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பரம்பிக் கிடக்கின்றனர்.

வாகனங்களால் அசுத்தமடைந்திருந்த சூழல் மெல்ல,

மெல்ல பழைய நிலைக்கு திரும்ப திக்குமுக்காடியது. கடைகளின் கதவுகள் பலவாறான ஒலிகளை வெளிப்படுத்தியபடி மூடப்படுகின்றன. ரயில் நிலையத்தின் மின் விளக்குகள் சில அணைய, இருள் சிற்சில இடங்களை அரவணைக்கின்றது.

அமைதிக்கு அப்பிரதேசம் கட்டுப்பட முயல, காதைப் பிளக்கும் 'ஹோர்ன்' சத்தத்துடன் 'பஸ்' ஒன்று புழுதியைக் கிளப்பியபடி விரைய, மூக்கினுள் ஓர் அரிப்பு.

கனகசபை மூன்று முறை அடுத்தடுத்து தும்மினான். அவன் மூக்கு எரிந்தது. சளியும் வெளிப்பட்டது. கைக்குட்டையால் மூக்கை அழுத்தித் துடைத்தான்.

எதிரே உயரத்தில் கிடந்த 'ரயில்' நிலைய மணிக்கூட்டுக் கோபுரத்தைப் பார்க்கிறான். பதினொரு மணி தளம் போட தயாராகிறது.

கடந்த நான்கு மணிநேரமாக அவன் அங்கு நிற்கிறான். சிந்தனைக் குழப்பம். வயிற்றுப் பசி. உடலின் பல பாகங்களில் வலி. பார்வையில் அனாமதேயத்தன்மை.

இனி என்ன செய்வது என்ற கேள்வியின் விசுவரூபத்தில் அடிமையாகிக் கிடக்கிறான்.

சற்று முன்னர் ஓர் இளம்பெண் அவனை நெருங்கி 'வியாபாரச்' சிரிப்பொன்றை உதிர்த்து, கண்களால் கதை பேசினாள். அவளை அவன் அருவருப்புடன் நோக்கினான்.

கன்னங்கரேலென்ற நிறத்திலானவள். முப்பது வயதுக்குள் அடங்கும் சதைப்பிடிப்பான உடல்வாகு. ஏதோ அசிங்கமான நிறத்தில் மார்பு தெரியும் வரையிலான மேற்சட்டை. கீழே பாவாடை மாதிரி ஏதோ நீளமாக ஒன்று. முன் வரிசைப் பற்கள் நீட்டி...... வியர்வையின் நாற்றம்....... அதை அமுக்குமாப் போன்ற மூன்றாந்தர 'சென்ட்'டின் நறுமணம்!

கனகசபை முகத்தைத் திருப்பிவிட்டான்.

அவன் அங்கு நின்ற நிலையில் அவனுக்கு அவள் மூலம் கிடைக்கும் இன்பம் தேவைப்படவில்லை. 'அதை' இலவசமாக வழங்கி, தடிப்பமான பஞ்சணைக்கு இட்டுச் சென்றாலும், அந்தப் 'பசி' அவனை நெருங்காது. அவன் மனம் இறந்துவிட்டது. உடல்

மரத்துவிட்டது. உணர்ச்சி நரம்புகள் எங்கெல்லாமோ தொலைந்து விட்டன. நடைப்பிணம் போன்ற நிலையில் அவன்.

அவனுக்கு இப்பொழுது அடைக்கலம் அவசியப்பட்டது. எங்காவது தங்குவதற்கு ஒரு நிழல் தேவை. அதை விடிகாலையில் இழந்துவிட்டான்.

'பொலிஸ்' நிலையத்தில் அவனது வாக்குமூலத்தைப் பதிவு செய்த 'பொலிஸ்'காரன் என்னமாய் ஏசினான்? நீ என்று ஒருமையில் விளித்தான். 'அடோ', மாடு, எருமை போன்ற வார்த்தைகளை எவ்வித தயக்கமும் இன்றி வெளிவிட்டான்.

"எனக்கும், அவள் செய்யும் வியாபாரத்திற்கும் எதுவித சம்பந்தமும் இல்லை" என்று கனகசபை பல தடவைகள் சிங்களத்தில் அழுத்தம் திருத்தமாக சொல்லியும் அதை 'பொலிஸ்'காரர்கள் நம்பவில்லை.

"நீ தான்டா இவர்களின் 'மாமா'....... யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து ஏன்டா இந்த மாதிரி எளிய தொழிலில் ஈடுபடுறாய்?" என்று கேட்டு 'சார்ஜன்ட்' பெரேரா அவனைக் கன்னத்தில் ஓங்கிற மாதிரி பாவனை செய்தான்.

கனகசபை வாயை அடக்கிவிட்டான். காலையில் இருந்து அவன் உண்மையை அவர்களுக்குத் திரும்பத் திரும்ப சொல்லியே அலுத்துவிட்டது.

"நீ கௌரவமானவன் போலத் தெரிகிறாய். அதால உன்னைக் கூட்டுக்குள்ளை இருந்து வெளியிலை கொண்டு வந்து இந்த வாங்கிலிலை உட்கார வைச்சிருக்கிறோம்" என்று ஹனிபா என்ற 'சப்-இன்ஸ்பெக்டர்' சொன்னான்.

கனகசபை தலையை உயர்த்திய வேளை எல்லாம் அவன் எதிரே இருந்த கூண்டுக்குள் ரண்மெனிக்கே, சுனீதா, சுவர்ணசீலி ஆகியோருடன், விஜிதாவும் நிற்பதைக் காண்கிறான். அப்பாவி போல முகத்தை வைத்துக்கொண்டு விஜிதா இவனையே பார்த்துக் கொண்டிருக்கிறாள். கனகசபை தம்மைப் பார்க்கும் போதெல்லாம் சுவர்ணசீலி நாக்கை நீட்டி பழிப்புக் காட்டினாள்.

முதல் நாள் நள்ளிரவுக்குப் பின் நித்திரை இல்லை. அவனுக்கு நித்திரை கண்களைச் சுழற்றியது. பசியும் வந்தது.

'பசிக்குது' என்று சொன்னால் சாப்பாடு தருவார்களா? கருணைமிக்க 'பொலிஸ்'காரர்கள் அங்கு தென்படுகிறார்களா என கண்மணிகளைச் சுழட்டினான். ஒரு பெண் 'கான்ஸ்டபிள்' சற்று கருணைமிக்க முகத்தை வைத்திருப்பது மாதிரி தெரிந்தது. அவளைக் கண்களால் வரவழைத்து தனது கோரிக்கையை பவ்வியமாக விடுத்தான்.

"இங்கே பாருங்கள். என்னிடம் இந்த மனிதன் சாப்பாடு கேட்கிறான்" என்று சொல்லி அந்தப் பெண் 'கான்ஸ்டபிள்' அட்டகாசமாகச் சிரித்தாள்.

"டேய், 'ஓ.ஐ.சி.' ஐயா கேள்விப்பட்டால் ஒண்ட காலை முறிச்சுப் போடுவார்" என்று ஹனிபா கூச்சல் போட்டான்.

கனகசபைக்கு விஷயம் சரிவரப் புரியவில்லை.

"டேய், அவங்களைத் தான் 'ஓ.ஐ.சி' ஐயா கலியாணம் முடிக்கப் போறார்." பிற்பாடு ஹனிபா அந்த விஷயத்தை புட்டு வைத்தான்.

நல்ல வேளை உதை கிடைக்கவில்லை என்று கனகசபை நினைத்தான்.

இடையிடையே சுனீதா வெளியே போய்விட்டு வந்தாள். ஒரு மூலையில் ஒல்லி 'பொலிஸ்'காரன் ஒருத்தன் அவளுடன் நெருக்கமாக - அவள் முகத்துக்கு நேரே முகம் வைத்து இரகசியம் பேசினான். அவள் புன்னகைத்தாள். வெட்கப்பட்டாள். அவள் கன்னத்தை அவன் கிள்ளி, பின்புறத்யையும் தட்டிவைத்தான்.

அந்த 'பொலிஸ்'காரனுடன் 'அடோ, மோடையா, புரூவா' என்றெல்லாம் ரண்மெனிக்கே குழைவாகப் பேசினாள். அவர்களுக்கு அவன் சாப்பாடும் நீட்டினான்.

பத்து மணியாகியது.

நான்கு இளம் பையன்களைக் கைது செய்து வந்து கனகசபைக்கு அருகில் அமரவைத்தார்கள். ஒருவனின் நெற்றியில் திருநீறு நீண்டிருந்தது. எல்லோருமே சாரம் அணிந்திருந்தனர். 'யாழ்ப்பாண முகங்கள்'.

கனகசபைக்கு அவர்களை அங்கு கொண்டுவந்ததுக்கான

காரணம் புரிந்தது. அவர்கள் 'சந்தேக நபர்கள்' என்ற வகுதிக்குள் அடக்கப்படுவார்கள். ஒரு குற்றமும் செய்திருக்கமாட்டார்கள். ஒரு வேளை 'பொலிஸ்'காரர்களுக்கு 'லொட்ஜ்' முதலாளி வழமையான மாமூலை நீட்டியிருக்கமாட்டார். அது அவர்கள் செய்த குற்றமே!

கனகசபை துணிந்து அவர்களுடன் கதைக்கிறான். ஒருத்தன் சரளமாகப் பேசினான்.

கொச்சிக்கடையில் ஏதோ ஒரு மூலையில் கிடந்த 'லொட்ஜ்' வாசிகள் அவர்கள். மட்டக்களப்பின் மண்ணுக்குச் சொந்தமான வர்கள். 'ஐ.டி.' இருந்தது. 'பொலிஸ்' பதிவு இருந்தது. 'வெளிநாட்டு க்கு போவதற்கு காத்திருக்கிறோம்' என்று சொன்னார்களாம் 'பரவாயில்லை 'வேனிலை' ஏறுங்கோ' என்று உடுத்த உடுப்புடன் ஏற்றிவிட்டார்களாம். வாலிபனின் தகவல் இவை.

"உங்களை ஏன் பிடிச்சவங்கள்?" அந்த இளைஞன் கேட்டான்.

"சந்தேகமாம்." பொதுப்படையாகச் சொன்னான் கனகசபை.

அவனை இளைஞனின் கண்கள் ஆராய்ந்தன. "உங்களையும் பிடிச்சிருக்கிறாங்களே."

கனகசபை மௌனமாக இருந்து தன் 'நிரபராதித்துவத்தை' நிரூபிக்க முயன்றான்.

"ஏன் உங்களை பிடிச்சவங்கள்?" இளைஞன் விடுவதாக இல்லை.

கனகசபை மாட்டிவிட்டான். சொல்லியாக வேண்டும். சொன்னான்: "சொன்னாலும் வெட்கம், சொல்லாவிட்டாலும் துக்கம்." கனகசபை இறுக்கமாகச் சமாளித்துவிட்டான்.

இளைஞன் மெல்லப் புன்னகைத்தான். "தமிழனா பிறந்தால் வெட்கத்தை விட வேணும். துக்கத்தை மறக்க வேணும்."

அவன் வேதாந்தியா?

'சார்ஜன்ட்' பெரேரா வந்தான்.

"அடோ, எல்லாரும் கூட்டுக்குள்ளை போங்கடா" என்று சொல்லி அருகில் நின்ற 'கான்ஸ்டபிளை' சிங்களத்தில் திட்டிவிட்டுச்

சென்றான். அந்த 'கான்ஸ்டபிள்' மானஸ்தனாக இருக்க வேண்டும். கூண்டைக் கஷ்டப்பட்டு திறந்து, நான்கு இளைஞர்களையும் அதற்குள் தள்ளி பூட்டைப் போடுகிறான்.

கனகசபையுடன் பேச்சுக்கொடுத்த இளைஞனுக்கு கனகசபையை உள்ளே தள்ளாததிற்கான காரணம் புரியவில்லை. அவன் பிரமிப்புடன் கனகசபையைப் பார்த்தபடி இருந்தான்.

கனகசபையின் பசி அடங்கவில்லை. இடையிடையே தலை நீட்டியது. நித்திரையும் கண்களைச் சுழட்டியது.

தன் தலைவிதியை நொந்து அவனுக்கு அலுத்துவிட்டது. ரண்மெனிக்கேயின் வீட்டில் தங்குவதற்கு என எடுத்த தீர்மானத்தை யிட்டு மனம் வருந்தினான்.

ஓர் இக்கட்டான, சிக்கலான சூழ்நிலைக்குள் அகப்பட்டு விட்டோம். இனி இதில் இருந்து மீள்வதற்கு முன் அவன் கௌரவம், மானம் பறந்துவிடும். அவனுக்கு விடுதலை கிடைத்தாலும், அவன் மீது ஒட்டப்பட்டிருக்கும் அபாண்டப் பழி நீங்காது. அது நீடித்துக் கொண்டே இருக்கும். மங்களத்திற்கு தகவல் பறக்கும். அவள் நெற்றிக் கண்களை காட்டும் நிலையில் சிடுமூஞ்சியாக ருத்திர தாண்டவம் ஆடுவாள்.

'டேய், கொழும்பிலை இந்தத் தொழிலையோ செய்யுறாய்?' நண்பர்கள், உறவினர்கள் அச்சொட்டாக இப்படித் தான் கேட்பார்கள்.

மறுத்தாலும், அவர்கள் நம்பமாட்டார்கள்.

'உன்னை கையும், மெய்யுமாகப் 'பொலிஸ்'காரங்கள் பிடிச்சிருக்கிறாங்கள். பொய் சொல்லாதை. எத்தனை நாள் 'ரிமாண்டிலை' கிடந்தனி. 'பொலிஸ்'காரங்கள் அடிச்சவங்களோ? எவ்வளவடா தெண்டக் காசு கட்டினனி? இதால எவ்வளவு உழைச்சனி?.........'

நாக்கை வாள் கொண்டு அறுக்கத் தேவையில்லை. வெறும் வார்த்தைகளால் அறுத்துவிடுவார்கள்.

நண்பகல் நெருங்கியது.

அவனுக்கு தலை 'விண்விண்' என்று இடித்தது.

நேரம் நகர கண்களில் மயக்க உணர்ச்சி.

அவனால் தங்கிக் கொள்ளமுடியவில்லை.

கண்களை மூடினான்.

நித்திரை அவனை மறக்கச் செய்தது. தலை இப்படியும், அப்படியும் சரிந்தது. நிறையவே சரிய, வாங்கிலில் இருந்து விழுந்துவிடுகிறான்.

நாடியில் இருந்து ரத்தம் கசிந்தது.

'பொலிஸ்'காரர்கள் இருவர் உரத்துச் சிரித்தார்கள். ரண்மெனிக்கே கையைத் தட்டியபடி சிரித்தாள். "அடோ கொட்டியா" என்று சுவர்ணசீலி கத்தினாள்.

கனகசபைக்கு வெட்கம் நிறையவே வந்துவிட்டது. வெகுளியாகச் சிரித்தான். நாடியைத் துடைக்கக் கூட கைக்குட்டை இல்லை. கையால் தடவியபடி இருந்தான்.

இரண்டு மணியாகியது.

பொறுப்பதிகாரி மிடுக்குடன் வந்தார். தன் அறைக்குச் சென்றார். நிறைய தடவைகள் மணியடித்தார். யார் யாருக்கோவெல்லாம் ஏசினார். 'ஹறி சேர்' என்று எல்லா 'கான்ஸ்டபிள்'களும் சலாம் போட்டார்கள்.

பொறுப்பதிகாரி வெளியில் வந்தார். ஏகாந்தப் பார்வையுடன் ஆண்கள் இருந்த கூண்டுக்குள் சென்றார். இளைஞர்களைக் கண்களால் மேய்ந்தார். ரண்மெனிக்கேயின் வீட்டில் கைதான இளைஞனை நோட்டமிட்டார்.

"உனக்கு எத்தனை வயது?" என அவ்விளைஞனை பொறுப்பதிகாரி கேட்டார்.

"இருபது."

"இந்த வயதில் உனக்கு பொம்பளை வேண்டுமா?" என்று கேட்ட பொறுப்பதிகாரி சிங்கள தூஷண வார்த்தைகளை உபயோகித்து அவனை ஏசினார்.

அவன் மௌனியாக நின்றான்.

அடுத்த கூண்டில் ரண்மெனிக்காவை பொறுப்பதிகாரி

கண்டுவிடுகிறார்.

"'சேர்', தாயும், மகள்களும்........" என்று 'பொலிஸ் கான்ஸ்டபிள்' ஒருத்தன் சொல்கிறான்.

ரண்மெனிக்கேயை பொறுப்பதிகாரி நெருங்குகிறார். "மகள்களுடன் விபச்சாரமா? உனக்கு வெட்கமாயில்லையா?"

ரண்மெனிக்கே ஒரு முறை இளித்து, உடலை குறுக்கி நிமிர்த்தினாள்.

பொறுப்பதிகாரிக்கு வெறுப்பு வந்திருக்க வேண்டும். திரும்பி கனகசபையைத் தாண்டிச் செல்கிறார். சிறிது தூரம் சென்றவர் நின்றுவிட்டு கனகசபையை நோக்கினார். பின், "நீங்கள் எனது அறைக்கு வாருங்கள்" என்கிறார்.

கனகசபை செல்ல, பொறுப்பதிகாரி நாற்காலியில் ஆயாசமாக அமர்ந்திருந்தார்.

"உட்காருங்கள்" என்கிறார் பொறுப்பதிகாரி.

கனகசபை அமர்ந்தான்.

"என்னைத் தெரிகிறதா?"

கனகசபை மேலோட்டமாக நோக்குகிறான். சில வினாடி களைச் செலவிட்டும், அவரை அவனால் அடையாளம் காண முடியவில்லை.

"நீங்கள் முன்னர் காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் தானே பணிபுரிந்தீர்கள்?" பொறுப்பதிகாரி கேட்டார்.

"ஓமோம்."

"அங்கு தான் நானும் பணி புரிந்தேன். உங்கள் பெயர் கனகராஜா தானே?"

"இல்லை கனகசபை."

"ஓ. ஓ..... கனகசபை..... வெள்ளவத்தையில் இருந்து வந்தீர்கள். கொஞ்சக் காலம் தான் வேலை செய்திருப்பீர்கள். பின் 'பென்சன்' வேண்டாம்; வேலை வேண்டாம்; பசுமைப் புரட்சி செய்யப் போறன்' என்று சொல்லி வேலையை உதறி தள்ளி விட்டீங்கள். கிராண்ட்பாஸில் இருந்து உபாலி என்ற ஒரு 'பியூன்'

எங்களுடன் வேலை செய்தான். அவனுக்கு உங்களில் நல்ல அன்பு. நான் சொல்லுறது எல்லாம் சரி தானே?"

பொறுப்பதிகாரியின் பேச்சுக்கள் அவனுள் இனிமையூட்டின. அவனுள் மகிழ்ச்சி ஊற்றெடுக்கின்றது. 'கடவுளே' என்று மனதினுள் கூவியபடி, "நீங்கள் காணி அபிவிருத்தி திணைக்களத்தில் பணி புரிந்தீர்களா?" எனப் பக்குவமாக வினவினான்.

"இரண்டு வருடங்கள் எழுதுவினைஞராக பணியாற்றினேன். அதற்குப் பிறகு தான் 'பொலிஸில்' எனக்கு வேலை கிடைத்தது. 'சப்-இன்ஸ்பெக்டர்', பின் 'இன்ஸ்பெக்டர்'" என்று பொறுப்பதிகாரி சிரித்தார்.

"உங்களுக்கு பெயர் என்ன?"

"ரட்ணாயக்கா."

இந்தப் பெயரைக் கேட்டதும் கனகசபையின் முகம் மலர்ந்தது. "ஓ! இப்பொழுது கொஞ்சம் ஞாபகம் வருகிறது. உபாலியின் வீட்டுக்கு நாங்கள் எல்லோரும் போவோம். அதன் பின் பக்கத்தில் உள்ள மைதானத்தில் குடித்து கும்மாளம் போடுவோம்."

"நீங்கள் சரியாகச் சொல்கிறீர்கள். ஒருமுறை நிறைய குடித்து விட்டு நான் வாந்தி எடுத்தேன். அதன்பின் நீங்கள் எல்லோரும் என்னை அருகில் இருந்த குழாயடிக்கு தூக்கிச் சென்று குளிப்பாட்டினீர்கள்." ரட்ணாயக்கா வாயெல்லாம் பற்களாகச் சொன்னார்.

"இது ஞாபகத்தில் இருக்கிறது." கனகசபையை மகிழ்ச்சி நன்கு அரவணைத்து விட்டது. மகிழ்ச்சி தொடர்ந்த நிலையில், "நீங்கள் இன்னும் திருமணம் செய்யவில்லையா?" எனக் கேட்கிறான்.

"செய்தேன், செய்தேன். ஆனால் அது சரி வரவில்லை." ரட்ணாயக்காவின் முகத்தில் ஒரு சின்ன சோகம்.

"அதைப் பற்றி அறியலாமா?"

"'பொலிஸ்' நிலையத்திற்கு கொண்டு வரப்பட்ட ஒரு விபச்சாரிக்கு வாழ்வு கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன்

அவளைத் திருமணம் செய்தேன். ஆரம்பத்தில் எல்லாம் சுமூகமாக இருந்தது. ஆனால், அவளால் தன் பழக்கத்தை மறக்க முடிய வில்லை. தன் தொழிலைத் தொடர்ந்தாள். இறுதியில் எனக்கு சொல்லிக்கொள்ளாமல் ஓடிவிட்டாள்..... இப்போது இங்கு வேலை செய்கிற ஒரு பெண்ணுக்கு என் மீது காதல் பிறந்திருக்கிறது. எனக்கு அவ்வளவாக விருப்பில்லை. இந்த வயதில் என்ன கலியாணம்?"

கனகசபை ஒன்றும் கூறவில்லை.

உபாலி பற்றி இருவரும் அளவளாவினார்கள். கொழும்பு க்கு வந்தவுடன் அவனுடன் தான் தங்கியிருந்ததாக கனகசபை சொல்கிறான்.

"நீங்கள் இப்பொழுது என்ன செய்கிறீர்கள்?"

கொழும்புக்கு வேலை தேடி வந்த பின் நடந்தவற்றை கனகசபை சுருக்கமாகச் சொன்னான். ரண்மெனிக்கேயின் வீட்டில் தங்கியிருப்பதற்கான காரணத்தை விளக்கினான். வீணாக - அவள் வீட்டில் குடியிருந்த ஒரேயொரு குற்றத்திற்காக தன்னைக் கைது செய்துவிட்டார்களே என சத்தியம் செய்யாத குறையாக முறை யிட்டான்.

"நான் உங்களை நம்புகிறேன். ஏன் இந்த மாதிரியான தொந்தரவான இடத்தில் தங்கியிருக்கிறீர்கள்?"

"வேறு என்ன செய்ய? எமது நாட்டின் பொருளாதார நிலை, இனப்பிரச்சனையின் தாக்கம், கொழும்பின் சனநெருக்கம், வானளாவிய வாடகைக் கட்டணம் என்று எல்லாமே என்னைச் சேரிப்புறத்திற்கு தள்ளிவிட்டது."

"உங்கள் நிலை எனக்குப் புரிகிறது. சரி, உங்களை நான் விடுதலை செய்கிறேன். எனக்கு உங்களைத் தெரியும். உங்களை நம்புகிறேன். ஆனால், இங்கிருந்து எங்கு போகப் போகிறீர்கள்? அந்த தடிச்சியின் வீட்டுக்கா?"

"இல்லை. இல்லை. இனியும் அங்கு போவதை நான் விரும்பவில்லை."

"நன்று. உங்கள் உறவினர்கள் இங்கு இருப்பார்கள். அவர்களது வீட்டில் தங்கி இருங்கள்."

"சரி."

'சார்ஜன்ட்' பெரேராவை அழைத்து, கனகசபையை உடனடியாக விடுதலை செய்யுமாறு ரட்ணாயக்கா உத்தரவிட்டார்.

"சரி, நீங்கள் போய் அங்கு இருங்கள். சிறிது நேரத்தில் விடுதலை கிட்டும்."

கனகசபை மீண்டும் வாங்கிலுக்குச் சென்று அதில் அமர்ந்தான். அவனுக்கு வேதனையிலும் மகிழ்ச்சி தான். விடுதலை கிடைக்கப் போகிறது. அந்தளவில் அவன் புண்ணியவான்தான்.

ரட்ணாயக்கா போய்விட்டார்.

அதுவரை மௌனமாக இருந்த பெரேரா அடையாளப் புன்னகையுடன் கனகசபையிடம் வந்தான்.

"'ஓ.ஐ.சி.'யை உங்களுக்குத் தெரியுமா?"

"ஓ! இரண்டு பேரும் ஒன்றாக வேலை செய்தோம்." பெருமையுடன் கனகசபை சொன்னான்.

"நன்றாகத் தெரியுமா?"

"ஓமோம்."

"நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்யமுடியுமா?"

"என்ன?"

"நான் 'சப்-இன்ஸ்பெக்டர் இன்டர்வியூ'வுக்கு செல்ல விருக்கிறேன். 'ஓ.ஐ.சி' என்னை சிபார்சு செய்ய மறுக்கிறார். நீங்கள் தான் அவருடன் பேசி...."

"முயற்சி செய்கிறேன்."

மாலை ஆறு மணியளவில் தான் கனகசபையை விடுவித்தார்கள்.

"இனி இந்த பக்கம் வருவீங்களா?" ஹனிபா கேட்டான்.

"இல்லை, இல்லை."

"நல்ல பிள்ளையாக இருக்கப் பாருங்கள்."

'பொலிஸ்' நிலையத்தில் இருந்து கனகசபை மிடுக்குடன்

வெளியேறுகிறான்.

அதற்கு முன்பாக கூண்டுக்குள் அடைந்து கிடந்த வாலிபர் களிடம் சென்றான்.

"உங்களை விட்டுட்டாங்கள் போல. எங்களை விட மாட்டாங்கள். எப்படியும் களுத்துறைக்கு அனுப்புவாங்கள்" என்றான் கனகசபையுடன் முதலில் பேசிய வாலிபன்.

களுத்துறை என்று வாலிபன் சொன்னவுடன் கனகசபையின் நெஞ்சை ஏதோ ஒன்று தாக்கியது. களுத்துறைச் சிறையின் நினைவு மனதைத் தொட்டுப் பார்த்தது.

"அண்ணே, எனக்கு ஒரு உதவி செய்வீங்களா?" அவ் வாலிபன் கேட்டான்.

"என்ன?"

"நான் ஒரு 'ரெலிபோன் நம்பர்' தாறன். '.:.போன்' பண்ணி நான் இஞ்சை இருக்கிறன் எண்டு சொல்லி விடுறீங்களோ."

"அதுக்கென்ன?"

மற்ற மூன்று வாலிபர்களும் ஒன்றுமே கதைக்கவில்லை. வேதனையின் விளிம்பில் நின்றிருப்பார்கள்.

கனகசபை வீதியில் நடக்கிறான். உடலில் பாரமற்ற ஒரு நிலை. 'சென்றோம், வென்றோம்' என்ற உணர்வு.

எங்கு செல்வது?

அவனுக்கே தெரியவில்லை.

ரண்மெனிக்கேயின் வீட்டுக்கு போக முடியாது. அந்த வீட்டை மறந்து விட வேண்டும். அங்கு போகக்கூடாது என்று ரட்ணாயக்கா உத்தரவு போட்டிருக்கிறார். அதை மீறியும் போனால் கழுத்துக்கு சுருக்கு கயிறு மாட்டுவதற்குச் சமன். ஒரு முறை கையைச் சுட்டுவிட்டான்.

கனகசபையின் மூளைக்குள் எதுவுமே புக மறுத்தது. யோசனைக்கு தீனி வழங்கிய போதும், உருப்படியாக ஒன்றும் வெளிப்படவில்லை.

யாராவது உறவுக்காரர்கள் வீட்டுக்குப் போகலாம். யாரை நாடுவது?

அவன் மனைவியின் ஒன்றுவிட்ட அக்காவின் மகளும், மருமகனும் இரத்மலானையில் இருப்பதாக அவன் கேள்விப் பட்டிருக்கிறான். ஆனால், அவர்களது விலாசம் அவனுக்குத் தெரியாது.

அவனது மைத்துனன் வெள்ளவத்தையில் சற்று வசதியுடன் வாழ்கிறான். வீதியில் ஒரு முறை கண்டபோது புன்னகைத்து விட்டுச் சென்றான். அவனைத் தேடிச் செல்லலாம். அடைக்கலம் தருவான். ஆனால், திடுதிப்பென போய் அவன் முன் நின்று "இண்டைக்கே இடம் தா" என்று கேட்டால் அவன் சந்தேகப்படுவான். கனகசபையின் அவசரத்திற்கு காரணம் கேட்பான். 'பொலிஸ்' நிலையத்தில் அடைந்து கிடந்த கதையை அவனுக்கு கூற வேண்டியிருக்கும். அதன் பின்? நினைத்துப் பார்க்கவே முடியாது.

'பொலிஸ்' நிலையத்தில் அடைந்து கிடந்த சமாச்சாரத்தை அமுக்குவதென்றால் உறவினர்களின் வீடுகளுக்குள் காலடியைப் பதிக்கக்கூடாது. எங்காவது நண்பர்கள் வீட்டுக்குச் செல்லவேண்டும்.

தர்மலிங்கத்தின் நினைவு எட்டிப்பார்த்தது.

"கனகு, என்ர அறை ஆறு அடி அகலமும், எட்டடி நீளமும். அதுக்குள்ளை மூண்டு சீவன்கள் வாழுது எண்டு சொன்னால் நீ நம்புவியோ? எல்லாம் வாழத்தான் வேணும் எண்ட உறுதியாலை தான். ஒருத்தருக்குள்ளை ஒருத்தர் பின்னிப்பிணைஞ்சு கிடக்கிறம். வெளியிலை சொன்னால் வெக்கக் கேடு. எங்கட ஊர் ஆட்டுக் கொட்டில் கூட இதை விட பெரிசு" என்று தர்மலிங்கம் கூறியவை ஞாபகத்திற்கு வர, அவன் அறையை நினைவில் இருந்து கனகசபை அகற்றினான்.

எங்கே போவது?

முதன்முதலில் பசியை அடக்க வேண்டும். சங்கிலி விற்ற பணத்தில் சிறிதளவு எஞ்சியிருந்தது. சைவ 'ஹொட்டேல்' ஒன்றுக்கு போய் வயிறு நிறையச் சாப்பிட்டான். உற்சாகம் பிறந்தது.

வெளியே வந்தான்.

நடக்கிறான். இலக்கின்றி நடக்கிறான்.

கோட்டை புகையிரத நிலையத்தை அடைந்துவிடுகிறான். வெளியில் பலரும் நிலத்தில் அமர்ந்திருப்பது தெரிகிறது. அவனும் போய் அமர்ந்தான்.

நேரம் நகர்ந்தது.

யோசனை மனதினுள் வற்றிவிட்டது.

இருளடைந்தது.

'பொலிஸ்'காரர்கள் வட்டமிட, அங்கிருந்து எழுந்து முன்னால் இருந்த 'பஸ் ஸ்டான்ட்'டுக்குச் சென்றான். அங்கு சுற்றித் திரிந்தான். 'ரௌடி' போன்ற தோற்றம் கொண்ட ஒருவன் மூன்று தடவைகள் நேரத்தைக் கேட்க, கனகசபைக்கு பயம் வந்து விட்டது. வேறெங்காவது ஒரு நிழலைத் தேடுவோம் என்று நினைக்கையில், நல்லவேளை அந்த 'ரௌடி' போய்விட்டான். பயம் சற்றே நீங்கியது.

நன்றாக இருட்டி விட்டது.

பலரும் அவனைக் கடந்து சென்றனர். அவனுக்கு அறிமுகமானவர்கள் ஒருவரும் செல்லவில்லை.

இரவு எங்கே தங்குவது?

உபாலியின் வீட்டுக்குப் போனால் என்ன?

முடியாது. அவனை கனகசபை ஏற்கனவே தொந்தரவு செய்திருக்கிறான். இனியும் தொந்தரவு செய்ய முடியாது. "ஐயா, இஞ்ச தங்கியிருக்கிறது கொஞ்சம் கஷ்டம்" என்று சொல்லித்தான் ரண்மெனிக்கேயின் வீட்டில் அவனுக்கு அடைக்கலம் பெற்றுக் கொடுத்தான்.

நேரம் பத்து மணியைக் கடந்துவிட்டது.

நித்திரை அவனை ஆரத்தழுவுகின்றது.

திடுதிடுப்பென, கண்களை மூடித் திறக்க முன் அவன் முன்னால் பெண் ஒருத்தி தோன்றினாள். அடையாளப் புன்னகை ஒன்றை வெளியிட்டாள். நாற்பது வயது மதிக்கலாம். சிவப்பு நிறமானவள். உயரம் ஐந்து அடிக்கு சற்று மேல் இருக்கலாம்.

அவளுக்கு அருகில் பத்து வயதிலும், எட்டு வயதிலுமாக இரு சிறுமிகள்.

"நீங்கள் மல்சிரிவத்தவில தானே இருக்கிறீங்க?" அப்பெண் தமிழில் கேட்கிறாள்.

கனகசபை திடுக்கிட்டுவிடுகிறான்.

# (9)

நுளம்புகள் வட்டமிட்டு எரிச்சலூட்டும் வகையில் ரீங்காரமிட்டன. அகோரத்தினால் உடம்பு முழுவதும் வியர்வை 'பிசுபிசு'த்தது. ஆனால், கனகசபை தன்னை மறந்த நிலையில் தூங்கிக் கொண்டிருந்தான். அவன் உடல் மிகவும் களைப்படைந்திருந்தது.

கோட்டை 'ரயில்வே' நிலையத்திற்கு முன்பாக அவன் நின்ற போது அவனுடன் பேச்சுக் கொடுத்த அப்பெண் பேச்சுவாக்கில் தனது பெயரைச் சொன்னாள். அவளுக்கு பெயர் யோகமலர்.

அவள் முதலில் கேட்ட கேள்வி கனகசபையைத் திடுக்கிட வைத்துவிடுகின்றது.

"ஓமோம். நான் மல்சிரிவத்தவில தான் இருக்கிறன். நீங்கள் ஆர் எண்டு தெரிய இல்லை." அவன் பதில் அளிக்க தடுமாறினான்.

"நான் உங்களைக் கண்டிருக்கிறன். நீங்கள் ஏன் அந்த வீட்டிலை...... அது தான் அந்த ரண்மெனிக்கேயின்ர வீட்டிலை இருக்கிறீங்கள்?"

"அது எல்லாம் பெரிய கதை. நீங்கள் உங்களைப் பற்றிச் சொல்லுங்க. நீங்க ஆர்? எங்கை இருக்கிறீங்கள்? என்னை எப்படித் தெரியும்?" கனகசபை ஆர்வத்துடன் கேட்கிறான்.

"நானும் மல்சிரிவத்த தான் இருக்கிறன். உங்கட வீட்டை தாண்டிப் போக ஒரு ஜம்பு மரம் இருக்குது தானே?"

"ஓமோம். பொடியங்கள் எல்லாம் தடியால அடிச்சு ஜம்பு ஆய்ஞ்சு கொண்டிருப்பாங்கள்."

"அதுக்கு பின்னால ஒரு சின்ன வீடு...... பச்சை நிறத்தில சின்ன 'கேட்'..... சிவப்பு நிற தகரக் கூரை........"

"ஓ....ஓ...... கண்டிருக்கிறன்."

"அந்த வீட்டிலை தான் இருக்கிறன். இது என்ர பிள்ளையள்........ உங்கட வீட்டைத் தாண்டித்தான் நான் வேலைக்குப் போறனான். அப்ப உங்களைக் கண்டிருக்கிறன். நீங்கள் ஒரு தமிழ் ஆளாகத் தான் இருக்க வேணும் எண்டு நினைச்சன். கேட்டுப் பார்த்தன். சரி எண்டதை அறிஞ்சன்."

"நீங்கள் எங்கை போயிட்டு வாறியள்?"

"வவுனியாவுக்கு."

"அது தான் சொந்த ஊரா?"

"இல்லை. சொந்த ஊர் கிளிநொச்சி."

"ஆர் வவுனியாவிலை இருக்கினம்?"

"அம்மா, தங்கச்சி."

"உங்கட புருஷன்...........?"

யோகமலர் பதில் அளிக்காமல் மௌனம் சாதித்தாள்.

"சொல்லுங்க.,.........."

"இருக்கிறார்."

"எங்க?"

"அவர்.......... என்னை......... பிரிஞ்சு இருக்கிறார்."

"ஓ........ " கனகசபைக்கு வாயடைத்தது."

"நான் வீட்டுக்கு 'ஓட்டோ'விலை போகப் போறன்."

"தனியாகவா?"

"ஏன் நீங்களும் வரப்போறீங்களா?"

"ஓமோம்" என்று வாய் தடுமாறி அவன் கூறிவிடுகிறான்.

'ஓட்டோ ரிக்ஷா' ஒன்று வர யோகமலரும், பிள்ளைகளும் ஏறினார்கள்

"நீங்கள் இப்ப ரண்மெனிக்கேயின்ர வீட்டுக்கோ போறியள்?" வழியில் அவள் கேட்டாள்.

"இல்லை. அங்கை என்னால போக ஏலாது."

"ஏன்?"

"அந்தப் பெரிய கதையைச் சின்னதாக சொன்னால் தான் ஏன் அங்கை போக முடியாது எண்டு உங்களுக்கு விளங்கும்" என்ற கனகசபை களுத்துறை சிறையில் இருந்து வெளியேறிய பின் 'பொலிஸ்' நிலையத்தில் இருந்து விடுவிக்கப்படும் வரை நடைபெற்றவற்றை சுருக்கமாகச் சொன்னான்.

"உங்கடை கதை சோகமாகத்தான் இருக்குது. நீங்கள் இனி எங்கை தங்கப் போறீங்க?" அவள் வாஞ்சையுடன் கேட்டாள்.

"அது தான் எனக்கும் தெரிய இல்லை. நீங்கள் வரச் சொன்னீங்கள். ஏதோ ஒரு நினைப்பில ஏறிட்டன்."

யோகமலர் சில நிமிடங்களாகப் பேசவில்லை. பின்னர் பேசினாள். "எங்கட வீட்டிலை நீங்கள் தங்கலாம்."

கனகசபைக்கு தூக்கிவாரிப் போட்டது போலிருந்தது. இவ்வாறான ஒரு அழைப்பு தனக்கு விடுக்கப்படும் என அவன் துளியளவும் எதிர்பார்க்கவில்லை.

"உ...... உ...... உங்கடை வீட்டிலையோ?" அதிர்ச்சி அகலாத நிலையில் கேட்டான்.

"ஓமோம். என்ன அதிர்ச்சியாக இருக்குதா?"

"இ..... இ...... இல்ல....."

"என்ர முடிவு சரியோ, பிழையோ எண்டு கொஞ்ச நேரமா யோசிச்சன். பிழை இல்லை எண்டு நினைக்கிறன். நீங்கள் சரி எண்டு நினைச்சால் தங்கலாம். ஒரு சின்ன வாடகையை எதிர்பார்ப்பன். இப்ப இல்லை. உங்களுக்கு வேலை கிடைச்ச பிறகு. ஒரு மனிதாபிமான உதவி எண்டு நான் இதை நினைக்கிறன். இதால எதிர்காலத்தில எனக்கு பிரச்சனை வருமோ எண்டு பயமாகவும் இருக்குது."

அவன் அழுந்திக்கிடந்த நிலையில் அவனுக்கு ஒரு நிழல் தேவைப்பட்டது. அது அவனை நாடி வந்திருந்தது. சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடாது.

"உண்மையைச் சொன்னால் என்ன, எங்க போறதெண்டு தெரியாமல் முழுசிக் கொண்டிருக்கிறன். உங்கட வீட்டுக்கு வாறன். அதால உங்களுக்கு பிரச்சனை வரும் எண்டால் விட்டுடுங்கோ."

"பிரச்சனை வந்தாலும் வரும். ஆனால், நான் இப்ப இதைப் பற்றி கவலைப்படுற நிலையில இல்லை."

"எனக்கெண்டால் நீங்கள் ஒரு பிழையான முடிவு எடுக்கிறீங்களோ எண்டு முழுசாட்டமாக இருக்குது."

"இல்லை. பரவாயில்லை. மனதை போட்டு குழப்பா தேங்கோ. உங்கட மனம் சுத்தம் தானே?"

"ஓமோம்."

"அப்படியெண்டால் ஒண்டுக்குமே யோசியாதேங்கோ. நீங்கள் எங்கட வீட்டிலை தங்கலாம். சின்ன வீடு. அள்ளும், கொள்ளையுமாக நுளம்பு."

"பரவாயில்லை. வாறன்."

தன் புதிய தலைவிதியை நினைத்து அவனுக்கு ஒரே பிரமிப்பாக இருந்தது. எல்லாவற்றையும் நினைக்க, நினைக்க அவனுக்கு வேதனையாக, அதை அமுக்கியபடி மகிழ்ச்சியாக-அவை யாவற்றையும் முடக்கியபடி பிரமிப்பாக இருந்தது. தூரதிர்ஷ்டத்திலும் ஓர் அதிர்ஷ்டம். இதையோ குருட்டு அதிர்ஷ்டம் என்று கூறுகிறார்கள்? இப்படி ஒரு திருப்பமா?

'பொலிஸ்' நிலையத்தில் ஓர் அதிர்ஷ்ட காட்சி அரங்கேறி முடிவடைந்த பின் இன்னுமொரு அதிர்ஷ்டக் காட்சி மேடை யேறுகிறது. இது எப்படி, ஏன் நடக்குது என்று அவன் வியந்தான். சினிமாப் படங்களில் தான் இப்படியான திடீர் திருப்பத்துடன் காட்சிகள் இடம்பெறுவதுண்டு. தனது வாழ்க்கையில் சினிமா மாதிரி காட்சிகள் மேடையேறுகின்றனவே என எண்ணும் போது அவனுள் பரவசம் கிளை பரப்புகிறது.

நடப்பது நடக்கட்டும். எல்லாம் நன்மைக்கே.

ரண்மெனிக்கேயின் வீட்டைத் தாண்டி 'ஓட்டோ' கடந்து சென்றது. பின், ஜம்பு மரத்தின் அருகில் நின்றது.

யாவரும் இறங்கினார்கள்.

வீடு இருளில் மூழ்கியிருந்தது. முன் கதவை யோகமலர் திறந்து, 'லைட்'டைப் போட்டாள்.

உட்புறத்தை கனகசபை கண்களால் அளந்தான். ஒரு 'ஹோல்', ஒரு படுக்கை அறை, குசினி என முன்னூறு சதுர அடிக்குள் வீடு விளங்கியது. 'ஹோல்' முழுவதும் மர நாற்காலிகளும் 'பிளாஸ்ரிக்' நாற்காலிகளும் கலந்திருந்தன. ஒரு சிறிய சாப்பாட்டு மேசை, படுக்கை அறைக் கதவு நிலையில் அழுக்கான திரைச்சீலையொன்று தொங்கியது.

வயிற்றைக் குமட்டும் நாற்றம் ஒன்று வெளிப்படுகிறது. கனகசபைக்கு வாந்திவருவது போல இருந்தது. அவன் முக பாவத்தை யோகமலர் அவதானித்துவிட்டாள்.

"பின்னுக்கு ஒரு கான் இருக்குது. அதையும் இஞ்ச இருக்கிற ஆக்கள் கக்கூஸ் மாதிரி பாவிக்கினம். நான் எத்தனை தரம் சொல்லி இருப்பன்? அவசரம் வந்தால் என்ன செய்யுறது எண்டு கேட்கினம்."

கனகசபை ஒன்றும் செய்யவில்லை. அதை விமர்சிப்பதற்கு தனக்கு தகுதி இல்லை என்று எண்ணினான்.

"உங்களுக்கு என்ன பெயர்?" அவள் கேட்டாள்.

"கனகசபை."

"உங்களை கனகு எண்டு கூப்பிடட்டோ?"

"அதுக்கென்ன? உங்களுக்கு?"

"யோகமலர்."

"யோகம் எண்டு சொல்லட்டோ?"

அவள் புன்னகைத்தாள். அதற்கென்ன என்னுமாப் போல தலையசைத்தாள்.

"கனகு, பக்கத்தில ஒரு ரொட்டிக் கடை இருக்குது.

எனக்கும் உங்களுக்கும் ஏதாவது சாப்பாடு வாங்கிக் கொண்டு வாறியளோ?"

"அதுக்கென்ன. பிள்ளையளுக்கு?"

"அதுகள் 'ட்ரெயினில' சாப்பிட்டுட்டுதுகள்."

"அப்ப சரி."

"உங்களிட்டை காசு இருக்காது எண்டு நினைக்கிறன். இந்தாங்க" என்று நூறு ரூபா தாளை யோகமலர் நீட்டினாள்.

"இல்லை இருக்குது."

"பரவாயில்லை, இதைக் கொண்டு போங்கோ."

கனகசபை அங்கிருந்து வெளியேறினான்.

அந்தக் குடியிருப்பினுள் ஒரு ரொட்டிக் கடை இருந்தது. 'சாய்பு நானான்ர ரொட்டிக் கடை' என்று எல்லோரும் கூறுவார்கள். முதல் நாள் மாலை அங்கு தான் கனகசபை தன் பசியைத் தணித்தான். அதே கடைக்குப் போனான்.

கடையினுள் ஒருத்தரும் இருக்கவில்லை.

சாய்பு நானா மட்டும் இருந்தான்.

"வாங்க, வாங்க" என்று அவன் வரவேற்பளித்தான்.

"சாப்பிட என்ன இருக்குது?"

"'பிளேன்' அப்பம், முட்டை அப்பம், கொத்து ரொட்டி..............."

"கொத்து ரொட்டி ரண்டு 'பார்சல்'."

சாய்பு நானா எழுந்து அடுப்பை மூட்டினான். தட்டில் வெங்காயம், பச்சை மிளகாய், தக்காளி, லீக்ஸை போட்டான். எண்ணெயைத் தெளித்தான். புகை பறந்தது.

"தொரே, ரண்மெனிக்கேயும், புள்ளைங்களும் வந்திட்டாங்களா?"

"இல்லை."

"அப்ப எப்படி உங்களை விட்டாங்கள்?"

"நான் நிரபராதி. அதால விட்டாங்க."

"அப்ப ஏன் ரெண்டு 'பார்சல்'?"

கனகசபைக்கு 'திக்'கென்றிருந்தது. என்ன சொல்வது? உண்மையைச் சொல்லத் தயங்கினான். ஆனால், பொய்யைச் சொல்லி அகப்படுவதை விட, உண்மையைச் சொன்னால் நல்லது என்று நினைத்தான். "அந்த ஜம்பு மரத்துக்கு கிட்ட இருக்கிற வீட்டிலை தான் இப்ப ரூம் எடுத்திருக்கிறன். அந்த வீட்டு தங்கச்சிக்கும் 'பார்சல்' கொண்டு போறன்."

"ஆரு அந்த ரண்டு பிள்ளைங்களோட அம்மாவா?"

"ஓமோம்."

சாய்பு நானாவின் முகத்தில் ஒரு பரிதாபம் முளைத்தது. "அந்த அம்மா பாவமுங்க. தெனம் தெனம் அடி வாங்கியே வாழ்க்கையை ஓட்டினாங்க. அவங்கட புருஷன் என்னமாய் அடிச்சு, உதைச்சான்......... எல்லாம் குடிதான். எனக்கு கூட இருநூறு சொச்சம் பாக்கி. 'செட்டில்' பண்ணிட்டு அவன் போயிருக்கலாம். படுவா 'ராஸ்கல்' ஒன்னுமே சொல்லாம ஒரு நாள் தொலைஞ்சு போயிட்டான்."

கனகசபை ஒன்றும் கூறவில்லை.

"நல்ல 'ஸ்மாட்'டான தொரே. காலையில காட்டி, 'நீற்றா' உடுத்திக் கொண்டு, தலையை குனிஞ்சு கொண்டு தான் அந்த மவராசன் போவாரு. 'நைட்' நல்லா குடிச்சிட்டு நாலு காலில வருவாரு. அப்புறம் வீட்டில ஒரே சத்தம். அந்த மனுஷன் என்னமாய் அந்த அம்மாவை அடிப்பார்? ஒரு நாள் அந்த அம்மா அலறின அலறலில ஓடிப் போய் பார்த்தேனுங்க. ஐயா அந்த கண்ராவியை எப்படி சொல்லுவேனுங்க. அந்த அம்மா ஒன்னுமே இல்லாம..... ஆமா நெசமுங்க...... நிலத்தில கிடக்கிறாங்க. அவரு அடி,அடின்னு அடிக்கிறாரு. என்னால அங்கனைக்கு நிக்க ஏலாமல் போயிட்டுது. ஓடியாந்திட்டன்."

சாய்பு நானா குரலை ஏற்றியும், இறக்கியும் பேசினான். கனகசபைக்கு நெஞ்சு விறைத்தது. அவனால் கற்பனை செய்ய முடியாத வகையில் யோகமலர் சித்திரவதை செய்யப்பட்டுள்ளதை அறிந்து, அவளுக்காக இரக்கப்பட்டான். அவள் மீது பச்சாதாபம்

ஏற்பட்டது. அவளுக்கு உதவவேண்டும் என்ற விருப்பம் துளிர்த்தது. அவளுக்கு பாதுகாவலனாக விளங்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது.

கொத்து ரொட்டிப் 'பார்சலை' பெற்றுக் கொண்ட கனகசபை நடந்தான்.

யோகமலரின் முகம் தான் அவன் நெஞ்சில் நிறைந்திருந்தது. கணவனிடம் அவள் அடிவாங்கி உதைவாங்கும் காட்சியை அனுமானிக்க அவனுள் கோப உணர்ச்சி பீறிடுகிறது.

வீட்டை அடைகிறான்.

யோகமலர் 'நைட்டி'யில் 'ஹோலில்' அமர்ந்திருக்கிறாள்.

கனகசபை 'பார்சல்'களை அவளிடம் நீட்டினான்.

அவள் முன்பாக நாற்காலியில் அமர்ந்தவாறு அவன் சாப்பிட்டான். அவளும் சாப்பிட்டாள்.

கனகசபை நேரத்தைப் பார்த்தான்.

பன்னிரண்டு மணி.

"பிள்ளையள் எங்கை?" அவன் கேட்டான்.

"அதுகள் படுத்திட்டுதுகள்."

சில வினாடிகள் மௌனம்.

"உங்களுக்கு நிறைய துணிச்சல் இருக்குது." அவளை ஆழமாக நோக்கியவண்ணம் அவன் சொன்னான்.

"ஏன் அப்படி சொல்றியள்?"

"நான் ஆர், எவர் எண்டு தெரியாமல், என்ன நம்பிக்கையில என்னை இஞ்சை கூட்டிக் கொண்டு வந்தியள்?"

அவள் முழித்தாள். முகத்தில் சின்னதொரு தவிப்பு.

"சொல்லுங்க."

"உங்களைக் கண்டவுடன சும்மா கதைக்கத்தான் வந்தனான். பிறகு 'ஓட்டோ'விலை கூட்டிக் கொண்டு வீட்டிலை இறக்கிவிடுவம் எண்டு நினைச்சன். வாறவழியில நீங்கள் உங்கட கதையைச் சொன்னாப்பிறகு உங்களுக்கு இஞ்ச இடம் குடுத்தால்

என்ன எண்டு யோசிச்சன். நீங்கள் நல்லவரா, கெட்டவரா எண்டு நான் ஆராய இல்லை. நல்லவரா இருப்பீங்கள் எண்ட ஒரு குருட்டு நம்பிக்கை........ நம்பிக்கை தானே வாழ்க்கையின்ர அத்திவாரம்? முன்பின் தெரியாதவரை கலியாணம் கட்டி சீவிய காலம் முழுவதுக்கும் சந்தோஷமாக இருக்கிறதில்லையா? குருட்டு நம்பிகையில தலையை நீட்டுற மாதிரித் தான் இதுவும்." யோகமலர் தெளிவாகக் கூறினாள்.

கனகசபை நன்றியுடன் புன்னகைத்தான். "உங்கட குருட்டு நம்பிக்கை வீண் போகாது."

"உங்கட குடும்பத்தைப் பற்றி சொல்லுங்க."

"பெஞ்சாதியும், இரு பிள்ளையளும் ஊரில இருக்கினம்."

"எந்த ஊர்?"

"யாழ்ப்பாணம். அதாவது வடமராட்சியில உள்ள பருத்தித்துறை. அங்கை போயிருக்கிறீங்களா?"

"இல்லை. ஆனால், கேள்விப்பட்டிருக்கிறன்."

"எனக்கு இஞ்ச சொந்தக்காரர் இருக்கினம். ஆனால், அவையள் எங்களை மதிக்கிறதில்லை. அதால உதவிக்கு எண்டு நான் அவையளிட்டை போறதில்லை."

"எனக்கு சொந்தக்காரர் எண்டு ஒருத்தரும் இஞ்சை இல்லை." அவள் பேசுவதை நிறுத்திவிட்டு அவனை கேள்விக்குறியுடன் நோக்கினாள். "நான் உங்களை இஞ்சை கூட்டிக் கொண்டு வந்திருக்காட்டால் என்ன செய்திருப்பியள்?"

கனகசபை சாப்பிடுவதை நிறுத்தினான். "என்னால அதை நினைச்சுக் கூட பார்க்க ஏலாமல் இருக்குது. என்ர வாழ்க்கையில எண்டைக்குமே மறக்க முடியாத ஒரு பெரிய உதவியை நீங்கள் செய்திட்டியள். நீங்கள் வந்தியள். கதைச்சியள். 'ஓட்டோ'வில வரச் சொன்னியள்............ பேந்து உங்கட வீட்டில தங்கலாம் எண்டு சொன்னியள். எல்லாமே அதிசயமாக இருக்குது........." அவனின் நா தழுதழுத்தது.

"எங்கை வேலை செய்யுறீங்க?"

"வேலை? இனித்தான் தேட வேணும். ரண்டு நாளைக்கு

தேடுவன். ஒண்டும் கிடைக்காட்டால் ஊருக்கு போயிடுவன்."

"ஊருக்கு போறது அவ்வளவு லேசு இல்லை. கப்பல் இல்லாட்டி 'பிளேன்.' எப்படியும் ஒரு மாசம் எடுக்கும். அது வரைக்கும் என்ன செய்யப் போறியள்?"

"இஞ்சை இருக்கிறன். அதுக்கு கைமாறாக உங்கட பிள்ளைகளுக்கு 'ரியூசன்' குடுக்கிறன்."

அவள் முகத்தில் சின்னதொரு சோகம் கப்பியது. அதை அவன் அவதானிக்கவில்லை. தொடர்ந்தும் பேசினான். "நீங்கள் எங்கை வேலை செய்யுறியள்?"

"ஒரு 'டைப்செட்டிங் சென்டரில'. காலமை எட்டு மணிக்கு போனால் இரவு ஏழு மணிக்கு வருவன். முதலாளி என்னைக் கசக்கிப் பிழிஞ்சுடுவார். 'கொம்பியூட்டர் மொனிட்டரைப்' பார்த்தே கண் எல்லாம் மங்கிடும். கண்ணீரும் வரும். எல்லாமே வாழ வேணும் எண்ட நியதியால செத்து செத்து பிழைக்க வேண்டியுள்ளது."

படுக்கைக்கு போவதற்கு யோகமலர் தயாரானாள். அதற்கு முன்பாக 'ஹோலில்' பாயைப் போட்டாள். நுளம்புத் திரியைக் கொளுத்தி வைத்தாள். "ஏதோ நுளம்புத் திரியை பத்தி வைக்கிறன். ஆனால், நுளம்பு உங்களை விட்டு வைக்காது."

"எனக்கு எல்லாம் பழகிட்டுது."

"பக்கத்தில ஒரு வீட்டில கசிப்பு விக்கினம். அங்கை குடிச்சுப் போட்டு எங்கட வீட்டு விறாந்தையில இருந்து தான் அலட்டுவாங்கள். சத்தமெல்லாம் போடுவாங்கள் ஒண்டுக்குமே பயமில்லாமல் படுங்கோ" என்றவள் படுக்கை அறையை பூட்டினாள்.

பாயில் படுத்திருந்த கனகசபையின் எண்ணத்தில் யோகமலர் நிறைந்திருந்தாள். அவளின் துணிவையிட்டு, அவள் எடுத்த முடிவையிட்டு பல கோணங்களில் ஆராய்ந்தான். பதில்கள் தெளிவாகவும், கோணல்மாணலாகவும் வெளிப்பட்டன. எதைப் பற்றிக்கொள்வது? சிந்தனைத் தெளிவு அகலும் போது நித்திரை அவனை ஆரத்தழுவிவிட்டது. உறங்கிவிட்டான். கனவுகளுக்கு பஞ்சமில்லை.

# (10)

பட்டாசுகளின் வெடிச்சத்தம் காதைப் பிளக்குமாப் போல கேட்டது. தனது காலடியில் வெடித்தது போன்ற உணர்வை கனகசபை பெற, அலறித் துடித்தபடி எழுந்தான். சில வினாடிகள் வரை என்ன, ஏது என்று அவனுக்குப் புரியவில்லை.

பட்டாசுகளின் புகை நாற்றம் அவன் மூக்கைத் தடவியபடி சென்றது. அவன் இரு முறைகள் தும்மினான்.

குசினிப் பக்கம் நோக்கினான். 'லைட்' எரிந்தது. அங்கிருந்து யோகமலர் அவனை நோக்கி வருவது மெல்லிய இருளில் தெரிந்தது.

"என்ன வெடிச்சத்தம்?" கனகசபை அலுத்தவண்ணம் கேட்டான்.

"பக்கத்து வீட்டு பிள்ளை பெரியபிள்ளை ஆகிட்டுதாம். இண்டைக்கு தண்ணி வார்க்கினம். அதுக்காக பட்டாசு கொளுத்தி இருக்கினம்."

"அதுக்கு பட்டாசு கொளுத்தி...."

"இஞ்ச அது தான் சம்பிரதாயம்."

"நான் நல்லா பயந்திட்டன். 'ஷெல்லடி' எண்டு தான் முதல்ல நினைச்சன்." கனகசபை கொட்டாவிவிட்டான். "இப்ப எத்தனை மணி?"

"ஐஞ்சரை. நீங்கள் படுங்கோ. இரவு முழுக்க நுளம்பு கடிச்சுதா?"

"எனக்கெண்டால் படுத்தது தான் தெரியும். இப்ப ஒழும்ப மட்டும் நல்ல நித்திரை. நிம்மதியாக படுத்தன்."

"முன் வீட்டில ஒரே சண்டை. பெஞ்சாதிக்காரியை புருஷன் நல்லா அடிச்சுப் போட்டான் போல. அவள் ஒரே குழறிக்

கொண்டிருந்தாள்."

"எனக்கெண்டால் ஒண்டுமே கேட்க இல்லை."

"நான் சமைக்க வேணும்." அவள் அங்கிருந்து அகல முற்பட்டாள்.

"எத்தனை மணிக்கு வீட்டை விட்டு போறியள்?"

"ஏழரைக்கு."

"பிள்ளையள்?"

அவள் நின்றாள். "அதுகள் பள்ளிக்கூடத்திற்கு போறதில்லை."

"ஏன்?"

"அதுகள் ரண்டுமே கதைக்காதுகள். ஊமையள்."

"ஓ......"

காலைக் கடன்களை முடிக்கும் வரை கனகசபையின் மனதை யோகமலரின் பிள்ளைகள் தான் அடைத்திருந்தார்கள். என்ன அழகான பிள்ளைகள்! வசீகரமான முகங்கள்! சிரிக்கும் பொழுது அக்கண்களில் தெரியும் குழந்தைத்தனம்! அந்தக் கண்களில் மறைந்திருந்த மகிழ்ச்சி! ஆனால், வாய் பேச முடியாத பிறவிகள்.

யோகமலரை நினைக்கும் போது அவனுள் நிறையவே பச்சாதாபம் ஏற்படுகின்றது. இந்தளவு ஒரு துரதிர்ஷ்டசாலியாக விளங்குகிறாளே என துயருற்றான். கணவன் இருந்தும் இல்லாத நிலை. பிள்ளைகள் இரண்டுமே வாய் பேச முடியாத நிலை. தனது கருத்துக்களை, ஆர்வங்களை, கனவுகளை, எதிர்பார்ப்புக்களை என்றெல்லாம் யாருடன் பகிர்வாள்?

இப்பொழுது - இத்தருணத்தில் அவளது ஆசாபாசங்களில் பங்கு கொள்ள அவன் மட்டுமே இருக்கிறான். ஆனால், அவனுடன் அவளுக்கு அந்நியோன்னியம் இல்லை. இருவரும் இன்னும் மனம் விட்டுப் பழகவில்லை. அவனது சிந்தனையில் உள்ள கருத்துக்கள் அவளுக்குத் தெரியாது. எட்டு மணி நேர பழக்கமே அவனுடன் அவளுக்கு இருந்தது. அவன் மீது அவள் நம்பிக்கை வைத்திருக்கிறாள். அந்த நம்பிக்கை கூட ஒரு

குருட்டுத்தன்மையானது. அதை ஆதாரமாக வைத்துத் தான் அவன் மீதான அன்பினை அவள் கட்டி எழுப்பலாம்.

அவனுக்கு அவள் உதவுவதன் நோக்கம் என்ன? நோக்கமற்ற நோக்கமா? அல்லது நோக்கத்துடனான நோக்கமா? நோக்கத்துடனான நோக்கமென்றால் அது என்ன நோக்கம்? அவள் அடிமனதைத் தோண்டித் தான் அந்த உண்மையை அறியலாம். பெண்களின் மனம் ஆழமானது. அதை அறிவது இலகு அல்ல. பொறுத்துத் தான் - நாட்கள் நகரத்தான் ஓரளவாவது புரிந்து கொள்ள முடியும். அது வரை அவன் பொறுமையுடன் இருக்க வேண்டும்.

அவள் தேநீரை அவனிடம் நீட்டினாள். "எல்லாருக்கும் காலமைக்கும், மத்தியானத்துக்கும் சமைச்சிட்டன். நீங்கள் எங்கையாவது வெளியில போறியளா?"

"முந்தி வேலை செய்த 'கொம்பெனி'க்கு போக வேணும். அங்கை ஏதாவது வேலை இருக்குதா எண்டு பார்க்க வேணும். இல்லாட்டால் திரும்பி வந்து மூளையைப் போட்டு உருட்ட வேணும்."

"நான் வேலை செய்யுற 'சென்டர்' முதலாளிக்கு 'டிரவலிங் பேக்' தைக்கிற சின்னக் 'கொம்பனி' ஒண்டு பாணந்துறையில இருக்குது. அங்கை ஏதாவது வேலை இருக்குதா எண்டு கேட்டுப் பார்க்கிறன்."

"பாணந்துறையா? இஞ்ச இருந்து சரியான தூரம்........"

"வேலை கிடைச்சால் அங்கை தங்கலாம் தானே?"

கேள்வி ரூபத்தில் அமைந்த அவள் பதிலைக் கேட்டு அவன் மனதில் தேங்கியிருந்த சில உண்மைகள் அழிவது போலிருந்தன. அவளுக்கு அவன் தேவை இல்லை என்று அர்த்தம் தானே அவள் பதிலில் அடங்கிக் கிடக்கிறது?

அவள் 'பாத்ரூமுக்குச்' சென்றாள்.

அவர்களது படுக்கை அறைக்குள் அவன் பார்வையைச் செலுத்தினான். யோகமலரின் இரு பிள்ளைகளும் தங்களை மறந்த நிலையில் படுக்கையில் கிடந்தனர். அவர்களையே அவன் பார்த்துக் கொண்டிருந்தான். தனது பிள்ளைகளின் நினைவு அவன் மனதை

எட்டிப் பார்த்தது. அவர்கள் என்ன செய்கிறார்களோ? மங்களத்தின் நினைவும் மனதில் நிழலாடியது.

ஊரில் இருந்து அவன் இராணுவ 'ட்ரக்'கில் ஏற்றப்பட்ட போது அவள் போட்ட அலறல்.... 'ட்ரக்' புறப்பட்டு விரைந்த போது, "அவரை விடுங்கோ, விடுங்கோ" என்று கத்தியபடி அவள் அதன் பின்னே சிறிது தூரம் ஓடி வருகிறாள். 'மங்களம், மங்களம்' என கனகசபையின் மனம் ஓலமிட்டது. அவள் களைத்து விடுகிறாள். 'ட்ரக்'கும் வேகத்தைக் அதிகரிக்கின்றது. அவள் நின்றுவிடுகிறாள்.

களுத்துறையில் இருந்து கொழும்புக்கு வந்தவுடன் முதல் வேலையாக ஊரில் அவர்களது வீட்டுக்கு அருகில் உள்ள மணியன் அண்ணனுடன் கனகசபை தொடர்பு கொண்டான். "அண்ணே, கனகசபை பேசுறன். ஒருக்கால் மனுசிக்காரியோடை கதைக்கலாமோ?" எனக் கேட்கிறான்.

"உன்னை எப்ப விட்டவையள்?"

"இண்டைக்குத்தான்."

"எங்கடை பெடியள் ஆரும் அங்கை இருக்கினமோ?"

"இல்லை....."

"சரி, நீ இன்னும் பத்து நிமிசத்தால எடு. நான் அவவை கூப்பிடுறன்."

பத்து நிமிடங்களின் பின் மீண்டும் கனகசபை தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்த, மங்களம் அழுகை அடைக்கும் குரலில் பேசினாள். "உங்களை விட்டுட்டாங்களோ? எப்படி இருக்கிறியள்?"

"நல்லா இருக்கிறன்."

"இனி எப்ப இந்தப்பக்கம் வாறியள்?"

"இப்போதைக்கு உங்கை வரமாட்டன். ஆக்கள் பகிடி பண்ணுவினம்....... மங்களம், ஊரில இருந்தாலும் பிரச்சனை தான். இஞ்சை ஒரு வேலை எடுக்க இருக்கிறன். நீர் கவனமாகப் பிள்ளையளைப் பாரும்."

"நீங்களும் உங்கடை உடம்பைப் பாருங்கோ. வேலை

ஒண்டும் கிடைக்காட்டால் வாங்கோ. இஞ்சை ஏதாவது செய்யலாம்."

"பார்ப்பம்."

குளியலறையில் இருந்து யோகமலர் வந்தாள். அவளைப் பார்க்க அவன் பிரமித்துவிடுகிறான். அவள் மேனியை அகலமான துவாய் ஒன்று மட்டுமே போர்த்தி இருந்தது. தனது அறைக்குச் சென்றவள் உடனடியாகவே வெளியில் வந்தாள். பத்து ரூபாய் தாளொன்றை அவனிடம் நீட்டினாள். "கனகு, சாய்பு நானான்ர கடையில ஒரு றாத்தல் பாண் வாங்கிக் கொண்டு வாறியளோ" என்கிறாள்.

அவளது மேனியில் இருந்து சவர்க்காரத்தின் வாசம் வெளியேறுகின்றது. அதன் நறுமணத்தில் மிதந்தவண்ணம் அவள் மேனியை அவன் கடைக்கண்ணால் நோக்குகின்றான். அப்பார்வையின் அர்த்தத்தை அவள் புரிந்து கொள்ளவில்லை. இயல்பாக நிற்கிறாள்.

பாண் வாங்கிக் கொண்டு திரும்பி வரும்வரை யோகமலரின் கோலம் தான் அவன் நெஞ்சில் உறைந்திருந்தது. இயல்பாக, எவ்வித வெட்கமும் இன்றி அவள் அவ்வாறான கோலத்தில் ஏன் வந்தாள் என்று அவனுள் ஆச்சரியமாக இருந்தது. அவள் அடிமனதில் ஏதாவது தப்பெண்ணம் புதைந்திருந்ததா? இல்லாவிடில் அச்சேரிப்புறத்தில் வாழ்ந்து, அப்படியான கோலத்தில் வருவதைத் தவறில்லை என நினைக்கிறாளா?

வீட்டினுள் பிரவேசிக்கிறான். அவள் சேலை அணிந்து, குசினியில் நின்றாள். அவன் பாணை நீட்டினான். "இப்ப சாப்பிடப் போறியளா?" அவள் கேட்கிறாள்.

"இல்லை. பிறகு சாப்பிடுறன். நீங்கள் சாப்பிடுங்கோ."

அவள் பாணை இயந்திரகதியாக துண்டு துண்டாக வெட்டினாள். "நான் சாப்பிடப் போறன்."

அவள் நின்றவாறும், நடந்தவாறும் சாப்பிட்டாள்.

"நான் இஞ்சை இருந்து போனால் ஆர் பிள்ளையளைக் கவனிக்கிறது?" அவன் கேட்டான்.

"அதுகள் தங்கடபாட்டில இருக்குங்கள். பழகிட்டுதுகள். சுற்றவரத்தானே ஆக்கள் இருக்கினம்? ஏதும் தேவை எண்டால் அவையள் உதவி செய்வினம்."

"பிள்ளைகள் பள்ளிக்கூடம் எண்டு எங்கையும் போறதில்லையா?"

"முந்தி ரத்மலானை குருடர், செவிடர் பாடசாலைக்கு போய் வந்தினம். நான் தான் கூட்டிக் கொண்டு போய் கூட்டிக் கொண்டு வாறனான். இப்ப நான் வேலைக்கு போறதால அதுகள் வீட்டிலை தான் இருக்குதுகள். அதுகளை அங்கை அனுப்புறதுக்கு ஏதாவது வழி செய்ய வேணும்."

யோகமலர் அங்கிருந்து வெளியேறிய பின்னரும் அவளின் பிள்ளைகள் எழவில்லை.

கனகசபை வீட்டில் இருந்து புறப்பட்டான்.

நேரே முன்னர் வேலை செய்த 'கொம்பனிக்குச்' சென்றான். நிருவாக அதிகாரியைச் சந்தித்தான்.

"தம்பி கனகசபை, இப்ப 'பிசினஸ்' ரொம்ப 'டல்'. முந்திய மாதிரி இல்லை. ஒண்ணுமே செய்ய முடியாத நிலை. 'கொம்பனியை' மூடி விடுவமா எண்டு கூட 'பொஸ்' நினைக்கிறார்" என்று நிருவாக அதிகாரி தெளிவாகக் கூறிவிடுகிறார்.

கனகசபைக்கு ஏமாற்றமாகிவிட்டது. முதல் முயற்சியே தோல்வியில் முடிவடைந்துவிட்டது.

என்ன செய்வோம்?

தர்மலிங்கத்தைச் சந்தித்து வேலை பற்றி விசாரித்தால் என்ன என்று கனகசபை எண்ணினான். பல வழிகளிலும் கனகசபைக்கு அறிவுரை கூறுபவன். கொழும்பில் நீண்ட காலமாக வாழ்கிறான். சற்று செல்வாக்கு படைத்தவன். சுழியோடி. அவன் உதவுவான் என்ற நம்பிக்கை ஏற்பட அவனைத் தேடி கனகசபை செல்கிறான். தர்மலிங்கத்தின் அலுவலகத்தை அடைகிறான்.

"என்னடாப்பா?" என்று தர்மலிங்கம் வினவ, தனது நோக்கத்தை கனகசபை வெளியிடுகிறான்.

"வேலையா? இந்த அரசாங்கம் வந்தாப் பிறகு எங்கடா 'பிசினஸ்' நடக்குது? ஒவ்வொருத்தனும் தன்ர 'பிசினஸை' குறுக்குறானே ஒழிய விஸ்தரிக்கிறான் இல்லை. வேலை எண்டால் ஆமியில சேர வேணும். உன்னை எடுக்கமாட்டாங்கள். நீ தமிழன். அதோட உனக்கு நாற்பதுக்கு மேலே வயசு" என்கிறான் தர்மலிங்கம்.

"வேலை கிடைக்காட்டால் நான் ஊருக்குத்தான் போக வேணும். ஆனால், அங்கை போய் என்னத்தை செய்யுறது? கமம் செய்யலாம். ஆனால், அதுக்கும் 'லக்' வேணும். மழை இருந்தால் விதை நெல் இருக்காது. விதை நெல் இருந்தால், மழை இருக்காது. ரண்டும் இருந்தால், பசளை இருக்காது. சரி மூண்டுமே இருக்குது எண்டால், அறுவடை செய்யுற நேரமாக பார்த்து பிடிச்சு அடைச்சுப் போடுவாங்கள்."

தர்மலிங்கம் சுவாரஷ்யத்துடன் தலையாட்டினான்.

"'ஆமி'க்காரங்கள் என்னை பிடிக்க முந்தி நெல் அறுவடைக்கு 'ரெடி'யாக இருந்தது. நாசமாய் போக, வந்து பிடிச்சிட்டாங்களே."

"தமிழன்ர நிலை பிச்சைக்காரன்ர நிலையை விட கேவலமா போயிட்டுது. என்ன செய்யுறது? ஊரில வேலை இல்லை. கொழும்பிலையும் வேலை இல்லை. இஞ்ச இப்ப வரவர எங்கட சனம் வந்து சனப்பெருக்கமும் கூடிட்டுது. வீட்டை வாடகைக்கு எடுக்க ஏலாது. ரண்டாயிரத்துக்கு வாடகைக்கு விடுற வீடெல்லாம் இப்ப பத்தாயிரமாயிட்டுது" என்று அவசியமற்ற விடயங்களைப் பற்றி எல்லாம் தர்மலிங்கம் பேசினான்.

"அண்ணே, நான் இப்ப என்ன செய்யுறது?" கனகசபை முடிவாகக் கேட்டான்.

"ஊருக்கு போ. கமத்தை செய்து பார். ஒருக்கால் உன்னை பிடிச்சிட்டாங்கள். இனிப் பிடிக்க மாட்டாங்கள்."

தர்மலிங்கத்தின் யோசனை கனகசபைக்குப் பிடிக்கவில்லை. மனதில் கறுவிக் கொண்டு அங்கிருந்து கிளம்பினான்.

வீதியில் நடக்கிறான்.

வெயில் மண்டையைப் பிளக்கிறது.

வாகனங்களின் இரைச்சல், விரைந்து செல்வோரின் உராய்வுகள், புழுதிகள், நாற்றங்கள்...... யாவற்றையும் சகித்தவண்ணம் கனகசபை நடக்கிறான்.

தன்னை நினைத்து அவனுக்கு வெறுப்பாக இருந்தது. சே! என்று பல தடவைகள் அலுத்துக் கொண்டான். இந்தப் பென்னம் பெரிய நகரில் தனக்கு ஒரு வேலை கிடைக்காதா என ஏங்கினான்.

முதல் தடவையாக பசுமைப்புரட்சி செய்யப் போகிறேன் என்று கூறி அரசாங்க உத்தியோகத்தை உதறித் தள்ளிய தனது முட்டாள்தனமான முடிவையிட்டு மனம் வருந்தினான். அந்த வேலையைத் தொடர்ந்திருந்தால் இன்று அவன் ஓர் உயர்ந்த ஸ்தானத்திற்கு வந்திருப்பான். வேலை தேடி ஒருவரையும் நாடிச் செல்லத் தேவை இல்லை. அரசாங்க உத்தியோகத்தன் என்ற கௌரவத்துடன் வாழலாம். பாதுகாப்பு கெடுபிடிகளுக்கு நிறையவே முகம் கொடுக்கத் தேவையில்லை. இவ்வாறான ஒரு சேரிப்புறத்தில் கள்ளர், காடையர், விலை மாதர்களுக்கு மத்தியில் வாழத் தேவையில்லை. கூனிக்குறுகி வாழ்க்கையைத் தொடரத் தேவையில்லை.

அரசாங்க உத்தியோகத்தைத் தொடர்ந்திருந்தால் மனைவி, பிள்ளைகளை கொழும்பில் குடி வைத்திருக்கலாம். குடும்பம் ஊரிலும், அவன் இங்குமாக பற்றற்ற வாழ்க்கைக்கு அர்த்தம் கூறும் வகையில் வாழத் தேவையில்லை. எல்லோரும் ஒன்றாக கூழோ, கஞ்சியோ குடித்து வாழ்ந்திருக்கலாம்.

மனம் குமைந்த நிலையில் அவன் நடக்கிறான்.

பாதையோர வியாபாரிகள் தமது பொருட்களை கூவி விற்றுக் கொண்டிருந்தார்கள். 'இம்போர்ட்டட் படு' 'லாபாய், லாபாய்' என்று அவர்கள் கத்தினார்கள். அவர்கள் வாகன இரைச்சலைப் பொருட்படுத்தவில்லை. வெயிலின் அகோரத்தன்மையைப் பொருட்படுத்தவில்லை. வியாபாரமே கண். பணத்தை ஈட்டுவதே குறி. தமது குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதே இலக்கு. அதை அடைவதற்காக அவர்கள் தமது சுகத்துக்கு, உடலுக்கு,

உள்ளத்திற்கு, கௌரவத்திற்கு என்று பலவற்றுக்கு ஏற்படுகின்ற பிரதிகூலங்களைப் பொருட்படுத்தவில்லை.

ஒன்றைப் பெறுவதற்கு இன்னொன்றை இழக்க வேண்டும். அதுதான் நியதி போலும்.

கனகசபை நிறையவே சிந்தித்தான்.

# (11)

**சூ**றாவளி போல காற்று சில நிமிடங்கள் வரை வீசியது. நிலத்தில் இருந்து புழுதி பறந்து, சூழலை மாசுபடுத்தியது. வானம் இருண்டது. காற்றின் வேகம் தணியவில்லை. அந்தக் குடியிருப்பின் தகரக் கூரைகள் தாளம் போட்டன. அயலில் நெடுந்துயர்ந்திருந்த தென்னைகள் முறியுமாப் போல வளைந்து, நிமிர்ந்தன.

மாலைக்குரிய அவ்வேளை இருட்டின் அர்த்தத்தைக் கற்பிக்க முயன்றது.

காற்றின் வேகம் தணிகின்றது. அதனுடன் குளிர் இணைந்துவிடுகின்றது. குளிர்காற்றுடன் கைகோர்த்தவண்ணம் மழை பொழிய........

வீதியில் பரம்பியிருந்த யாவரும் தமது குடியிருப்புக்குள் பாய்ந்துவிடுகின்றனர்.

அகோரத்தனத்துடன் மழை தொடர்கின்றது. காற்றும் அதனுடன் போட்டியிடுகின்றது.

குடியிருப்பின் முன்புறத்தில் திறந்திருந்த ஒரேயொரு ஜன்னலை யோகமலர் மூடிவிட்டு, முன் கதவை மூட முற்படுகையில், வீச்சுடன் ஓடிவந்த கனகசபை யோகமலருடன் முட்டி மோதுமாப் போல நின்றுவிடுகிறான். வியப்புடன் இணைந்த புன்னகையை அவள் வெளிவிடுகின்றாள்.

"நல்லா நனைஞ்சிட்டியள் போல..........." என்கிறாள் அவள்.

"ஓ! நான் எதிர்பார்க்க இல்லை. கடையடியில நிண்டிருக்கலாம். மழை பெலக்காது எண்டு நினைச்சு வர, இந்த மாதிரி அடைமழை பெய்ஞ்சிட்டுது" என்றவாறு கைக்குட்டையினால் முகத்தைத் தொடைத்தான் கனகசபை.

"வாங்க..... உள்ளுக்கை" என்ற யோகமலர், துவாயை எடுத்து வந்து அவனிடம் நீட்டினாள்.

அவன் தலை, முகம், உடம்பு என யாவற்றையும் துவட்டினான்.

"மாத்திப் போடுறதுக்கு உடுப்பு இல்லையாக்கும். தாறதோ?"அவள் கேட்கிறாள்.

"ஓ..... தந்தால் நல்லது." அவன் அசடுவழிகிறான்.

"அவர்ட்டை உடுப்பு இருக்குது. தாறன். உங்களுக்கு அளவோ தெரிய இல்லை" என்றபடி சென்றவள், திரும்பி வந்து கரும் பச்சை நிறச் 'சேர்ட்' ஒன்றையும், நிறைய வர்ணங்களிலான சாரத்தையும் அவனிடம் நீட்டினாள்.

"'யூ.என்.பி.'காரங்கள் தந்த 'சேர்ட்'டா" என்று சிரித்தவன், நேரே குளியலறைக்குச் சென்றான்.

சில நிமிடங்களில் யோகமலர் நீட்டியிருந்த 'சேர்ட்'டையும், சாரத்தையும் அணிந்தபடி 'ஹோலுக்கு' வந்தான். "நல்ல அளவு" என்கிறான் அவன்.

'ஹோலில்' அமர்ந்திருந்த யோகமலரின் இரு பிள்ளைகளும் அவனைப் பார்த்து பேந்தப் பேந்த விழித்தன. அதை கனகசபை அவதானித்துவிட்டான்.

"அப்பான்ர 'சேர்ட்'டையும், சாரத்தையும் நான் போட்டிருக்கிறதை உங்கட பிள்ளையள் கண்டு பிடிச்சிட்டுதுகள். ஒருத்தரை ஒருத்தர் பார்த்து முழுசுதுகள்" என்று சொல்லி கனகசபை சிரித்தான்.

"இந்த விசயத்திலை அதுகள் கெட்டிக்காரர். நல்ல ஞாபகசக்தி இருக்குது. இந்த சாரத்தையும், 'சேர்ட்'டையும் அவர்

ஐஞ்சு வருசத்துக்கு முந்தித்தான் போட்டார். அதுக்குப் பிறகு போட இல்லை. எனக்குக் கூட இப்ப அலுமாரியை கிண்டக்கிள்ளை தான் இப்படி ஒரு சாரம் இருக்குது எண்டு ஞாபகம் வந்தது."

"ரண்டு பேரையும் ஒரு நல்ல வழியில கொண்டு போனால் பிற்காலத்தில அதுகள் தங்கடபாட்டை பார்க்குங்கள். அதுகளை தொடர்ந்தும் படிப்பிக்கிறதுக்கு ஏதாவது வழியை பார்க்க வேணும். படிக்கிற இடத்தில பிற்காலத்தில ஏதாவது வேலை செய்யுறமாதிரி ஏதாவது கைப்பணி பயிற்சியைக் குடுப்பினம்."

"உண்மை தான். இதைப் பத்தி நானும் நினைக்கிறனான். நான் இப்ப இருக்கிற நிலைமையில என்ன செய்யுறது?"

"ஒண்டுமே செய்ய ஏலாது தான். இப்ப வயித்துப் பாட்டைத் தான் பார்க்க வேணும். உங்களுக்கு ஆட்சேபனை இல்லை எண்டால் நானே அதுகளை கூட்டிக் கொண்டு போய் திருப்பிக் கூட்டிக் கொண்டு வரட்டா?"

சிந்தனையுடன் அவனை அவள் நோக்கினாள். "வேலை எடுக்கிறதுக்கு நீங்கள் இண்டைக்கு எடுத்த முயற்சி சரிவர இல்லையா?"

அவன் தலையினால் இல்லை என்று பதிலளித்தான். "இப்ப இருக்கிற சூழ்நிலையில வேலை ஒண்டு கிடைக்கும் எண்டதில எனக்கு நம்பிக்கை இல்லை. எல்லாரும் கைவிரிச்சுப் போட்டினம்." அவன் குரலில் உண்மையான வருத்தம் இழையோடியது.

அவன் முன்பாக பிள்ளைகளுக்கு அருகாக அவள் அமர்ந்தாள். "அப்படித்தான் இப்ப கொஞ்சக் காலமா இருக்குது. உங்கட வேலை விசயமா நான் என்ர 'பொஸ்'ஸோட கதைச்சனான். அவர் வெறுமனே பார்ப்பம் எண்டு மட்டும் சொன்னார். எனக்கெண்டால் நம்பிக்கை இல்லை."

"அரசாங்கத்தின்ர கொள்கையைத் தான் எல்லாரும் சாடுகினம். சமாதானத்திற்கான யுத்தம் எண்டு சொல்லி அபிவிருத்திக்கெண்டு வாற காசை எல்லாம் ஆக்களையும், கட்டிடங்களையும் அழிக்கிறதில தான் அரசாங்கம் செலவழிக்குதாம்.

இதால அபிவிருத்தியும் இல்லை. வேலை வாய்ப்பும் இல்லை. இப்படியே போனால் நாடு குட்டிச்சுவராகத் தான் போகுது."

"வெளியில இருந்து எங்கடை ஆக்கள் அனுப்புற காசிலையும், மத்திய கிழக்கு நாட்டிலை இருந்து அனுப்புற காசிலையும் தான் நாடு ஒரு மாதிரி ஆட்டங்காணாமல் போகுது. அதுவும் நிண்டால் அவ்வளவு தான்."

அவள் கூற்று சரியென்பது போல தலையாட்டியவன், "பிள்ளையளை பள்ளிக்கூடத்திற்கு கூட்டிக் கொண்டு போறது பற்றி........." என இழுத்தான்.

"நீங்கள் இஞ்சை இருக்க மட்டும் கூட்டிக் கொண்டு போவியள். அதுக்குப் பிறகு?"

அவள் கேள்வி அவனைச் சிந்திக்கத் தூண்டியது. மௌனத்திற்கு அடிபணிந்தான். யோசனைக்குள் நுழைந்தான்.

மழையின் சீற்றம் அடங்கியது.

யோகமலர் குசினிக்குள் முடங்கிவிட்டாள். குசினியில் இருந்து நிறைய புகை 'ஹோலுக்கு' வந்தது.

யோகமலரின் பிள்ளைகள் தொலைக்காட்சியில் நிகழ்ச்சி ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்தனர். கனகசபைக்கு ஒன்றுமே செய்ய இருக்க இல்லை. பழைய பத்திரிகைகள் நிலத்தில் கிடந்தன. அவற்றை எடுத்து மேலோட்டமாக வாசித்தான்.

இருள் நன்கு கவிழ்ந்தது.

மழையும் நின்றது.

அக்கம், பக்கத்தில் இருந்து நிறைய சத்தங்கள் கேட்டன. விதம் விதமான பாடல்கள் ஒவ்வொரு ஓசை மட்டத்தில் வெளிவந்தன. முன்புறமாக இரு ஆண்கள் காரசாரமாக வாதிட்டனர். அரசியல் தான் அவர்களது வாதத்தின் கருப்பொருள். இனப்பிரச்சனையையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை. அது பற்றியும் விவாதித்தார்கள். இருவரும் நன்கு குடித்திருக்க வேண்டும். தூஷண வார்த்தைகளையும் கலந்தனர்.

"கனகு...... " யோகமலர் அழைத்தாள்.

கனகசபை குசினிக்குச் சென்றான்.

"கனகு......." அவனை அவள் ஏறெடுத்தும் நோக்கவில்லை. "'ரோட்'டிலை 'பி.எம்.எஸ்.ஸ்ரோர்ஸ்' எண்டு ஒரு கடை இருக்குது. அங்கை போய் ஒரு 'கிலோ' சீனியும், அரைக் 'கிலோ' கோதுமை மாவும் வாங்கிக் கொண்டு வாறியளோ?"

"அதற்கென்ன?"

அவள் காசை நீட்ட, கனகசபை வீட்டை விட்டு வெளியேறுகிறான்.

வெளியே நிலம் முழுவதும் சேறும், சகதியுமாகக் கிடந்தது. கான் ஒன்று நிரம்பி, கழிவெல்லாம் வீதியில் மிதந்தது.

கனகசபைக்கு கால்களைக் கீழே பதிக்கவே கூசியது. கால்களை எட்ட வைத்து நடக்கிறான்.

சாய்பு நானாவின் ரொட்டிக் கடையைத் தாண்டி நடக்கிறான்.

ரொட்டி தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்த சாய்பு நானா அவனைக் கண்டு தலையை மேலும் கீழும் ஆட்டி, அடையாளப் புன்னகை ஒன்றை வெளியிட்டான்.

ரண்மெனிக்கேயின் வீட்டை கனகசபை தாண்ட முற்படுகையில் வீடு திறந்திருப்பதைக் காண்கிறான். ரண்மெனிக்கே அவன் கண்களுக்குள் சிக்கிவிடுகிறாள். அவளைக் கண்டு கதைத்தால் என்ன என்று யோசிக்கிறான். அங்கு செல்வதற்கு அவனுக்கு என்னமோ போலிருந்த போதிலும் அவன் சென்றான்.

சுவர்ணசீலி தான் முதலில் எதிர்ப்பட்டாள். "'அடோ கொட்டியா', நீங்கள் எங்களுக்கு முன் வெளியே வந்துவிட்டீர்கள். உங்களை ஏன் தான் விட்டார்களோ?" என்று கேட்டு கொக்கரித்தவள், வெளியே சென்றுவிட்டாள்.

சுனிதாவும் வெளியே வந்தாள். கனகசபையைப் பார்த்தவள் ஓர் அரைகுறைப் புன்னகையை வெளிவிட்டாள். ஒரு வார்த்தை கூட பேசவில்லை. அவள் மீண்டும் வீட்டுக்குள் செல்ல, ரண்மெனிக்கே வெளியே வந்தாள்.

"உங்களுக்கு அந்த 'ஓ.ஐ.சி.'யை தெரியுமா?" என ரண்மெனிக்கே எடுத்த எடுப்பில் கேட்டாள்.

"ஓமோம். இரண்டு பேரும் ஒன்றாக வேலை செய்தோம்." கனகசபை பெருமையுடன் பதில் அளித்தான்.

"அப்படியென்றால் ஐயாவைப் பிடித்தால் தான் நாங்கள் தப்பலாம். இல்லாவிட்டால் 'சார்ஜன்ட்' பெரேரா வழக்குத் தாக்கல் செய்து விடுவான். நீங்கள் போய் 'ஓ.ஐ.சி.'யை சந்தித்து எங்களுக்கு எதிராக வழக்கு போட வேண்டாம் என்று சொல்லுங்கள். நாங்கள் அதற்கு 'சம்திங்'காக ஐயாயிரம் ரூபா தருவோம்."

ரண்மெனிக்கேயின் பேச்சு கனகசபையின் வயிற்றைக் கலக்கியது. இவள் என்ன சொல்கிறாள்? 'இன்ஸ்பெக்டர்' ரட்ணாயக்காவைச் சந்தித்து இவ்வாறான ஒரு வேண்டுகோளை எவ்வாறு விடுப்பது? ரண்மெனிக்கேயுடன் எவ்விதத் தொடர்பையும் வைத்துக் கொள்ளவேண்டாம் என்று அறிவுறுத்தியவர்.

என்ன செய்வது? இரு தலைக்கொள்ளி எறும்பு நிலையில் நின்று கனகசபை தவித்தான். முடியாது என்று சொன்னால், ரண்மெனிக்கே உச்சஸ்தாயில் கத்தி, தூஷண வார்த்தைகளை வெளியிடுவாள். அதன் பின் அவன் அந்தக் குடியிருப்பில் தொடர்ந்தும் தங்கியிருக்க முடியாது.

மூளையைப் போட்டு குதறி எடுத்தான்.

"சரி, சொல்லிப் பார்க்கிறேன்" என்று மெல்ல இழுத்தான்.

"சொல்லிப் பார்க்கிறதில்லை. கட்டாயம் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் எனக்கு கெட்ட கோபம் வரும்" என்று அவள் ஆவேசம் வந்தவளாகக் கத்தினாள்.

"சரி" என்றான் கனகசபை.

"பணம் தருவேன். ஐயாயிரம்........ காணாவிட்டால் பத்தாயிரம் தருவேன். ஆனால், வேலையை விரைவாகவும், இரகசியமாகவும் நிறைவேற்ற வேண்டும்."

பலிகடா போல, கனகசபை பேசாமல் நின்றான். சில வினாடிகள் தான்.

"சரி போயிட்டு வாங்க."

கனகசபை அங்கிருந்து நடக்க, இளைஞன் ஒருவன்

வீட்டினுள் பிரவேசித்தான். ரண்மெனிக்கே வாயெல்லாம் பல்லாக அவனை வரவேற்கின்றாள்.

கனகசபை நடக்கிறான்.

மாவையும், சீனியையும் வாங்கிக் கொண்டு திரும்புகிறான்.

சாய்பு நானா ரொட்டிக் கடையை அவன் கடக்க முற்படும் போது சாய்பு நானா அவனைக் கண்டுவிடுகிறான். கண்களால் தன்னிடம் வருமாறு பணிக்கிறான். கனகசபை செல்கிறான்.

"தொரே, வீட்டுக்கா போறீங்க?" என சாய்பு நானா கேட்டான்.

"ஓமோம்."

"இப்பத்தைக்கு போயிடாதீங்க. அந்த அம்மான்ர புருசன் மூக்கு முட்ட குடிச்சிட்டு இங்க வந்தாரு. ஆரடா என்ட பெஞ்சாதியோட கூடிகுலாவுறான். அவனை இண்டைக்கு கொல்லாமல் போகமாட்டன்னு இங்கனைக்கு நின்னு கத்தினாரு. அப்புறமா தள்ளாடியபடி வீட்டுக்கு போனாரு. அந்த அம்மா கத்திக் குழர்ற சத்தமெல்லாம் கேட்டுது. இவரு அவவை போட்டு அடிச்சு உதைச்சிருக்கனும்" என்று ஆலாபரணத்துடன் சாய்பு நானா சொல்லி முடித்தான்.

கனகசபைக்கு நெஞ்செல்லாம் அடைத்தது போன்றிருந்தது. நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பின.

அவன் அப்படியே நின்று விடுகிறான். அவனை இடித்துத் தள்ளிக்கொண்டு இரண்டு, மூன்று பேர் உள்ளே சென்றனர்.

கனகசபை வீதிக்கு வந்து விடுகிறான். அங்கிருந்த படி யோகமலரின் வீட்டை நோக்கினான். வீட்டில் 'லைட்' எரிந்தது. வேறொன்றும் ஈர்க்கத்தக்கதாக தெரியவில்லை.

மனதில குடி புகுந்திருந்த கொஞ்சநஞ்ச நிம்மதியும் அவனிடம் இருந்து விடைபெற்றுவிட்டது. அமைதியின்மை மனதை ஆக்கிரமித்தது. ஒவ்வோர் இக்கட்டான நிலையில் இருந்து மீண்டு நிம்மதியை அரவணைக்கும் போது, நிம்மதி குலையும் வகையில் சம்பவமொன்று இடம்பெற்று விடுகின்றது.

இப்பொழுது புதியதொரு பிரச்சனைக்கு அவன் முகம்

கொடுக்க வேண்டும். யோகமலரின் கணவன் அப்புதிய பிரச்சனையை உருவாக்கி இருக்கிறான். கனகசபை அங்கு குடியேறி இருபத்தி நான்கு மணித்தியாலங்களுக்குள் யோகமலரின் கணவன் அது பற்றி அறிந்து ரகளை புரிந்திருக்கிறான்.

இவ்வாறான ஒரு சூழ்நிலைக்கு அவன் எவ்வாறு முகம் கொடுப்பது?

யோசித்தவாறு வீதியோரத்தில் நின்றான். 'ஓட்டோ ரிக்ஷோ' ஒன்று விரைவாக அவனைத் தாண்டிச் செல்கிறது. அதன் ஒரு சில்லு சேற்றுக்குள் அமிழ்ந்தி விட, சேறு அவனை அபிஷேகம் செய்துவிடுகிறது. வாய்க்குள்ளும் சேறு புகுந்து விடுகிறது. உடையெல்லாம் ஒரே சேறு.

அவனுக்கு அழுகை வரும் போலிருந்தது. அந்தளவுக்கு அவன் மனநிலை பாதிப்படைந்துவிட்டது.

சிந்தனையற்ற நிலையில் அவன் 'விறுவிறு' என்று நடக்கிறான். யோகமலரின் வீட்டை அடைந்து உள்ளே செல்கிறான். யோகமலரின் புருஷன் 'ஹோலில்' அமர்ந்திருக்கிறான். கனகசபை 'பாத்ரூமை' அடைகின்றான். உடுப்புக்களைக் களைந்துவிட்டு குளித்தான். துவாயைக் கட்டிக் கொண்டு வெளியே வர, யோகமலர் அவனுக்கு 'சேர்ட்'டையும், சாரத்தையும் நீட்டினாள். அவள் முகம் வீங்கி, இதழில் இருந்து இரத்தம் வழிந்ததிற்கான அடையாளம் தெரிந்தது.

"உடுத்துக் கொண்டு வாங்கோ" என்கிறாள் அவள்.

கனகசபையின் பார்வை 'ஹோலுக்குள்' தாவியது. அங்கு அமர்ந்திருந்த அவள் புருஷனைக் காணவில்லை. கேள்விக்குறியுடன் யோகமலரை நோக்க, "அவர் போயிட்டார்" என்றாள்.

"உங்களை அவர் அடிச்சு, நீங்கள் கத்திக் குழறினதாகக் கேள்விப்பட்டன்."

"அவர் அடிச்சது உண்மை. நான் கத்திக் குழறினது உண்மை."

"அவர் ஏன் வந்தார்?"

"ஆரோ ஒரு அந்நியன் இஞ்ச இருக்கிறதாக அவருக்கு ஆரோ சொல்லி இருக்கினம்."

"அதுக்காக சாய்பு நானான்ர ரொட்டிக் கடைக்குப் போய் ஆரடா என்ர பெஞ்சாதியோட கூடிக் குலாவுறான் எண்டு கேட்டு கத்தி இருக்கிறார்."

"ஓ, அப்படி கத்தி இருக்கிறாரா? இஞ்சை வந்து என்ன கத்தி என்னை அடிச்சார் எண்டு தெரியுமா?"

"தெரியாது."

"ஏன்ரி ஒண்டுக்குப் பின்னால இன்னொண்டு எண்டு ஊமைப் பிள்ளையளைப் பெத்தனி எண்டு தான் கேட்டவர்."

கனகசபை ஆச்சரியமடைந்தான்.

# (12)

இரு நாட்கள் வீட்டில் அடைந்து கிடந்த கனகசபைக்கு மூன்றாம் நாள் காலையில் எங்காவது போக வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது.

அதுபற்றி யோகமலரிடம் சொல்ல, "ஓ, அதுக்கென்ன, போயிற்று வாங்களேன். ரண்டு நாளா வீட்டிலை அடைஞ்சு கிடக்கிறியள்" என்றாள்.

எங்கு போவது என மனதைப் போட்டு குடைந்தான். வேலை தேடிச் செல்லலாம். எங்கு போவது? வெறுமனே ஒவ்வொரு நிறுவனத்திற்கும் சென்று வேலை கேட்க முடியுமா? அவன் வந்திருக்கும் நோக்கத்தைக் கேட்டவுடன் 'செக்கியூரிட்டி கார்டமார்' அவனைத் திருப்பி அனுப்பிவிடுவார்கள். நிறுவனத்தின் அதிகாரிகளையே பார்க்க அனுமதிக்கமாட்டார்கள். அப்படியெனில், எங்கு செல்வது?

தர்மலிங்கத்தின் நினைவு மனதிற்கு வந்தது. அவனைச் சந்தித்தால் என்ன? வேலை பற்றியும் அவனிடம் கேட்கலாம்.

கனகசபை வீட்டை விட்டு வெளியேறினான். யோகமலரின் இரு பிள்ளைகளும் அவனை பேந்தப் பேந்த விழித்துப் பார்த்தன. அவர்களிடம் சைகை மூலம் போய்விட்டு வருவதாகக் கூறினான்.

வீதியில் இறங்கி நடக்கிறான். வழியில் ரண்மெனிக்கே எதிர்ப்படுகிறாள். கனகசபையைக் கண்டவுடன் அவனை நெருங்கினாள்.

எடுத்த எடுப்பில், "'ஓ.ஐ.சி.'யை சந்தித்து எனது விடயமாக கதைத்தீர்களா?" என அவள் கேட்டாள்.

கனகசபை முழித்தான். என்ன சொல்வது? ஏதாவது பொய்யைச் சொல்லி சமாளிக்க வேண்டும். இல்லாவிடில் அவளது ஏச்சுக்களில் இருந்து தப்பமுடியாது.

"நேற்று அவரைப் பார்க்கச் சென்றேன். ஆனால், அவர் அலுவலகத்தில் இருக்கவில்லை" என்று அவன் வாய்கூசாமல் பொய் சொன்னான்.

அவள் சந்தேகத்துடன் அவனை நோக்கினாள். "பொய் சொல்லுறீங்களா?"

"இல்லை. உண்மையைத் தான் கூறுகிறேன்."

என்ன நினைத்தாளோ, "சரி, சரி, எப்படியும் இன்றைக்கு, அல்லது நாளைக்கு வேலையை முடித்துவிடுங்கள்" என்றாள்.

"சரி" என்றவன் நடந்தான்.

ரண்மெனிக்கேயின் வார்த்தைகள் அவன் மனதில் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. 'இன்ஸ்பெக்டர்' ரட்ணாயக்காவைச் சந்தித்து ரண்மெனிக்கேயின் விடயம் பற்றிப் பேசினால் என்ன என்ற எண்ணம் அவனுள் முளைவிட்டது. சிறிது தூரம் நடக்க அவன் 'பொலிஸ்' நிலையத்தை அண்மித்து விடுகிறான்.

'இன்ஸ்பெக்டரைச்' சந்தித்து ரண்மெனிக்கேயின் சார்பாகக் கதைப்பது என்று முடிவு எடுக்கிறான்.

அவன் சென்ற வேளை 'இன்ஸ்பெக்டர்' இருக்கவில்லை. மதியம் போல் தான் வந்தார். அது வரை அவன் வாங்கில் அமர்ந்திருந்தான்.

'இன்ஸ்பெக்டர்' வந்தார்.

தயக்கத்துடன் உள்ளே சென்ற கனகசபை 'இன்ஸ்பெக்டருக்கு' முன்பாக அமர்ந்தான். அவர் மலர்ச்சியாக புன்னகைக்க, அவனுள் துணிவு வேரூன்றுகின்றது.

"உங்களிடம் ஒரு உதவி கேட்டு வந்திருக்கிறேன்" என கனகசபை வார்த்தைகளை இழுத்தான்.

"என்ன?"

"ரண்மெனிக்கேயுடன் நான் சில நாட்கள் தங்கி இருந்தேன். அந்த நன்றிக்கடனுக்காக நான் அவளுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும். அவளுக்கு எதிராக வழக்குத் தொடராமல், அவளை விட முடியுமா?" என்று அவன் தட்டுத் தடுமாறியபடி சொல்லி முடிக்க, "இந்த மாதிரி விபச்சாரிகளுக்காக நீங்கள் ஏன் உதவி செய்யவேண்டும்?" என்று 'இன்ஸ்பெக்டர்' சற்றுச் சினத்துடன் கேட்டார்.

"எல்லாம் அங்கு தங்கியிருந்த குற்றத்திற்காக..... இந்த ஒரு உதவியைச் செய்தால் அவளிடம் இருந்து தப்பித்துவிடுவேன்."

கனகசபையை 'இன்ஸ்பெக்டர்' கூர்மையாக நோக்கினார். "பார்ப்பம்" என்றவர் மேசையின் மீதிருந்த மணியை அடித்தார். 'பொலிஸ் கான்ஸ்டபிள்' ஒருத்தன் தலையை நீட்டினான். "'சப்-இன்ஸ்பெக்டர்' ஹனீபாவை வரச் சொல்லு" என்றார் 'இன்ஸ்பெக்டர்'.

ஹனீபா வந்தான்.

"அந்த ரண்மெனிக்கேக்கு எதிராக குற்றப்பத்திரிகை தயாராகி விட்டதா?"

"இல்லை."

"அவள் சம்பந்தப்பட்ட பதிவேட்டைக் கொண்டு வா."

ஹனீபா அங்கிருந்து அகன்றான்.

"நீங்கள் இனிப் போயிற்று வாருங்கள். இனியும் இம்மாதிரியான பிரச்சனையில் ஈடுபடாதீர்கள்."

"சரி..."

"இப்பொழுது எங்கு தங்கியிருக்கிறீர்கள்?"

"எனக்கு அறிமுகமான ஒரு குடும்பத்துடன்."

"எங்கு?"

"அதே மல்சிரிவத்தவில் தான்."

'இன்ஸ்பெக்டரின்' முகம் சிறுத்தது. "தமிழ் குடும்பமா?"

"ஓமோம்."

"உங்களுக்கு ஏற்கனவே அக் குடும்பத்தைத் தெரியுமா?"

என்ன சொல்வது? உண்மையைக் கக்குவதா? வேண்டாம் என்று மனம் கட்டளையிட்டது.

"கொஞ்சக் காலமாகப் பழக்கம்."

"அந்தச் சேரிப்புறத்தில் புலி ஆதரவாளர்களும் வாழ்கிறார்கள் என்று எங்களுக்கு தகவல் கிட்டியிருக்கிறது. என்றபடியால் கவனமாக இருங்கள்."

'இன்ஸ்பெக்டரின்' வார்த்தைகள் அவனைத் திகைக்க வைத்தன.

'பொலிஸ்' நிலையத்தில் இருந்து வெளியேறி வீதிக்கு வந்து விடுகிறான். அவன் மனம் ஒரு நிலையில் விளங்கவில்லை. 'இன்ஸ்பெக்டர்' இறுதியாக வெளியிட்ட தகவல் அவனை அச்சுறுத்தியது.

மல்சிரிவத்தவில் தொடர்ந்தும் இருப்பது ஆபத்தானதா? ஏற்கனவே ஒரு தடவை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவன். இனியும் ஒரு முறை கைது செய்யப்பட்டால், அவன் குற்றவாளி என்ற நிலைக்குத் தள்ளப்படுவான்.

சொற்ப வேளைக்குள் அவன் மனம் சஞ்சலத்துக்குள் புகுந்துவிட்டது.

தர்மலிங்கத்தைச் சந்திக்கச் செல்ல வேண்டும் என்ற முடிவை அவன் மாற்றினான். நேரே வீட்டுக்குச்சென்றான்.

கதவு மூடியிருக்க தட்டுகிறான்.

அவன் சற்றேனும் எதிர்பார்க்கவில்லை. யோகமலர் கதவைத் திறந்தாள்.

"தலையிடி. வேலை செய்ய முடியஇல்லை. வந்திட்டன்" என்கிறாள் அவள்.

அவன் உள்ளே செல்கிறான்.

"எங்க போயிட்டு வாறீங்கள்?" அவள் தொடர்ந்து கேட்கிறாள்.

"எங்க போறது? சும்மா ஒரு 'ரவுண்ட்' அடிச்சிட்டு வாறன்." அவன் சமாளித்தான்.

"சாப்பிட்டீங்களா?"

"இல்லை."

"வாங்க சாப்பிடுவம்."

பீங்கான் ஒன்றில் சாப்பாட்டைப் பரிமாறிவிட்டு, அவனிடம் நீட்டினாள்.

"பிள்ளைகள் சாப்பிட்டுதுகளா?"

"அதுகள் சாப்பிட்டுட்டு, படுத்தும்விட்டுதுகள். இனி நாலு மணிக்குத் தான் ஒழும்புங்கள்."

கனகசபை சாப்பிட்டான். அவளும் அவனுடன் சேர்ந்து சாப்பிட்டாள்.

"எப்படி சாப்பாடு? அவசரம், அவசரமாக சமைச்சது" என அவள் கேட்டாள்.

"நல்லா இருக்குது."

"சும்மா சொல்லாதேங்கோ."

"உண்மையைத்தான் சொல்றன்."

"நான் எவ்வளவு தான் நல்லா சமைச்சாலும் அவருக்கு ருசிக்காது. உப்பு இல்லை, புளி இல்லை, காரம் இல்லை, ருசி இல்லை எண்டு எந்த நேரமும் ஓலம் பாடுவார்."

"உங்களுக்குள்ளை சண்டை வாறதுக்கு என்ன அடிப்படைக் காரணம்?"

அவள் சாப்பிடுவதை நிறுத்தினாள். அவனை ஆர்வத்துடன் நோக்கினாள். "உண்மையைச் சொல்லுறதா?"

"ஓமோம்."

"அவர் ஒரு சந்தேகப் பேர்வழி. நான் ஒரு ஆம்பிளையோடை கதைச்சால் போதும், உடன அவருக்கு சந்தேகம் வந்திடும். நான் நிரபராதி எண்டு எடுத்துச் சொன்னாலும் அவர் அதை நம்பத் தயாராக இருக்கமாட்டார். அதால தான் எங்களுக்குள்ளை நிறைய பிரச்சனை வாறது. கடைசியா என்ர ஒன்று விட்ட தம்பி ஒருத்தன் கனடாவுக்கு போற வழியில இஞ்ச வந்து நிண்டான். அவன் ஒரு அப்பாவி. வஞ்சகம் இல்லாமல் என்னோட நெருக்கமாக பழக, அவருக்கு சந்தேகம் வந்திட்டுது. அதால ஒரு நாள் என்னைக் கண்டபடி அடிச்சார். அவனையும் உதைச்சு வீட்டை விட்டு அனுப்பிப் போட்டார். அதோட அவர் வீட்டை விட்டு போயிட்டார்."

"அவர் எங்கை இருக்கிறார்?"

"அவரின்ர தாய் ரத்மலானையில் இருக்கிறா. கொளுத்த 'பென்சன்' கிடைக்குது. இவர் போய் அவவோடு இருக்கிறார்."

"வேலை செய்யுறாரோ?"

"இப்ப இல்லை. இந்த மாதிரி ஒரு குடிகாரனை ஆராவது நீட்டுக்கு வேலைக்கு வைத்திருப்பானோ? எத்தனை வேலை செய்திருப்பார். ஒரு இடத்திலையும் ஆறு மாசத்துக்கு மேல வேலை செய்யமாட்டார். தாய் இருக்குமட்டும் அவவின்ர 'பென்சன்' காசில குடிச்சு கூத்தாடுவார். அதுக்குப் பிறகு என்ன செய்வார் எண்டு பார்ப்பம்."

"அவரை மீண்டும் ஏத்துக் கொள்ற மனோபாவம் உங்களிட்டை இருக்குதா?"

அவள் உடனடியாகப் பதில் அளிக்கவில்லை. தலையை குனிந்தாள். "என்னெண்டாலும் அவர் என்ர புருஷன். அவரை நிரந்தரமாகப் பிரிஞ்சிருந்து வாழ முடியுமா எண்டு நான் அடிக்கடி நினைக்கிறனான். என்ர பிள்ளையளை நம்பி என்னால தனியாக வாழ ஏலாது. எண்டோ ஒரு நாள் அவர் திருந்தி என்னட்டை வரக்கிள்ளை நான் அவரோட வாழத்தான் வேணும்."

"அவர் வராட்டால்....?"

"அதை அந்த நேரம் பார்த்துக் கொள்வன். இப்பவும்

அவர் இடைக்கிடை வாறார். பிள்ளையளுக்கு ஏதாவது தின்பண்டம் கொண்டு வந்து குடுக்கிறார். ஆனால், என்னை நல்லாக ஏசி, இல்லாட்டி அடிச்சுப் போட்டுத் தான் போறார்."

"எவ்வளவு காலத்துக்கு இந்த மாதிரி வேதனையைத் தாங்கிக் கொண்டு இருக்கப் போறியள்?"

"தெரிஞ்சோ, தெரியாமலோ நான் அவருக்கு தலையை நீட்டிட்டன். எண்டபடியால வேதனையோ, சோதனையோ நான் எதிர்கொள்ளத்தான் வேணும். ரண்டு பேரும் சேர்ந்து சந்தோசமாக வாழலாம் எண்ட ஒரு நிலை ஏற்பட்டால், நான் அதற்குத் தயாராகத் தான் இருக்கிறன். ஆனால், எதற்கும் ஒரு எல்லை இருக்குது. எல்லை மீறப்படும் போது பிரியுறதைத் தவிர வேறு வழி இல்லை."

"அதாவது பிரியுறதுக்கும் நீங்கள் தயாரா?"

"தயார் எண்டு சொல்லமாட்டன். ஆனால், தயார்படுத்திக் கொள்வன். எத்தனை நாளைக்குத் தான் ஒருத்தன்ர கொடுமையளை தாங்கிக் கொண்டு வாழ்றது?"

"தனித்து வாழ நீங்கள் தயாரா?"

"அதுக்குத் தானே இப்ப பயிற்சி எடுக்கிறன்."

"என்ன பயிற்சி?"

"தனியாக இருக்கிறதுக்கான பயிற்சி."

"ஆனால், நீங்கள் தனியாக இல்லையே! துணைக்கு நான் இருக்கிறனே!"

இதைக் கேட்டு அவள் வாயடைத்துப் போனாள். சிறிது நேரம் மௌனத்தில் ஆழ்ந்தாள். "உண்மைதான்... உண்மைதான்....." அவள் தொடர்ந்தும் பேசவில்லை.

**மா**லையில் 'பி.எம்.எஸ் ஸ்ரோஸுக்குப்' போய் இரண்டொரு சாமான்களை வாங்கிக் கொண்டு வருகையில் ரண்மெனிக்கே எதிர்ப்பட்டாள்.

"கனகசபை ஐயா, நீங்கள் கெட்டிக்காரர் தான்" என்று மகிழ்ச்சியுடன் சொல்கிறாள்.

கனகசபை பூரிப்புடன் புன்னகைத்தான்.

"'ஓ.ஐ.சி.' எங்களுக்கு எதிராக வழக்கு போடமாட்டார். 'சார்ஜன்ட்' பெரேரா சொன்னான். எவ்வளவு கொடுக்க வேண்டும். ஐயாயிரமா? பத்தாயிரமா?"

அக்கணமே கனகசபையின் மனதினுள் கபட நோக்கமொன்று உருவகித்தது. அந்நோக்கம் சரியா, தவறா என்று அலசாமல், "ஐயாயிரம் ரூபா கொடுக்க வேண்டும்" என்று சொன்னான்.

"அவ்வளவு தானே? இரண்டு இரவுகளில் உழைக்கும் பணம். எப்பொழுது கொடுக்க வேண்டும்?"

"நாளைக்கு காலையில்."

"காலையில் வாங்க. தாறன்."

நிறைந்த மகிழ்ச்சியுடன் கனகசபை அங்கிருந்து அகன்றான். அதிர்ஷ்ட தேவதை தன்னை இவ்வளவு சீக்கிரமே அணைத்துவிடும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. அதே வேளை அவன் உள்மனம் அவனது செயலைத் தவறு என சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தது. இவ்வளவு இழிவான செயலைச் செய்யாதே என குத்திக் குதறியது.

ஆனால், அவன் இருந்த நிலையில் அவனுக்கு பணம் தேவைப்பட்டது. ஆனாலும், இவ்வாறான நேர்மையற்ற விதத்தில் பணம் சம்பாதிப்பதா? வாழ்க்கையில் நேர்மையைப் பெரிதும் பின்பற்றிவிட்டு, இப்பொழுது அதை மீறலாமா? மீறினால் என்ன? மனச்சாட்சியை கொன்றால் என்ன?

ஐயாயிரம் ரூபா கிடைத்தால் மனதில் ஒரு தெம்பு பிறக்கும். வலிமை ஏற்படும். அப்பணத்தில் மூவாயிரத்தை ஊருக்கு அனுப்பலாம். மங்களம் இரு மாதங்களுக்குச் சரிக்கட்டுவாள். வேலை கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை.

ஆனால், அது பாவப்பட்ட பணம். ஒரு விபச்சாரியைச் சட்டத்திற்கு முன் நிறுத்துவதில் இருந்து விடுவிப்பதற்காக நீட்டப்படும் இலஞ்சம். அது பாவப்பட்ட பணம். அதில் வயிற்றை நிரப்பிவிட்டு, நிம்மதியாக மூச்சுவிடுவதா? வாழ்நாள் முழுவதும் மனதைக் கொல்லும் ஓர் உண்மை அது. அதில் இருந்து தப்பிக்க

முடியாது.

இரவு முழுவதும் மனதினுள் போராட்டம்.

காலையில் எழுந்த பின்னரும் போராட்டம் தொடர்ந்தது.

ரண்மெனிக்கே நீட்டும் பணத்தைப் பெறுவதா, இல்லையா?

இறுதியாக ஒரு முடிவுக்கு வருகிறான். அவன் இருந்த நிலை, நிரபராதியாக இருந்த தன்னை குற்றவாளியாக்கிய சூழ்நிலை ஆகிய இரு காரணங்கள் அவன் மனதை திசை திருப்பிக் கொண்டிருந்தன. இந்த 'நியாயமற்ற' உலகத்திற்கு முன் இப்படி நேர்மையற்ற விதத்தில் வாழ்வது தவறாகாது என்ற எண்ணம் மனதை ஆக்கிரமிக்கின்றது. அது சரியென்ற வாதமே வெற்றி ஈட்டுகின்றது. இறுதியில், பணத்தை எடுப்பது எனத் தீர்மானிக்கின்றான்.

திடீரென அவன் மனதினுள் ஒரு பரபரப்பு. ஓர் உத்வேகம். பணத்தைக் கைப்பற்றி விட வேண்டும் என்ற நப்பாசை. ரண்மெனிக்கேயின் வீட்டுக்கு விரைகிறான்.

"வாங்கோ..... வாங்கோ" என்று வரவேற்றவள், நிறைய நேரமாகப் பேசினாள். ஆனால், பணத்தை நீட்டவில்லை.

கனகசபைக்கு பொறுக்க முடியவில்லை. கேட்டுவிடுகிறான்.

"பணமா? நேற்றிரவு 'சார்ஜன்ட்' பெரேரா வந்து பணத்தைக் கேட்டான். கொடுத்துவிட்டேன். பரவாயில்லைதானே?"

கனகசபை அதிர்ந்துவிடுகிறான்.

சொற்ப வினாடிகள் வரை அவனால் பேச முடியவில்லை.

## (13)

ஒரு வாரமாக காலையில் இருந்து மாலை வரை வேலை தேடி எத்தனை படியேறி இறங்கினான் கனகசபை? எல்லா இடத்திலும் ஒரே பதில் தான். "வேலை காலி இல்லை."

பலசரக்குக் கடைகள் இரண்டிலும் கால்களைப் பதித்தான்.

ஒரு முதலாளி வெட்டு ஒன்று, துண்டு இரண்டு போல் பதில் கூறினார். மற்ற முதலாளி கொஞ்சம் இங்கிதம் தெரிந்தவர். இவன் தோற்றத்தில் தெரிந்த ஓரளவு செழுமையை நோக்கியவர், "இப்ப வேலை காலியாக இல்லை. விலாசத்தை தாங்க. வேலை காலியாக வந்தால் அறிவிக்கிறோம்" என்றார்.

கனகசபைக்கு யோகமலரின் வீட்டு விலாசத்தைக் கொடுக்க விருப்பமில்லை. சேரிப்புறத்தில் வாழ்கிறான் என்றால் கௌரவக் குறைவு என்று நினைத்தான். தர்மலிங்கத்தின் விலாசத்தை எழுதி நீட்டினான்.

"பலசரக்கு கடையில வேலை செய்து பழக்கம் இருக்குதா?" என முதலாளி கேட்டார்.

"ஓமோம்."

முதலாளி வேறொன்றும் கேட்கவில்லை.

அந்த முதலாளியிடமிருந்து ஒரு கடிதமுமே வரவில்லை.

ஒரு வாரம் எவ்வித ஆரவாரமின்றிக் கழிந்தது.

தனக்கு வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை கனகசபையிடமிருந்து அறவே விலகிவிட்டது.

வேலையின்றி, யோகமலரின் நிழலில் வாழ்நாட்களை நீடிக்க அவன் விரும்பவில்லை. மீண்டும் ஊருக்குப் போய் தோட்டத்தைக் கவனிக்க வேண்டும் என்ற நினைப்புத் தான் எந்நேரமும் அவனுள் கிளம்பிக் கொண்டிருந்தது.

தர்மலிங்கத்தைச் சந்தித்து தனது எண்ணத்தைக் கொட்டினான்.

"ஊருக்குப் போய் என்ன செய்யப் போறாய்? இஞ்சை இருந்தால் ஏதாவது வேலை எடுக்கலாம். இஞ்சை வேலை எடுக்கிறது கொஞ்சம் கஷ்ரம் எண்டாலும் ஒரு மாதிரி எடுத்துப் போடலாம். ஊரில வேலை எடுக்க ஏலுமோ?"

"வேலை எடுக்க ஏலாது தான். ஆனால், தோட்டம் செய்யலாம்தானே?"

"உண்மைதான். ஊரில மனுசி, பிள்ளையளோட சேர்ந்திருந்து, தோட்டம் செய்யுறதில இருக்கிற சந்தோஷம் இஞ்சை எவ்வளவு தான் உழைச்சாலும் கிடைக்காது. ஆனால், இப்ப இருக்கிற நிலைமையில தோட்டம் செய்யக் கூடியதாக இருக்குமோ? நிறைய பிரச்சனை. இன்னும் ஒரு மாசம் இஞ்சை இருந்து ஒரு வேலையை எடுக்கப் பார். அது சரிவராட்டால் ஊருக்குப் போ. மெய்யே, இப்ப தங்கியிருக்கிற வீட்டில, இன்னும் ஒரு மாசத்துக்கு இருக்கலாமோ?"

"அதில ஒரு பிரச்சனையும் இல்லை எண்டு நினைக்கிறன். எண்டாலும் யோகமலரிட்டை ஒரு சொல்லு கேக்க வேணும்."

"அவள் உன்னோட எப்படி பழகுகிறாள்?"

"வஞ்சகம் இல்லாமல் பழகுறாள். என்னிலை நிறைய நம்பிக்கையும், அன்பும் வைச்சிருக்கிறாள். அது நான் செய்த பாக்கியம்."

"அப்ப உனக்கு கொழும்பிலை ஒரு சின்ன வீடு இருக்குது எண்டு சொல்லுறாய் போல....."

கனகசபைக்கு கோபம் வந்துவிட்டது. தர்மலிங்கத்தை முறைத்தான்.

"என்ன கோவம் வந்திட்டுதுதோ? நான் உண்மையைத் தானே சொன்னனான்?"

"அண்ணே........" கனகசபை மெல்ல உறுமினான். "தேவையில்லாத கதை கதைக்காதேங்கோ. அவள் என்னை ஒரு சகோதரன் மாதிரித் தான் நடத்துறாள்."

"ஓ... ஓ..... நீ சொல்ல நான் நம்ப வேணும் எண்டு சொல்லுறியோ? நீ அவளுக்கு ஆர்? முன்ன பின்ன தெரியுமோ? ஏன் உனக்கு அடைக்கலம் தந்திருக்கிறாள்? எல்லாம் ஒரு உள்நோக்கத்தோட தான். புருசன் இல்லாத இடத்தில நீ. அவ்வளவு தான்."

"அண்ணே, இப்படி எல்லாம் கதையாதேங்கோ. அவளிட்டை நீங்கள் நினைக்கிற மாதிரி ஒரு கபட நோக்கமும் இல்லை."

"நான் உதை நம்பமாட்டன். இப்படி எத்தனை பெண்டுகளை நான் கண்டிருக்கிறன். அவகள் மனதில ஒரு நோக்கத்தை வைச்சுக்

கொண்டு தான் ஆம்பிளையளோட பழகுறவையள். உனக்கு அவள் ஏன் உதவி செய்ய வேணும்?"

"ஒரு மனிதாபிமானத்துக்காக."

"அதுக்காக 'றோட்'டிலை கண்ட ஒரு அந்நியனை எந்த துணிச்சலோட வீட்டுக்கு கூட்டிச் சென்று வைச்சிருக்கிறாள்?"

"ஒரு குருட்டு நம்பிக்கையில."

"குருட்டு நம்பிக்கை? அதுக்காக கலியாணம் கட்டி இருக்கிற ஒரு பொம்பிளை இந்த மாதிரி 'ரிஸ்க்' எடுத்து, உன்னை மாதிரி வளர்ந்த ஒரு அந்நியனை வீட்டுக்கு கூட்டிக்கொண்டு வரமாட்டாள். அவள் இப்ப புருசனை பிரிஞ்சு வாழ்றாள். நீ இருக்கிறதால அவளுக்கும், புருசனுக்கும் இடையில இருக்கிற கொஞ்ச, நஞ்ச உறவு கூட இன்னும் அகலத்தான் போகுது. அப்படி ஒரு 'ரிஸ்க்'கை எடுக்கிறதுக்கு அவள் தயார் எண்டால், அவளின்ர நோக்கத்தில ஒரு வஞ்சகம் இருக்குது."

கனகசபை ஒன்றுமே கூறவில்லை. கண்மணிகளை உருட்டியபடி நின்றிருந்தான்.

"எண்டபடியால, நீ ஊருக்கு திரும்பிப் போகத் தேவையில்லை எண்டு நான் நினைக்கிறன். இப்ப உன்ர காட்டில மழை பெய்யுது."

தர்மலிங்கத்தின் அலுவலகத்தில் இருந்து வீடு திரும்பும் வரை கனகசபையின் மனம் ஒரு நிலையில் இல்லை. தர்மலிங்கம் கூறியவை தான் அவனது செவிப்பறையில் மோதிக்கொண்டிருந்தன. அவனது கருத்துக்களை ஏற்றுக்கொள்வதா?

யோகமலரின் சிந்தனையில் ஏதாவது உள்ளார்ந்த நோக்கம் மறைந்திருக்கிறதா? அவனை எந்த நோக்கத்தை அடிப்படையாக வைத்து வீட்டுக்கு கூட்டிக் கொண்டு வந்து பராமரிக்கிறாள்? தனக்கு ஒரு பாதுகாவல் தேவை என்று உணர்ந்து அவனுக்கு அடைக்கலம் வழங்கியிருக்கிறாளா? அல்லது எதேச்சையான சந்திப்பின் போது அவன் நிலை உணர்ந்து, மனிதாபிமான அடிப்படையில் உதவி அளிக்க முன் வந்தாளா? அல்லது தர்மலிங்கம் கூறுவது போல பாதுகாவல்

என்ற போர்வையில் கணவன் என்ற ஸ்தானத்தில் இரட்டை நோக்கத்தை நிறைவேற்றுகிறாளா?

கனகசபையினால் ஒரு தீர்க்கமான முடிவுக்கும் வரமுடியவில்லை.

தனது மனதில் அடங்கியிருக்கும் எண்ணத்தை அவன் கிளறினான்.

அவள் பற்றி அவன் மனதில் படிந்திருந்த நோக்கம் என்ன? அதில் சலனத்திற்கு இடமுண்டா? எவ்வித நோக்கமும் இன்றி அவளுடன் அவன் பழகுகிறானா? அல்லது அதில் ஏதும் தீயநோக்கம் தொற்றியுள்ளதா?

அவளை அவன் 'நைட்டி'யில் கண்டிருக்கிறான். முழு மேனியையும் துவாயினால் போர்த்திய நிலையில் கண்டிருக்கிறான். சில வேளைகளில் எதிர்பாராதவிதத்தில் இருவரும் முட்டிமோதியுள்ளனர். அத்தருணங்களில் அவன் உள்ளம் தழும்பி இருக்கிறது. அவன் உணர்ச்சி நாளங்கள் கிளர்ந்தெழுந்துள்ளன. அவன் இதயத்தின் துடிப்பு அதிகரித்துள்ளது. கைவிரல்கள் பரபரப்படைந்துள்ளன.

அவளைக் காதல் உணர்வுடன், தாபத்துடன் நோக்கி இருக்கிறான். இரவு வேளைகளில் யோகமலரின் முழு உருவத்தையும் மனதுக்கு கொண்டு வந்து அவளைத் தழுவுவது போல, அவளுடன் உறவு கொள்வது போல கற்பனை பண்ணியிருக்கிறான். மங்களத்தின் நினைவு மனதை எட்டிப் பார்க்க முயலும் போதெல்லாம், அதைத் தவிர்த்து, யோகமலரை மனதில் இருத்தி, அதில் சுகானுபவத்தை பெற்றிருக்கிறான்.

ஆனால், அவளுடன் அவன் முறைகேடாக நடக்கவில்லை. இரட்டை அர்த்தத்துடன் பேசவில்லை. கண்ணியத்துடன், கௌரவத்துடன், மரியாதையுடன் அவளுடன் பேசினான், பழகினான். தனக்குச் சாதகமான சூழ்நிலையை அவன் உருவாக்கவில்லை. அவளுடன் அந்நியோன்யமாகப் பழகினாலும், அவளுக்கும், தனக்கும் இடையில் ஒரு நெருக்கத்தை உருவாக்கவில்லை. அவள் கிட்ட வந்து பேசினாலும் அவன் எட்டியே நின்றான்.

ஆனாலும், அவள் மீது அவனுக்கு நிறைந்த அன்பிருந்தது.

அதில் தூய்மை இருந்தது. உள்நோக்கமும் இருந்தது. அந்த அன்பை வெளிப்படுத்தி, அதன் மூலம் அவளிடமிருந்து பிரதியுபகாரமாக அவளின் அன்பைப் பெற்றிருக்கிறான். அவள் மனதைக் கவரும் விதத்தில் கருமமாற்றி இருக்கிறான். அவளுக்கு தொட்டாட்டு வேலைகளைச் செய்து கொடுத்திருக்கிறான்.

அவள் இரவு படுக்கும் போது ஆரம்பத்தில் தன் அறை கதவைப் பூட்டினாள். ஆனால், இப்போது சாத்துவதே இல்லை. அது எந்நேரமும் திறந்தே இருக்கும். ஆடைகளை மாற்றும் போது கூட அவள் கதவைச் சாத்தமாட்டாள்.

அவள் ஆடை மாற்றும் போது திரைச்சீலை காற்றுக்கு விலகி இருக்கின்றது. அந்நேரங்களில் 'ஹோலில்' அமர்ந்திருக்கும் கனகசபை அவளை அரைகுறை நிலையில் கண்டிருக்கிறான். ஆனாலும், கனகசபை நிலை தளும்பவில்லை. தனது மனதுக்கு கடிவாளம் போட்டு, தன் உள்ளத்தில் எழும் தீய எண்ணங்களைக் களைந்தான். மனதை ஒரு நிலைப்படுத்தி, உத்தமன் என்ற அடைமொழிக்குள் தன்னை இருத்தினான். சந்தர்ப்பங்களைத் தேடிச் செல்வதைத் தவிர்த்தான்.

யோகமலருக்கு ஒரு நிழலாக, அவள் வாழ்க்கைக்கு துணையாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலேயே அவன் விளங்கினான். ஆனாலும், தர்மலிங்கம் கூறுவது போல அவனுக்கும் அவளுக்கும் இடையில் ஏதாவது நெருங்கிய உறவு இருக்கின்றதா? அவள் ஏன் அவனுக்கு வலிய வந்து அடைக்கலம் கொடுத்தாள்? ஏன் உதவி புரிகிறாள்? கற்பனை பண்ண முடியாத, நினைத்துப் பார்க்க முடியாத வகையில் அவனுக்கு அவள் ஏன் உதவியளிக்கிறாள்?

அவள் நோக்கம் என்ன?

அவள் அவனுக்கு ஒரு புதிர் போலத் தென்பட்டாள். அந்தப் புதிரை அவிழ்க்க வேண்டும்.

கனகசபை வீட்டை அடைகின்றான்.

கதவைத் திறக்க யோகமலரின் கணவன் ராமகிருஷ்ணன் நாற்காலியில் அமர்ந்திருக்கிறான். கனகசபை துணுக்குற்று விடுகின்றான். ராமகிருஷ்ணனின் கண்கள் சிவந்த நிலையில் விளங்குகின்றன.

கனகசபைக்கு சில வினாடிகள் வரை என்ன செய்வது என்றே புரியவில்லை. ராமகிருஷ்ணனை பேந்தப் பேந்த பார்த்தவண்ணம் நின்றான். வீட்டினுள்ளே போவதா, விடுவதா என யோசித்தான்.

கனகசபையைக் கண்ட ராமகிருஷ்ணன் தலையைக் குனிந்தான்.

யோகமலரின் இரு பிள்ளைகளும் பின்புறமாக நிற்பது கனகசபைக்குத் தெரிகிறது. மூத்தவள் கனகசபையைக் கண்டுவிட்டாள். உள்ளே வருமாறு கையினால் சைகை காட்டினாள்.

கனகசபை தைரியத்தை வரவழைத்தான். வீட்டினுள் பிரவேசித்தான். நேரே குசினிக்குள் புகுந்தான். யோகமலரின் இரு பிள்ளைகளும் அங்கு வந்து அவனுக்கு இருபுறமும் நின்றார்கள்.

நேரம் நகர்ந்தது.

மாலையாகியது.

அது வரை கனகசபை குசினியை விட்டு அகலவில்லை. பிள்ளைகள் 'ஹோலுக்குச்' சென்று 'ரி.வி.' பார்த்தார்கள். ராமகிருஷ்ணன் இவர்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

யோகமலர் படியேறி வந்தாள்.

"உம்மைத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறன்" என்று ராமகிருஷ்ணன் சொன்னான்.

"இண்டைக்கும் குடிச்சிட்டு வந்து கரைச்சல் குடுக்கப் போறீங்களா?"

"இல்லை. கரைச்சல் குடுக்க வரயில்ல. எனக்கு கொஞ்சம் காசு வேணும். அதுக்குத் தான் வந்தனான்."

"காசு? என்னட்டை இல்லை. காசு இருந்தாலும் அதை உங்கட குடிக்காக தரமாட்டன்."

"காசு குடிக்கு இல்லை."

"நான் நம்பமாட்டன். நீங்கள் ஆடுற நாடகத்தை நான் எத்தனையோ வருசங்கள் கண்டுட்டன்."

"யோகம், 'பிளீஸ்' தாரும்."

"முடியாது. முடியாது."

பதைபதைக்கும் நெஞ்சுடன் அவர்கள் பேசுவதை கனகசபை செவிமடுத்துக்கொண்டிருந்தான்.

" 'பிளீஸ்'......" அவன் இரக்கிறான்.

"முடியாது" என்கிறாள் அவள்.

அவன் எழுந்து அவளை நோக்கிச் சென்றான். அவள் எதிர்பார்க்க முன் அவள் கன்னத்தில் ஓங்கி ஒன்றுவிட்டான். அவள் 'அய்யோ' என்று அலறினாள்.

யாரோ இதயத்தை அறுப்பது போன்ற உணர்வை கனகசபை பெற்றான். அவனுள் கோபம் முளைத்தது. ஆத்திரம் கைகளைப் பரபரக்க வைக்கிறது. ஆனால், தன் நிலையை அவன் மீற முற்படவில்லை. கோபத்தை வெகுவாக அடக்கினான்.

ராமகிருஷ்ணன் மீண்டும் அவள் கன்னத்தில் அறைந்தான்.

அவள் குழறினாள்.

அதன் பின் அவன் மிருகம் போல செயலாற்றினான். அவளை நன்றாகக் கைகளாலும், கால்களாலும் தாக்கினான். அவள் வலியினால் கதறினாள்.

கனகசபையினால் கோபத்தை அடக்க முடியவில்லை. குசினியில் இருந்து பாய்ந்து அவர்களை நோக்கி விரைந்தான்.

"டேய்" என்று கனகசபை கர்ஜிக்க ராமகிருஷ்ணன் அவனை உணர்ச்சியற்றவனாக நோக்கினான்.

"அவளை தொட்டியெண்டால்......"

கனகசபையின் முகத்தில் ஆவேசம் இறுகியிருந்தது.

யோகமலரின் இரு பிள்ளைகளும் ஓடிவந்து தாயை அணைத்துக் கொண்டன.

யோகமலர் விக்கிவிக்கி அழுகிறாள்.

ராமகிருஷ்ணன் வீட்டைவிட்டு வெளியேறுகிறான். கனகசபையை ஏறெடுத்தும் நோக்கவில்லை.

யோகமலர் தன் சுயநினைவை இழந்து கீழே சரிகிறாள்.

அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் கனகசபை முழித்தான்.

யோகமலரின் பிள்ளைகள் தாயின் முன்பாக குந்தியிருந்து தமக்குள் சைகை மொழியில் பேசின.

கனகசபை ஒரு முடிவுக்கு வந்தான். கீழே குனிந்தான். அவளை தூக்குவது சரியா, தவறா என்று அவன் எண்ணவில்லை.

யோகமலரை அள்ளி அணைத்து அப்படியே தூக்கிச் சென்று படுக்கையில் கிடத்தினான். பின் குசினிக்குச் சென்று பாத்திரமொன்றில் நீரை எடுத்து வந்து அவள் முகத்தில் தெளித்தான். அவள் திடுக்கிட்டவளாகக் கண்களைத் திறந்தாள். அவள் நெற்றியில் வியர்வைத் துளிகள் பரம்பின. அவன் மட்டை ஒன்றை எடுத்து விசிறினான்.

அவள் கண்கள் கலங்கியிருந்தன.

கனகசபை ஒரு தீர்க்கமான முடிவுக்கு வருகின்றான்.

# (14)

பதை, பதைக்கும் நெஞ்சுடன் கனகசபை மாடிப்படியேறினான். அவனுக்கு உள்ளூரப் பயமாகவும் இருந்தது. நிறைய துணிச்சலை வரவழைத்து, அவன் முன்னேறுகிறான்.

"கனகு, எனக்கு என்ர மனிசனைப் பற்றித் தெரியும். நீங்கள் எங்களுக்குள்ளை உறவை ஏற்படுத்துறதுக்கு எடுக்கிற முயற்சி ஒருக்காலும் பயனைத் தராது. ஏதோ நீங்கள் எங்களை ஒண்டு சேர்க்க விரும்புறியள். முயற்சி செய்து பாருங்க" என்று சற்று முன்னர் யோகமலர் கூறியிருந்தாள்.

"யோகம், உண்மையைச் சொன்னால் என்ன, நேத்தைக்கு உங்களை அவர் அடிஅடி எண்டு அடிக்கக்கிள்ளை

ஆரோ என்ர நெஞ்சில உதைக்கிற மாதிரி இருந்தது. என்னெண்டு தான் அடி, உதையை வாங்கிக் கொண்டு இருந்தியளோ எண்டு தெரிய இல்லை" என கனகசபை உருக்கமாகச் சொன்னான்.

"எல்லாம் பழகிட்டுது."

"என்ன பழகிட்டுது எண்டு சொல்லி சும்மா அடிவாங்கிறியள்? இதுக்கு ஒரு முடிவு எடுக்க வேணும்."

"என்ன மாதிரி?"

"நான் போய் சந்திச்சு ஒரு சமரசத்தைக் கொண்டு வரப்போறன். நீங்கள் இப்படி அடி வாங்கிறதை என்னால தாங்கிக் கொள்ள ஏலாது."

அவள் வரட்சியாகப் புன்னகைத்தாள். "என்னிலை நீங்கள் வைச்சிருக்கிற அன்புக்கு 'தாங்ஸ்'. ஆனால், நீங்கள் பட்ட மரத்திலை பால் எடுக்கப் பார்க்கிறீங்களா? நீங்கள் அவரைச் சந்திச்சு ஒண்டுமே ஆகப் போறதில்லை. அவர் இதயமே இல்லாத ஒரு மனிசன். ஏதோ முயற்சி செய்து பாருங்க" என்றவள் ராமகிருஷ்ணனின் விலாசத்தை ஒரு துண்டில் குறித்துக் கொடுத்தாள்.

ராமகிருஷ்ணனின் வீட்டை கனகசபை அடைந்தான்.

கதவைத் தட்ட ராமகிருஷ்ணன் வந்தான். அவன் கண்கள் சிவந்திருந்தன.

கனகசபையைக் கண்டவன் ஆச்சரியம் மீறிய நிலையில் நின்றான். உள்ளே வழி விடவில்லை.

"உங்களோடை கதைக்க வந்தனான்" என்று கனகசபை ஆரம்பிக்க, "என்ர குடும்ப விசயத்தைப் பற்றி நான் பிறத்தியாரோடை கதைக்க விரும்ப இல்லை" என்று எடுத்த எடுப்பில் ராமகிருஷ்ணன் சொன்னான்.

கனகசபைக்கு அடுத்து என்ன கூறுவது என்று தெரிய இல்லை. முழித்தவண்ணம் நின்றான்.

"நீங்கள் போயிட்டு வாங்க" என்றான் ராமகிருஷ்ணன்.

"இல்லை, நான் கொஞ்சம் கதைக்க வேணும்" என்று

கனகசபை துணிவை வரவழைத்துக் கூறினான்.

"நீங்கள் யோகமலருக்கு ஆர்?"

"ஒரு அண்ணன் மாதிரி."

ராமகிருஷ்ணன் விஷமத்துடன் புன்னகைத்தான். "அண்ணன்? 'ஐஸே', நீர் அவளுக்கு ஆர் எண்டு எனக்குத் தெரியும். நீர் மரியாதையோடை இருக்க வேணுமெண்டால், இப்பவே போயிடும்."

"'மிஸ்டர்' ராமகிருஷ்ணன், என்னை கொஞ்சம் கதைக்க விடுங்களேன்."

"சரி விடுறன். என்னத்தைக் கதைக்கப் போறீர்?"

"யோகமலரோட நீங்கள் சேர்ந்து வாழ்ந்தால் என்ன?"

"எனக்கு விருப்பம். ஆனால், அவள் தானே என்னைத் துரத்தினாள்?"

"ஏன் துரத்தினா?"

"அதை நீர் அவளிட்டை கேளும்."

"நீங்கள் குடிச்சிட்டு வந்து அவவை அடிக்கிறீங்களாம். அதை நிற்பாட்டினால்...."

"ஏன் அடிக்கிறன்?"

"அதையும் நீங்களே சொல்லுங்களேன்."

"அவளுக்கு வாய்க்கொழுப்பு. அந்தப் கொழுப்பை கரைக்க வேணும் எண்டு தான் அடிக்கிறனான்."

ராமகிருஷ்ணன் இப்படிக் கூற, கனகசபையினால், மேலும் என்ன பேசுவதென்றே தெரியஇல்லை.

"உமக்கு முடியுமெண்டால் அவவின்ர வாய்க்கொழுப்பை அடக்கும். அதுக்குப் பிறகு நான் அவளை அடிக்கிறதை விடுறன்" என்றான் ராமகிருஷ்ணன்.

கனகசபை அங்கிருந்து வெளியேறுகிறான். யோகமலர் பற்றி ராமகிருஷ்ணன் கூறிய தகவல் அவனுக்குப் புதுமையாக இருந்தது. அவள் வாய்க்காரியா? என்ன சாந்தமாய், வெகு

பக்குவமாகப் பேசுகிறாள்? கோபமே அடையமாட்டாள். அப்படிப்பட்டவளை இவன் குற்றவாளிக் கூண்டில் ஏற்றுகிறானே!

யோகமலரை அடைய, "பட்ட மரத்திலை பால் எடுத்தீங்களா?" என நகைச்சுவை உணர்வுடன் அவள் கேட்டாள்.

கனகசபை சிரித்தான். "நல்ல ஒரு மனிசனைத்தான் கட்டி இருக்கிறீர்!"

"என்ன சொன்னார்?"

"உமக்கு வாய்க்கொழுப்பு இருக்குதாம். அதைக் கரைக்க வேணுமாம்."

"இதைத் தான் கலியாணம் முடிச்ச நாளிலை இருந்து சொல்லுறார். வாய்க்கொழுப்பு எண்டால் எனக்கு அர்த்தமே புரிய இல்லை. எனக்கு வாய்க்கொழுப்பு இருக்குதா? நீங்களே சொல்லுங்க பார்ப்பம்."

"எனக்கெண்டால் அப்படித் தெரிய இல்லை."

"உண்மையிலை அவருக்கு என்னிலை ஒரு சந்தேகம் இருக்குது. நான் ஆம்பிளையோடை அன்னியோன்னியமாகக் கதைக்கிறதை வைச்சு என்னை தேவையில்லாமல் வெருட்டுவார். அந்த நேரத்திலை என்ர பக்கத்து நியாயத்தை நான் கதைக்கிறனான். அதை வைச்சுத் தான் எனக்கு வாய்க்கொழுப்பு எண்டு சொல்றார்."

யோகமலரை கனகசபை ஆழமாக நோக்கினான்.

"நான் கேட்கிறதுக்கெல்லாம் உண்மையாக மறுமொழி சொல்லுவீங்களா?"

"சொல்லுவன்."

"உங்கட மனிசன் உங்களிலை சந்தேகம் கொள்றார் எண்டு சொல்றீங்கள். அப்படி எண்டால் நீங்கள் ஆம்பிளையளோடை அன்னியோன்னியமாக கதைக்கிறதை விடலாமே!"

"என்ர ஒன்றைவிட்ட தம்பியோடை, சித்தப்பா முறையானவரோடை அன்னியோன்னியமாக கதைக்க வேண்டாம் எண்டு சொல்றீங்களா?"

கனகசபைக்கு வாயடைத்தது. சில வினாடிகள் வரை அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"அப்படி ஒரு சந்தேகப் பேர்வழியா?"

"ஓமோம். இப்படியான ஒருவரை திருத்துறதெண்டால் நான் என்ர ஒன்றைவிட்ட தம்பியோடை, இல்லாட்டி சித்தப்பா முறையானவரோடை அன்னியோன்யமாக கதைக்காமல் விட வேணும். நான் அதை விரும்ப இல்லை. அவர் தன்ர மனிசியிலை நம்பிக்கை வைக்க வேணும். எந்த ஒரு அந்நியனோட இருந்தாலும், என்ர மனிசி உத்தமி என்ற எண்ணம் அவருக்கு வரவேணும். அப்பத் தான் அவர் என்னை நம்புறார் எண்டு எனக்குத் தெரியவரும். அது மட்டும் நான் இதிலை அவருக்கு விட்டுக் குடுக்கமாட்டன்...... கனகு, இப்படியான ஒருவர் திருந்துவார் எண்டு நினைக்கிறீங்களா?"

"கொஞ்சம் கஷ்ரம் தான்."

"நானும் அவரை திருத்துறதுக்கு எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தன். ஆனால், முடிய இல்லை. அதால தான் நான் இப்ப தைரியத்தோடை சில முடிவுகளை எடுத்து, தன்னந்தனியனாக இந்த ஊமைப் பிள்ளையளோடை இருக்கிறன். ஆனாலும், தனியாக இருக்கிறதால சில பிரச்சனைகளுக்கு முகம் குடுக்க வேண்டியிருக்குது. அதால தான் நான் உங்களை இஞ்சை கூட்டிக் கொண்டு வந்தனான். எந்தவொரு பொம்பளையும் நினைச்சுப் பார்க்காத ஒண்டை நான் செயல்படுத்தி இருக்கிறன். ஏதோ ஒரு நம்பிக்கையிலை, நீங்கள் ஆர், எவர் எண்ட விபரத்தை அறியாமல் இஞ்சை கூட்டிக் கொண்டு வந்திருக்கிறன். ஏன் தெரியுமா?"

"தெரியாது."

"வாழ்ந்து காட்டத்தான்."

"ஆருக்கு?"

"என்ர மனிசனுக்கு."

"அதில என்ன பிரயோசனம்?"

"சவால் எண்டு வைச்சுக் கொள்ளுங்களேன்."

"ஆனாலும் அவரோடை வாழ்றது போல வருமா?"

"வாழ முடியாது எண்டு ஒரு நிலை வந்தால் வேறை வழியைத் தானே பார்க்க வேணும்?"

"அப்படி எண்டால் அவரோடை வாழ்றது இல்லை எண்ட நிலைக்கு வந்திட்டீங்களா?"

"இப்ப அந்த நிலைக்குத் தான் வந்திருக்கிறன். இப்படி ஒரு சந்தேகப் பேர்வழி திருந்துவார் எண்டு நீங்கள் நினைக்கிறீங்களா? ஒரு போதுமே திருந்தமாட்டார். எண்டபடியாலை எனக்கெண்டு ஒரு வாழ்க்கையை நானே அமைத்துக் கொள்ள வேணும் எண்டு ஒரு முடிவை எடுத்திருக்கிறன்."

இரவு முழுவதும், பாயில் கிடந்தபடி யோகமலர் கூறியவை தான் கனகசபையின் மனதைச் சுற்றிச் சுற்றி வந்தன. அவளின் துணிச்சல் மிக்க முடிவையிட்டு அதிசயித்தான். இந்தளவு துணிச்சலை எதை அடிப்படையாக வைத்து அவள் கட்டி எழுப்பி இருக்கிறாள் என்று மூளையைப் போட்டு உருட்டினான். ஆனால், உருப்படியான முடிவு எதுவுமே மனதில் சிக்கவில்லை.

கனகசபைக்கு தூக்கம் வரவில்லை. யோகமலரின் எண்ணத்தைத் தள்ளியபடி மங்களத்தின், பிள்ளைகளின் யோசனை மனதில் தோன்றியது. அவர்கள் நிலை என்ன? இராணுவத்தின் கெடுபிடி ஒரு புறம். பணம் அற்ற நிலை இன்னொரு புறம். ஆண் துணை இல்லாத நிலை பிறிதொரு புறம். மங்களம் எவ்வாறு சமாளிக்கிறாளோ தெரியவில்லை.

"உங்களுக்கு வேலை கிடைக்காட்டாலும் இஞ்சை வாங்க. நாங்கள் ஒரு மாதிரி சமாளிப்பம்" என்று அவள் கூறிய வார்த்தைகள் அவன் காதினுள் ரீங்காரமிட்டன.

அவனை அவள் காதலுடன், அன்புடன், பாசத்துடன், தாபத்துடன் நோக்கும் போது அவள் முகத்தில் தெரியும் மாற்றங்கள் அவன் மனத் திரையில் மாறி, மாறி படிகின்றன.

தன் நெஞ்சில் அவள் கன்னங்களைப் பதிப்பது போல, நெற்றியில் இதழ்களைப் பதிப்பது போல, முழு அவயமும் தன் உடம்புடன் சேர்ந்திருப்பது போல பிரமை உணர்வுகள் மனதில் நர்த்தனம் புரிகின்றன.

அவளை ஆலிங்கனம் செய்வது போல, அவள் முழு உடலையும் அனுபவிப்பது போல ஒரு வேட்கை அவனுள்

புகுந்துவிடுகின்றது. அவளை அடைய வேண்டும் என்ற வெறி அவனுள் பெருக்கெடுத்தது.

பல உணர்வலைகள் அவன் மனதைச் சித்திரவதை செய்தன. அவன் மனம் புழுங்கியது; குமைந்தது; இரத்த ஓட்டத்தில் ஒரு வேகம்.

படிப்படியாக அவன் சகஜ நிலைக்கு திரும்புகிறான். சிந்திக்கும் சக்தி மேம்படுகிறது.

கொழும்பில் அர்த்தமற்ற வாழ்வு வாழ்கிறோமே என்ற எண்ணம் அவன் மனதை எட்டிப் பிடித்தது. அது இறுகவே, அவனுள் புது எண்ணமொன்று தோன்றியது.

தொழிலற்ற நிலையில் - யாரோ ஒருத்திக்கு துணையாக இருக்கிறதைவிட, சொந்த மனைவிக்கு துணையாக இருந்தால் என்ன? ஊரில் தொழிலைப் பெற முடியாவிட்டாலும், கமத்தை செய்து, அதில் வரும் அற்ப சொற்ப வருமானத்தைக் கொண்டு மனைவி, பிள்ளைகளுக்கு ஒரு துணையாக வாழ்ந்தால் என்ன?

இனியும் வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை அவனுக்கு இருக்கவில்லை. ஆதலினால் வேலை என்ற ஒரு காரணத்திற்காக அவன் கொழும்பில் தொடர்ந்தும் இருப்பது அர்த்தமற்றது. வேலை வெட்டியின்றி எத்தனை நாட்களுக்குத் தான் அவன் அங்கிருப்பது? யோகமலர் அவனை எத்தனை நாட்களுக்குப் பராமரிப்பாள்? காலப் போக்கில் அவள் மனம் மாறினால், அல்லது அவள் கணவன் மனம் மாறி அவளிடம் வந்தால் கனகசபை தேவையற்றவனாகக் கருதப்படுவான். அவன் வீட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலைக்குள்ளாவான். அப்படியொரு நிலையை எதிர் நோக்காமல், மானஸ்தன் என்ற நிலையில் அங்கிருந்து வெளியேறுவது தான் புத்திசாலித்தனமானது.

கனகசபை ஒரு முடிவுக்கு வந்தான்.

ஊருக்கு மீண்டும் போவதே அந்த முடிவு. இது பற்றி எவரிடமும் அபிப்பிராயம் கேட்டு, முடிவை மாற்றுவதில்லை என்ற தீர்மானத்திற்கும் வந்தான்.

# (15)

காலையில் எழுந்ததில் இருந்து கனகசபையின் மனதில் சுறுசுறுப்பு நிலவியது. ஊருக்குத் திரும்பிப் போவதென முடிவு எடுத்துவிட்டான். இனி அதற்கேற்ற ஒழுங்குகளைச் செய்ய வேண்டும். முதலில் பயணத்திற்கான பணத்தைச் சேர்க்க வேண்டும். ஒரு தொழில் அற்ற நிலையில் பணத்தை எப்படிச் சேர்ப்பான்? யாரிடமாவது கடனுக்கு கைநீட்ட வேண்டும். யார் அவனுக்கு பணத்தை நீட்டுவார்கள்?

உறவுக்காரர் சிலர் அவன் மனக்கண்ணில் தோன்றினார்கள். ஆனால், அவர்களை நாட அவன் விரும்பவில்லை. அவர்கள் நிறையவே அனாவசிய கேள்விகளைக் கேட்டு தன் மனதைப் புண்படுத்துவார்கள் என்று நினைத்தான். தர்மலிங்கத்தை நாடலாம். ஆனால், அவன் 'எங்கடா என்னட்டை காசு' என்று கேட்டு கையை விரிப்பான்.

யோகமலர்? அவளுடன் அவனுக்கு சில நாள் பழக்கம் தான் இருந்தது. அவனுக்கு அடைக்கலம் கொடுத்திருக்கிறாள். எதை ஆதாரமாக வைத்து அவளிடம் கடன் கேட்பது? தன்னில் ஏதோ ஒரு நம்பிக்கையை வைத்துத்தானே அவனுக்கு அடைக்கலம் வழங்கினாள்? அதே நம்பிக்கையை வைத்து கடன் கேட்கலாம். கனகசபை ஒரு முடிவுக்கு வந்தான்.

யோகமலரை அடைந்தான். தன் மனதில் அமிழ்ந்திருப்பதை வார்த்தைகளாக வெளிப்படுத்தினான்.

"ஊருக்குப் போகப் போறியளா? ஏன்?" என சற்று திகைத்தவளாகக் கேட்கிறாள்.

"இனியும் வேலை கிடைக்கும் எண்ட நம்பிக்கை போயிட்டுது. ஊருக்குப் போனால் கமத்தையாவது செய்யலாம் எண்டு நினைக்கிறன்."

"வேலைதானே? நான் எடுத்துத் தாறன். கொஞ்ச நாளைக்கு பொறுத்தால் ஒரு வேலையை எடுக்கலாம்."

"அந்த நம்பிக்கை உங்களுக்கு இருக்குதா?"

"ஓமோம். என்ர 'பொஸ்'ஸிட்டை சொல்லி வைச்சிருக்கிறன். இன்னும் ஒண்டிரண்டு பேரிட்டையும் சொல்லி இருக்கிறன். கிடைக்கும் எண்டு ஒரு நம்பிக்கை என்னட்டை இருக்குது."

"எனக்கெண்டால நம்பிக்கை இல்லை."

"கொஞ்ச நாளைக்கு...... ஒரு மாசம்....... பொறுக்க ஏலாதா? உங்கட 'வைஃபுக்கு' பணம் அனுப்ப வேணும் எண்டு நினைக்கிறீங்களா?"

"அனுப்பத் தான் வேணும். ஆனால், இப்ப ஏலாது."

"காசு வேணும் எண்டால் தரலாம். கடனாகத் தான். தரட்டுமா?"

ஒரு 'சினிமா'த்தனமான காட்சி அங்கு மேடையேறுவதை கனகசபை உணர்கிறான்.

கோட்டை புகையிரத நிலையத்தின் முன்பாக வலிய வந்து அவனுடன் பேசுகிறாள். பின்னர் அவன் நிலையை அறிகிறாள். எந்த ஒரு பெண்ணுமே நினைக்காத ஒன்றை அவள் நிறைவேற்றுகிறாள். ஏதோ ஒரு குருட்டு நம்பிக்கையில், அவன் மீது பச்சாதாபம் கொண்டு அவனுக்கு அடைக்கலம் கொடுக்கிறாள். சாப்பாட்டை நீட்டுகிறாள். அவனுக்காக வேலை தேடுகிறாள். இப்பொழுது அதே நம்பிக்கையில் பணத்தைக் கடனாக தருவதற்கு அவள் முன்வந்திருக்கிறாள்.

கனகசபை விழுமிய உணர்ச்சியின் உச்சக் கட்டத்தில் மிதந்தான். அவனுக்கு நெஞ்செல்லாம் குளிர்ந்தது. இப்படியும் ஒரு பெண்ணா என வியந்தான்.

யோகமலர் மீது அவன் வைத்திருந்த அன்பு பெருகுகிறது. அதில் சிறிதளவு காதல் இணைவது போன்ற உணர்வை அவன் பெறுகின்றான். அவள் தனக்குரியவள் என்ற எண்ணம் அவனுள் மேலோங்குகிறது. ஆனால், அப்படி நினைப்பது தவறு என்று அவன் உள்மனம் அவனைக் குத்திக் காட்டுகின்றது. தீய நோக்குடன், எண்ணத்துடன் அவளை நோக்குவது தவறு என்று உணர்கிறான். எதுவித உறவும் கற்பிக்க முடியாத நிலையில் உள்ளவளை அசிங்கமான கோணத்தில் நோக்குவதை அறவே

விட்டொழிக்க வேண்டும் என்று நினைக்கிறான்.

"இப்ப வேண்டாம். தேவைப்பட்டால் கேக்கிறன்" என்று கனகசபை சமாளித்தான்.

"ஏன் என்னட்டை காசு எடுக்கக் கூடாது எண்டு நினைக்கிறீங்களா?"

"இ...... இ...... இல்லை...... இன்னும் கொஞ்ச நாளைக்குப் பிறகு அனுப்பினால் போதும் எண்டு நினைக்கிறன்."

"சரி......... கனகு, எதுக்கும் உங்கட மனதை தைரியமா வைச்சிருங்க. வேலை இல்லையே எண்டதுக்காக தைரியத்தை இழந்திடாதீங்க. நான் எப்படியும் ஒரு வேலை எடுத்துத்தாறன். 'பொஸ்'ஸை இறுக்கிப் பிடிக்கிறன்."

யோகமலரின் வார்த்தைகள் தான் அவன் மனதை நெருடிவிட்டது. நெடு நேரமாக அதைச் சுற்றிச் சுற்றி வந்தன. அவள் தன் மீது வைத்திருக்கும் அன்பினை நினைத்து புளகாங்கிதம் அடைந்தான். இப்படியும் ஒருத்தியா? என்று வியந்தான்.

அவள் செய்யும் உதவிகளுக்கு எவ்வாறு கைமாறு செய்வது?

கனகசபையின் யோசனை நீண்டது. ஆனால், எதுவித முடிவும் மனதுக்குள் புகவில்லை.

மறு நாள் எழுந்தபோது கனகசபை புத்துணர்வுடன் திகழ்ந்தான். அவன் மனம் ஒரு நிலையில் இருந்தது. அது எல்லா விதத்திலும் தெளிந்திருந்தது. கொழும்பில் தங்கியிருந்து ஒரு தொழிலைத் தேடுவது என தீர்மானித்தான்.

காலை ஏழு மணிக்கே யோகமலர் தனது அலுவலகத்திற்குச் சென்றாள்.

"கனகு, நான் இண்டைக்கு பின்னேரம் நாலு மணிக்கே வந்துவிடுவன். அந்தநேரம் நீங்களும் ஒரு இடமும் போகாதேங்கோ" என்கிறாள் அவள்.

"என்ன விசேஷம்?"

அவள் முகத்தில் மலர்ச்சி ஒன்று பிரசவித்தது. புன்னகையை வெளிவிட்டவள், "பின்னேரம் சொல்றேனே" என்றாள்.

· யோகமலர் போய்விட்டாள்.

கனகசபை வீட்டிலிருந்து வெளியேறினான். வழியில் உபாலி தென்படுகிறான்.

"ஐயா....." என முகமலர்ச்சியுடன் கனகசபையை நெருங்கினான் உபாலி. "ஐயா, இப்ப எங்க வேலை செய்யுறீங்க."

"ஒரு இடத்திலையும் இல்லை. வேலை தேடிக் களைச்சு போயிட்டுது. ஊருக்கு திரும்பிப் போகலாமா எண்டு கூட நினைக்கிறன்."

"நீங்க ஊருக்குப் போறது தான் நல்லது. இஞ்ச இப்போதைக்கு வேலை எடுக்கிறது மிச்சம் கஷ்டம். ஊருக்குப் போனால் கஞ்சியைக் குடிச்சாவது குடும்பத்தோட ஒன்னா இருக்கலாம்."

"அப்படித் தான் நானும் நினைக்கிறன்."

"ஐயா, நீங்கள் ரண்மெனிக்கேயின்ர வீட்டிலை இருக்கக்கில 'பொலிஸ்'காரங்கள் வந்து பிடிச்சதா கேள்விப்பட்டன். அந்த நேரம் நான் பதுளைக்கு போயிருந்தன். இண்டைக்கு காலையில தான் வந்தன். நம்மட நோனா தான் சொன்னா."

"அதெல்லாம் என்ர கர்மவினை. என்ன செய்யுறது?"

"ஐயாவுக்கு எந்த நேரமும் 'பொலிஸில' கிடக்கிறது தான் விதி" என்ற உபாலி சிரித்தான். பின், "ஐயா, இப்ப எங்க இருக்கிறீங்க?" என்று கேட்டான்.

"உங்கட பன்சாலைக்கு பக்கத்திலை ஒரு ஜம்பு மரம் இருக்குது தானே?

"ஆமா."

"அதுக்கு பின்னால ஒரு வீடு."

"ஓ! ஒரு தமிழ் பொம்பிளை இருக்குது. ரண்டு ஊமைப் பிள்ளைங்க. புருசன் பெரிய குடிகாரன்."

"அதே வீடு தான்."

உபாலி பேசுவதை நிறுத்தினான். கனகசபையை ஆழமாக நோக்கினான். "ஐயா, அந்த மனுசன் ஒரு ஜாதியான ஆள். பெஞ்சாதியை அடி, அடின்னு அடிப்பான். பெரிய சந்தேகப் பேர்வழியாம்."

"ஓமோம். நான் ஊருக்கு போறதுக்கு அதுவும் ஒரு காரணம். நான் அங்கை இருக்கிறதால அந்த அம்மான்ர புருஷனுக்கு இருக்கிற சந்தேகம் இன்னும் கூடப்போகுது."

"அது நெசம் தான்."

பிற்பகல் மூன்று மணி வரை வேலை தேடி கனகசபை அலைந்தான். ஆனால், அவன் முயற்சி வெற்றி பெறவில்லை. ஏமாற்றத்துடன் வீடு திரும்பினான்.

**மா**லை பிறந்தது.

சொன்னது போன்று, நான்கு மணி போல் யோகமலர் வந்தாள். அவள் ஒரு 'பார்சலைத்' தன்னுடன் கொண்டு வந்திருந்தாள். அதை மேசையில் வைத்துவிட்டு, நேரே 'பாத்ரூம்'க்குச் சென்றாள்.

நன்கு குளித்துவிட்டு சேலையை அணிந்தபடி வந்தாள். அவளிடமிருந்து 'பவுடரின்' நறுமணம் வீசியது. முகத்தில் நிறைந்த பொலிவு. கண்களில் நிறைய மகிழ்ச்சி.

யோகமலர் 'பார்சலை' திறந்தாள். ஒரு 'கேக்' பெட்டி!

"ஓ! உங்கட 'பேர்த் டேயா'!" என கனகசபை மகிழ்ச்சியில் கூவினான்.

"அதே தான்." அவள் பற்கள் தெரியச் சிரித்தாள்.

"உங்களுக்கு எனது பிறந்த நாள் வாழ்த்துக்கள்."

"'தாங்ஸ்'."

"கேக்கக் கூடாது தான். கேக்கிறன். உங்களுக்கு இண்டைக்கு எத்தனை வயசு?"

"எத்தனை எண்டு நினைக்கிறியள்?"

"நாற்பது."

"அச்சொட்டாக சொல்லிப் போட்டியள். நாற்பது தான். அதால தான் இந்த முறை இதை இந்த மாதிரி கொண்டாடுவோம் எண்டு நினைச்சன்."

"போன முறை கொண்டாடினீங்களா?"

"இல்லை. கலியாணம் முடிச்சாபிறகு ஒரே ஒரு 'பேர்த் டே' தான் கொண்டாடினன். என்ர 'பேர்த் டே' எப்ப வருது எண்டு அவருக்கு ஒரு நாளுமே ஞாபகத்திற்கு வாறதில்லை. அதைப்பற்றி அக்கறைப்படுறதும் இல்லை."

"உங்களுக்கு நான் ஒரு பரிசு தரவேணும். என்னத்தை தருவது எண்டே தெரிய இல்லை."

அவள் மலர்ச்சியுடன் புன்னகைத்தாள். "ஒண்டுமே வேண்டாம். உங்கட அன்பு ஒண்டே போதும். அதில மாசு, மரு இல்லாட்டால் எனக்கு நல்ல சந்தோசம்" என்றவளின் கண்கள் கலங்கின.

கனகசபை இதைச் சற்றேனும் எதிர்பார்க்கவில்லை. அவள் நிலை அவனுள் துயரத்தை உட்தள்ளியது. அவன் கண்களும் கலங்கின.

அக் கணமே அவன் உள்ளம் தெளிந்துவிடுகிறது. அதில் படிந்திருந்த மெல்லிய கறை அகன்றுவிடுகின்றது. உண்மையான அன்பு மனதினுள் முகாமிடுகிறது. யோகமலரை பாச உணர்வுடன் நோக்குகிறான். "உங்களுக்கு ஒரு அண்ணன் போல நான் இருப்பன்" என்று அவன் சொல்லும் போதே அவன் நாதழுதழுக்கிறது

அவளின் நீர் வடிந்த கண்களில் மகிழ்ச்சி பூக்கிறது. இதழ்களில் மலர்ச்சியான புன்னகை. நன்றி உணர்வுடன் அவனை நோக்குகிறாள்.

சில வினாடிகளாக அவனையே பார்த்தபடி நின்றாள்.

"உண்மையிலேயே நான் அதிர்ஷ்டசாலி தான்....." அவள் அங்கிருந்து செல்கிறாள். சிறிது நேரத்தில் பிள்ளைகளுடன்

அங்கு வந்தாள்.

யோகமலர் கத்தியொன்றை எடுத்து 'கேக்'கை வெட்ட முயல்கிறாள்.

வாசல் பக்கம் நிழலொன்று தெரிகிறது. இருவரது பார்வைகளும் ஏககாலத்தில் வெளியே படர்கின்றன.

ராமகிருஷ்ணன் நிற்கிறான். கண்கள் சிவந்து, தலைமயிர் குழம்பி......

"யோகம்......" என்று அடித்தொண்டையில் கத்தினான். "இஞ்சை வாடி......"

யோகமலர் அசையவில்லை.

"வாடி இஞ்சை."

யோகமலர் பேசாமல் நின்றாள்.

"வாடி......"

அவன் முன்னேறுகிறான். அவளை நெருங்குகிறான்.

"வரச்சொன்னால் வர ஏலாதா?" என்றவன் ஒரு காலைத் தூக்கி அவள் வயிற்றில் உதைய, "அய்யோ அம்மா" என அலறியவண்ணம் வயிற்றைப் பிடிக்கிறாள்.

கனகசபை ஒன்றுமே செய்யத் தோன்றாமல் நிற்கிறான்.

"ஊமைப் பிள்ளையளைப் பெத்துப் போட்டு, இப்ப......... படுக்கிறியா?" என்று கேட்ட ராமகிருஷ்ணன் மீண்டும் உதைக்கிறான்.

"அய்யோ" என்று கத்தியபடி யோகமலர் கீழே சுருண்டு விழுந்தாள்.

கனகசபையின் இரத்தம் சூடேறுகிறது.

யோகமலரை நோக்கி ராமகிருஷ்ணன் குனிந்தான். "ஒழும்படி..... என்னடி நடிக்கிறியா? ஒழும்படி என் பத்தினியே."

வலி தாங்க முடியாமல் யோகமலர் முக்கிமுனகினாள்.

"ஒழும்படி......"

"என்னை ஒண்டும் செய்யாதீங்க......"

"அப்படி எண்டால் ஒழும்படி." ராமகிருஷ்ணன் காலைத் தூக்குகிறான்.

கனகசபையினால் தனது கோப உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆத்திரத்தின் உச்சிக்கே சென்றவன், "டேய்" என்று கத்தியவண்ணம் ராமகிருஷ்ணனின் வயிற்றில் உதைத்தான். வேகமான உதை.

"அய்யோ." ராமகிருஷ்ணன் கீழே சரிந்தான். அவனால் எழமுடியவில்லை.

"பொம்பளையிட்ட உன்ர வீரத்தைக் காட்டுறியோ?"

கனகசபை மிருகமாக மாறிவிட்டான்.

அந்த 'ஹோல்' முழுவதிலும் ராமகிருஷ்ணன் உருண்டு புரண்டான்.

ராமகிருஷ்ணன் இரத்த வெள்ளத்தில் தோய்ந்தான்.

அந்த சேரிப்புறத்தில் இருந்த பலரும் அங்கு படை எடுத்துவிட்டனர்.

"'பொலிஸைக்' கூப்பிடு........" என்று ஒரு குரல்.

நுளம்புகள் சுற்றிச் சுற்றி வந்து கனகசபையை குத்திக் குதறின.

கரப்பொத்தான்கள் அந்தச் சிறைக்கூடம் தமது ராஜ்யமே என்ற எண்ணத்தில் சுதந்திரமாகப் பறந்து திரிந்தன. கனகசபையை வெகு ஆயாசமாக மேய்ந்தன.

சிறுநீரின் நாற்றம் பரவலாக வீசியது.

காலுக்குள் நீட்டி நிமிர்ந்து படுத்திருந்த 'குடு'காரன் ஒருவன் எதையோ சொல்லிப் புலம்பினான்.

வியர்வை ஆறாகப் பெருகியது.

கனகசபை எந்த மறுதலை உணர்ச்சியையும் அடைய வில்லை. உணர்ச்சியற்றவனாக......

"கனகு, உனக்கு ஏன் இந்த தேவை இல்லாத வேலை? அவள்ன்ர புருசன் அவளை அடிச்சால் நீ என்னத்துக்கு அவனை அடிக்க வேணும்? அவன் ரண்டு நாள் ஆசுபத்திரியிலை கிடந்தான். நல்ல வேளை சாக இல்லை. செத்திருந்தால்........ தப்பிட்டாய்........ சொல்லன்ரா அவனை ஏன் அடிச்சனி? அவள் உனக்கு அடிக்கச் சொன்னவளோ? இல்லாட்டி உன்ர கொப்பருக்கு வாற மாதிரி உனக்கும் மோட்டுக் குணம் வந்து அவனை அடிச்சிட்டியோ?"

தர்மலிங்கம் கேள்விகளாகக் கேட்கிறான்.

கனகசபை பதில் கூற இல்லை. மௌனத்தின் தற்குறியாகக் கம்பிகளைப் பிடித்தபடி நின்றான்.

"இனி வழக்கு, விசாரணை....... எப்படியும் ரண்டு வருசம் உள்ளை தள்ளுவாங்கள்....... எல்லாம் ஆருக்காக செய்தனி? அவளுக்கோ? அவளுக்கு நீ ஆர்?"


கனகசபை தொடர்ந்தும் மௌனம் சாதித்தான்.

எதையோ முணுமுணுத்தவண்ணம் தர்மலிங்கம் சென்றுவிட்டான்.

"தொரே, நீங்கள் அந்த அம்மான்ர தொரேயை அடிச்சதிலை அந்த தொரே நல்லா திருந்திட்டாரு. இப்ப அந்த வீட்டிலை அம்மாவோடை இருக்கிறாரு. குடிக்கிறதே இல்லையாம்."

காலையில் சாய்பு நானா கூறியவை கனகசபையின் மனதில் நிறைய நேரமாக வலம் வந்தன. ❑❑❑❑





# கனகு

சோ. ராமேஸ்வரன்

ISBN - 955 -20-6195-4

விலை 250/=

வெளியீடு :
எஸ். கொடகே சஹற சகோதரயோ
அரச விருது பெற்ற நூல் வெளியீட்டாளர்
675, மருதானை வீதி, கொழும்பு 10.
தொலைபேசி : 685369. 074-614904
ஈமெயில் : godagee @slt.lk
வெப் : www.god com